பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

29 ஒகஸ்ட் - 04 செப்ரெம்பர் 2018

வாரஇதழ்

Raja Bojun

Sri Lankan Buffet

Liberty Arcade,
No 282, R.A.De Mel Mawatha Colombo 03.
Tel. 4 71 61 71 / 2577097-8 web : rajabojun.lk



## ஈழப்போரும் கருணாநிதியும்

## நல்லாட்சிக்கு துடக்குக் கழிப்பு

## "தமிழர் நிலங்கள் பறிபோகின்றன"

## தல்செவன காங்கேசன்துறையின் மறுபெயரா?

## தொண்டமான் பங்களாவின் மறுபக்கம்

சிறந்த பாஸ் இற்கு சிறந்த பிரஷ் ஒன்று

இலங்கையில் முதன் முறையாக

இத்தாலி தொழில்நுட்பத்தில் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டு மிருக உரோமங்கள் இல்லாமல் எங்கள் நாட்டிற்கு ஏற்ற விதத்தில் தயாரிக்கப்படும் சிறந்த பிரஷ் ஒன்றை மல்டிலெக் உங்களுக்கு அறிமுகப்படுத்துவது உங்களை வணிகத்தில் நிபுணராக்கும் நோக்குடன்.

சுவரிற்கு பலகைகளுக்கு இரும்பிற்கு மற்றும் எந்தவொரு மேற்பரப்பிற்கும் இலகுவாக பெயின்டினை பூசுவதற்கு தங்க நிற மற்றும் கறுப்பு நிறத்திலான இரண்டு பிரஷ்கள் இப்போது உங்களுக்கு.

1/2 தொடக்கம் 6 அங்குலம் வரை எந்தவொரு அளவிலும் கொள்வனவு செய்யலாம்.

இலங்கையின் தயாரிப்பு

விலை , ரூ.150 தொடக்கம்

HOTLINE 077 2222 555

Multilac

www.multilac.com

எதிரொலி
Ethiroli
29 ஒகஸ்ட் - செப்.04- 2018

# தமிழர் நிலங்கள் பறிபோகின்றன!

■ நேர்காணல்: ஔண்யன்

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போது உள்ள ஒரேயொரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற சிறப்பு உங்களுக்குண்டு. எனவே போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற உங்கள் எம்.பி பதவி மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?

**பதில்:** போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற இலங்கை அரசாங்கத்தின் குறைந்தளவான நிதியும் முறைப்படுத்தாத வெளிநாட்டு உள்நாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், தனித்தனியாக உறவினர் நண்பர்களுக்காக புலம்பெயர்ந்த உறவுகளும் முயற்சித்து வருகின்றன. இவை யாவும் பாதிக்கப்பட்ட மக்களின் அபிலாசனைகளைத் தீர்க்கக் கூடியதாக இல்லை. நான் அரசியலுக்குள் நுழைந்தது மேற்சொன்ன பின்னணியிலேயே.

நான் அரசியலுக்குள் வரமுன்னரே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுவலுவுள்ளோர், விதவைகள், பெண்கள் என்போரின் வாழ்வாதார முன்னேற்றத் துக்கா "ஒளிரும் வாழ்வு" என்ற அமைப்பை ஸ்தாபித்தேன். அரசியல் பிரவேசத்தின் பின் புதுக்குடியிருப்பிலும் மாந்தை கிழக்கிலும் ஒட்டிசுட்டானிலும் ஆரம்பித்தேன். துணுக்காயிலும் புதுக்குடியிருப்பிலும் ஒளிரும் வாழ்வு இலக்கை நோக்கிப் பயணிக்கின்றது.

நான் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அரசுக்கு பல முன்மொழிவுகள் தயாரித்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். சில முன் மொழிவுகள் அரசால் ஏற்கப்பட்டுள்ளன. உதாரணமாக ஒட்டுசுட்டானில் பெண்கள் கமக்கார அமைப்புக்கு விசிறல் நீர்ப்பாசனத்துக்கு 51 பேருக்கு 51 இலட்சம் ஒழுங்கு செய்து கொடுத்தேன்.

என்னிடம் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் கடிதமூலமும் வரும் கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி வெளிநாட்டு உறவுகளோடு தொடர்புபடுத்தி வாழ்வாதார உதவிகள் பிள்ளைகளுக்கான கல்வி அபிவிருத்திக்கான நிதி உதவி மற்றும் மருத்துவ உதவிகள் செய்து வருகிறேன். மேலும் உயர்கல்வி பயிலும் பிள்ளைகளின் கல்வித்தடைகளை அமைச்சுடன் பேசி மருத்துவ பீடம், பொறியியல் பீடம் செல்லத் தகுதியிருந்தும் வாய்ப்பில்லாத சந்தர்ப்பத்தில் தலையிட்டு தீர்த்து வருகிறேன். மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளக்கும் அரச திணைக்களங்களின் வேலை வாய்ப்புக்களையும் அமைச்சுடன் பேசி ஏற்படுத்தி கொடுத்து வருகிறேன்.

**கேள்வி:** போரின் தந்த வலியின் வடுவாக ஒரு காலை இழந்த பின்னும்,ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக எழுச்சி பெற்று 'மாற்றுத்திறன்' வாழ்வின் உயர்வுக்கு ஒரு தடையல்ல என்பதை நிரூபித்துள்ளீர்கள். இந்த மனோபலம் எப்படி வாய்த்தது?

**பதில்:** துணிவே துணை ,வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற தமிழர் பண்பாட்டில் அசைக்கமுடியாத முதுமொழிகளை நான் படித்திருக்கிறேன். கால் உடைந்த வேளையில் கனவும் உடைந்தது என்று தான் எண்ணினேண். ஆனால் அதுவே ஆக்ரோசமாக என்னை எழவும் வைத்தது. என்போன்ற அங்கங்களை இழந்தவர்கள், கணவனை இழந்த விதவைகள், அனாதைகள் நான் அதிகாரியாக இருந்தாலும் தங்களைப்போல் பாதிக்கப்பட்டவர் என தங்கள் சுமைகளை எனது ஓய்வு நேரங்களில் கொட்டித்தீர்ப்பார்கள். மாலை வேளைகளிலும் வீட்டுக்கு வருவார்கள். இந்தப் பின்னணியிலேயே நான் அம்மக்களை ஒன்று திரட்டினேன. அமைப்புக்களை உருவாக்கினேன். ஒளிரும் வாழ்வு அமைப்பின் விரைவான வளர்ச்சி கண்ட வல்லவர்கள் பல தடைகளைப் போட்டார்கள். அவ் தடைகளால் துவண்டுபோன நான் வெறுமனே ஒரு தீர்மானங்களை நினைவேற்றும் அதிகாரியாக மட்டும் இருந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு எல்லைக்கு அப்பால் நகரமுடியாது என்பதை உணர்ந்தேன். அதன் பின்னணியிலே நான் அரசியலுக்குள் புகுந்து கொள்கை வகுப்பாளர்களில் ஒருவராக வரவேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன். எனது கணவர் பிள்ளைகளது அசைக்க முடியாத ஒத்துழைப்பு, பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவு, தமிழ் அரசுக் கட்சியின் அழைப்பு என்பனவே எனது மனோ பலத்தை மேலும் அதிகரித்தன.

**கேள்வி:** போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர் என்ற வகையில் போர் தின்ற மக்களின் தேவைகளையும், அவற்றைத் தீர்க்கக் கூடிய வழிகளையும் உணர்ந்திருப்பீர்கள். அப்படி இப்போதும் மக்களுக்குத் தேவையாக உள்ளவை எவை? அவற்றை எப்படித் தீர்க்கலாம் என எண்ணுகிறீர்கள்?

**பதில்:** நான் ஏற்கனவே கூறியது போன்று அரசாங்கம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், வெளிநாட்டு உறவுகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்தளவான உதவிகள் செய்துள்ளார்கள். ஆனால் அவை சரியாக மக்களைச் சென்றடையவில்லை. "ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை" என்று கூறுபவர்களுக்கு அரசும் சரி தன்னார்வ தொன்டு 'நிறுவனங்களும் மீண்டும் மீண்டும் வழங்கி வருகின்றன. அவர்கள் முயற்சி எதுவும் செய்யாமல், தருபவற்றை விற்று செலவு செய்து விட்டு மீண்டும் கையேந்துகிறார்கள் .ஒரு வகையில் இதுவே அவர்களின் தொழிலாகவும் கொள்கிறார்கள்.



## சாந்தி எம்.பி. ஆதங்கம்

உண்மையான முயற்சியாளனுக்கு உதவிகள் சென்றடைவதில்லை. இருந்தும் சொற்ப உதவிகளைப் பெற்ற பலர் தம் சொந்த முயற்சியால் நிறையவே முன்னேறி உள்ளார்கள். மாற்று வலுவுள்ளோர் பலர் கனவிலும் நினைக்க முடியாத கடுமையான வேலைகளைச் செய்கிறார்கள். " நாம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டோம் எமக்கு ஒன்றுமில்லை" என இருக்காது கிடைத்தவற்றை கொண்டு அயராது உழைத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதே எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

நான் எனது வலையமைப்பில் தேவைப்பாடு உள்ள மக்களின் முழு விபரங்களைப் பெற்று, அவர்களின் கடந்த கால முயற்சி அவர்களின் முயற்சிக்கு தடையாக உள்ள தேவைகள் அவற்றை வழங்குவதால் அவர்களின் வாழ்வாதாரம் மேலும் முன்னேறுமா? என்ற பல்வேறு விடயங்களைப் பகுப்பாய்வு செய்தே உதவிகளை ஒழுங்கமைத்து வருகிறேன்.

**கேள்வி:** தேசியப் பட்டியல் மூலம் புதியவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அண்மையில் எழுந்தது. அப்படி உங்கள் பதவியை விட்டுத் தரச் சொன்னால் என்ன செய்வீர்கள்?

**பதில்:** கட்சியின் தலைமை எடுக்கும் எவ்வகையான முடிவுக்கும் கட்டுப்படவேண்டியது எனது பொறுப்பு.

**கேள்வி:** தேசியப் பட்டியல் மூலம் எம்.பி பதவியை வழங்கும் போதும் சுழற்சி முறையில் தான் இந்தப் பதவி என்று உங்களுக்கு எழுத்து மூலமோ அல்லது வாய்மொழி மூலமோ உங்களுக்கு கட்சி அறிவித்திருக்கிறதா?

**பதில்:** அப்படி எதுவும் இல்லை

**கேள்வி:** முல்லைத்தீவில் மீனவர்கள் மீதான அடக்கு முறைகள் உக்கிரமடைந்துள்ளன. அதன் உச்சமாக நாயாற்றில் தமிழ் மீனவர்களின் வாடிகள் இரவோடிரவாக எரித்து அழிக்கப்பட்டுள்ளன. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அந்த மீனவர்களின் துன்பத்தை போக்க என்ன வகையிலான செயற்பாட்டை மேற்கொள்ளப்போகிறீர்கள்?

**பதில்:** ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மறுத்து வரும் அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நெருங்கி வருவதாகவே நான் கருதுகிறேன். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது அரசு ஒரு இனத்துக்குப் பக்கச் சார்பாக செயற்படும் சந்தர்ப்பத்தில் மக்களால் முன் எடுக்கப்படும் போராட்டங்களை வலுச்சேர்க்கும் வகையில் கட்சியும் பங்கெடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் நாம் பல போராட்டங்களில் பங்கெடுத்து வருகிறோம். நாயாறு மீனவர் போராட்டத்திலும் பங்குகொண்டேன். எட்டு வாடிகள் எரிக்கப்பட்டாலும் அந்த மக்களின் போராட்டத்தால் இப்போது அப்பகுதியில் இருந்த பெரும்பான்மை இனத்தவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் .அவர்களின் வாடிகளையும் அப்புறப்படுத்துவதற்கு நீதி மன்றத் தீர்ப்பை மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

**கேள்வி:** முல்லைத்தீவில் சில அரச சார்பான அரசியல்வாதிகளின் ஆதரவோடு காடுகளை அழித்தி திட்டமிட்ட குடியேற்றங்கள் நிகழ்வதாகக் குற்றச்சாட்டுக்கள் வெளியாகியிருந்தன. இப்போதும் அந்தக் குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்கின்றனவா?

**பதில்:** ஆம். சில அரசியல்வாதிகள் அரசில் தமக்கிருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி அரச காணியில் குடியேற்றங்களை மேற்கொள்ள எத்தனித்தார்கள். அதனை மக்கள் தடுத்தார்கள்.அதற்கு நாமும் உறுதுணையாக இருந்தோம். தற்போது மகாவலி வலயம் என்ற போர்வையில் மாகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரங்களை வைத்து தமிழ் மக்களின் காணிகளை அபகரிப்பதோடு, அரச காணிகளிலும் இன விகிதாசார அடிப்படையில் குடியேற்றம் செய்ய எத்தனிக்கிறார்கள்.

இதனால் முல்லைத்தீவில் கொக்கிளாய் ,கொக்குத்தொடுவாய் உட்பட அதனோடு அண்டிய இடங்களிலும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவின் கிழக்குப்பகுதியிலும் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பறிபோகும் ஆபத்தில் சிக்கியுள்ளன. இதனை எதிர்த்து, தீர்வு கிடைக்கும் வரை பாரிய அளவிலான மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம். இதற்கு அனைத்து மக்களும் அணிதிரள்வதுடன் அரசியல் வாதிகளும் ஊடகங்களும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்.

**கேள்வி:** மக்களின் காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டங்களை நடத்திவரும் சூழலில்-நீங்கள் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி-துணுக்காயில் உங்கள் மகனின் பேரில் 10 ஏக்கர் காணியைப் பெற முயன்றதாக ஒரு குற்றச்சாட்டு எழுந்ததே. அதைப் பற்றி..?

**பதில்:** இந்தக் கேள்வி சற்று குழப்பமானது. நான் எனது அதிகாரத்தை பயன்படுத்தியதை தங்கள் ஊடகத்தின் மூலம் காண்பியுங்கள் அல்லது உறுதிப்படுத்துங்கள். இருப்பினும் அந்த 10 ஏக்கர் தொடர்பிலான விளக்கத்தை கூறவேண்டியவளாக தற்போது நான் இருக்கிறேன். இக் காணி மல்லாவி பாண்டியங்குள வீதியில் பாலியாற்றங் கரையில் உள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்காலத்தில்(1970-1977) உற்பத்திச் சமர் என்ற சுலோகத்தோடு இறக்குமதி தடைகள் விதிக்கப்பட்டு உள்ளூர் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்ட நேரத்தில் பாரதி நகரில் உள்ள சிலர் எனது கணவனின் தகப்பனார் உட்பட மேற் குறித்த காணியில் காடுகளை துப்பரவு செய்து உப உணவுப்பயிர் செய்கையில் ஈடுபட்டனர்.

பின்னர் வந்த அரசு திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின் பற்றியதால் நட்டப்பட்ட விவசாயிகள் நிலங்களை கைவிட்டனர்.

1986ஆம் ஆண்டுக்கு பின்னர் எனது கணவர் தகப்பனாரின் காணியை மீண்டும் துப்பரவு செய்து வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டார். பின்னர் அக் காணிக்கு பக்கத்தில் உள்ள ஏனையவர் துப்பரவு செய்த காணிகளையும் விலை கொடுத்து வாங்கி வெங்காயம் மிளகாய் போன்ற உப உணவுப்பயிர்களை பெரிய அளவில் மேற் கொண்டு வந்துள்ளார். அக் காலத்தில் காணி உரிமம் தொடர்பில் அதிக கவணம் செலுத்தப்பட வில்லை நான் 1994ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் அவரை திருமணம் செய்தேன்.

1998 வரை அந்தக் காணிக்கு உரிமம் பெற முயற்சிக்கவில்லை அதன் பின்னர் முயற்சித்த போது எனக்கும் அவருக்கும் அரச காணி இருந்ததால் மாற்றும் முயற்சி கைவிடப்பட்டது.

மீளக்குடியமவர்வின் பின் அந்த காணியில் வெங்காய செய்கை தொடர்ந்து நட்டத்தை ஏற்படுத்தியதால் அந்த நிலம் நெற்செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டதால் விதை நெல் ஏற்றுநீர்ப்பாசன மூலம் மேற்கொள்ளப் பட்டு அமோக விளைச்சல் பெறப்பட்டது.

(05 ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# திடீர் ஞானம்

“சோறா சுதந்திரமா என்று கேள்வி எழுந்தால் முதலில் நான் மக்களுக்கு சோறுதான் (அபிவிருத்தி) முக்கியம் என்று சொல்வேன்” என்பது ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பல தசாப்தங்களாக திரும்பத் திரும்பச் சொல்லி வரும் புளித்துப்போன பஞ்ச் டயலொக். இதனை தமிழத் தேசிய வழியில் பயணிப்பவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். சோற்றுக்காக மக்களின் உரிமைகளை அடகு வைக்கும் துரோகி என்று டக்ளஸை சாடினார்கள். அப்படி டக்ளஸ் மீது வசை மாரி பொழிந்த அதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போது “மக்களுக்கு நிரந்தரத் தீர்வைவிட அபிவிருத்தியே முக்கியம்” என்று தாளத்தை மாற்றிப்போடத் தொடங்கியிருக்கிறார்கள்.


வடக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தைப் புறக்கணிக்குமாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தார். கூடவே அதனை கடித வடிவில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு அனுப்பியிருந்தார்.

“நாம் எமது ஒற்றுமையைக் காட்ட அரசியல் தீர்வை வலியுறுத்த இது ஒரு நல்ல சந்தர்ப்பம். கூட்டத்தில் கலந்துகொள்ளாமை அரசியல் தீர்வின் அத்தியாவசியத்தை வலியுறுத்தும். பொருளாதார அபிவிருத்திக்கு அரசாங்கம் கொடுக்கும் முக்கியத்துவத்தை அரசியல் தீர்வுக்குக் கொடுக்கவில்லை என்பதை உலகறியச் செய்யும்.

சேர்ந்து தமிழ் பிரதிநிதிகள் இயங்கினால் எமது ஒற்றுமை வெளிப்படும். நாங்கள் அரசாங்கத்தால் வீசப்படும் எலும்புத் துண்டுகளுக்காக நாக்கை நீட்டிக் கொண்டு ஓடிச் செல்கின்ற இனமல்ல என்பதை நாம் சேர்ந்து வலியுறுத்தலாம்.” என்பது முதலமைச்சரின் எண்ணம். அத்தோடு குறித்த செயலணியின் முதலாவது கூட்டம் நடைபெற்றபோது, அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. எனவே அதனைக் கண்டித்து, முதலமைச்சர் விக்னேஸ்வரன் முதலாவது செயலணிக் கூட்டத்தையும் புறக்கணித்திருந்தார். அந்தப் புறக்கணிப்பின் விளைவாக இப்போது, இரண்டாவது கூட்டத்துக்கு கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் தான் முதலமைச்சர் விக்னேஸ்வரன், கூட்டத்தைப் புறக்கணிப்பதன் மூலம் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற அரசுக்கு அழுத்தத்தைக்கொடுக்கலாம் என்ற யோசனையை முன்வைத்திருந்தார்.

ஆனால், அதனை கூட்டமைப்பு எம்.பிக்கள் ஏற்பதாக இல்லை. அவர்கள் அவசரஅவசரமாக ஒன்றுகூடி “அபிவிருத்திதான் முக்கியம்” என்று முடிவெடுத்திருக்கிறார்கள். வேடிக்கை என்னவென்றால் போர் ஓய்வுக்கு வந்த பொழுதில் மக்கள் உடமைகள் ஏதுமின்றி நடுத்தெருவில் நின்றிருந்தபோதுகூட, கூட்டமைப்பினர் அபிவிருத்தியைவிட நிரந்தரத்தீர்வே அவசியம் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தனர். ஆனால், அப்போது மக்களுக்கு அபிவிருத்தி அவசியமாக இருந்தது. ஒருவாய் சோற்றுக்குக் கூட வழியற்றவர்களாக இருந்தார்கள். அவர்களது உறைவிடத்தையும் வாழ்வாதாரத்தையும் உழைக்கும் ஆண்களையும் போர் தின்றிருந்தது. எனவே யாராவது ஏதேனும் உதவினால்தான் வாழ்வைக் கொண்டு செல்ல முடியும் என்ற நிலை அந்த மக்களுக்கு இருந்தது. அப்போதெல்லாம் கூட்டமைப்பினருக்கு மக்களின் அபிவிருத்தி முதன்மையாகத் தெரியவில்லை. இப்போதுமட்டும் – மக்கள் ஓரளவுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்த பின்னர் – தீர்வைவிட அபிவிருத்தியே முக்கியம் என்ற சுடலை ஞானம் கூட்டமைப்பினருக்கு பிறந்திருக்கிறது. இன்னும் இதேபோன்று என்னென்ன காலம் கடந்த ஞானம் கூட்டமைப்பினருக்குப் பிறக்கப்போகின்றதோ தெரியவில்லை.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”



# ஈழப் போரும் கருணாநிதியும்

● அவதானி

தி.மு.கவைப்பொறுத்தவரை ரெலோ சார்பாகச் செயற்பட்டாலும் சிலர் தனிப்பட்ட முறையில் புலிகளுக்குச் சார்பாகவே இயங்கினர். அவர்களில் வைகோ, ஈரோடு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், சுப.வீரபாண்டியன் ஆகியோர் முக்கியமானவர்கள். இதனால் வைகோவும் சுப்புலட்சுமியும் உட்கட்சி நெருக்கடிகள் பலவற்றைச் சந்தித்தனர். இந்தியப் படைகளுடனான யுத்தம் ஆரம்பித்ததும் இந்த யுத்தத்தைக் கண்டித்து பல்வேறு இடங்களில் கூட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் தி.மு.க சார்பில் ஏற்பாடாயிருந்தன. இந்த விடயத்தில் வைகோ மிக ஈடுபாட்டுடன் இருந்தார். உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வந்த தூரதர்ஷன் தொலைக்காட்சிக்கு தமது எதிர்ப்பை வெளியிடும் வகையில் குறியீடாகப் பகிரங்கக் கூட்டங்களில் சுத்தியலால் தொலைக் காட்சிப் பெட்டிகளை உடைத்து வந்தார். இந்தக் கால கட்டத்தில் தான் எம்.ஜி.ஆர். மறைந்தார். இந்தத் தகவல் முதலில் கருணாநிதிக்கே தெரியப்படுத்தப் பட்டதாக செய்திகள் வெளியாகின.

“எனது நண்பர் எம்.ஜி.ஆர். என்று கருணாநிதி தெரிவித்தார். எம்.ஜி.ஆருக்கு அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளை புலிகள் தமிழகமெங்கும் ஒட்டினர். அதில் புலிகளின் தலைவர் பிரபாகரனும் எமி.ஜி.ஆரும் இருக்கும் புகைப்படம் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து காரணம் சொல்லப் படாமல் கருணாநிதி கலந்துகொள்ள விருந்த அமைதிப் படைக்கெதிரான நடவடிக்கைகள் ரத்துச்செய்யப்பட்டன. எனினும் வைகோ போன்றோர் இந்த விடயத்தில் தொடர்ந்து ஆர்வமாக இருந்தனர்.

8.08.88 அன்று அதிகாலை 12.15 மணியளவில் புலிகளின் பணிமனையுடன் இணைந்த வீடுகளில் புகுந்த தமிழகப் பொலிஸார் அனைவரையும் கைது செய்தனர். அந்த வீடுகளில் இருந்தோர் பொலிஸாரின் தடுப்பு முகாம் போன்ற நிலையிலேயே ஏற்கனவே இருந்தனர். காவலுக்கு இருந்த பொலிஸாரைத் தட்டி எழுப்பி விட்டே பின்னர் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர். தூக்கக் கலக்கத்திலிருந்தோருக்கு எதற்காக கைது செய்யப்பட்டோம் என்று தெரியவில்லை. நீதிமன்றில் நிறுத்தப் பட்டபோதுதான் இரவில் சத்தம் போட்டு கலாட்டா செய்து அமைதிக்கு பங்கம் விளைவித்ததாக அயலவர்கள் முறைப்பாடு செய்ததாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். அடையாறு, இந்திரா நகர் என வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டோருக்கும் ஒரே விதமான குற்றச்சாட்டு.

14நாள் கழிந்ததும் சென்னையிலுள்ள புத்த விகாரைக்கு குண்டு வைக்கப்போனார்கள் என்றும் தாம் துரத்திப்பிடித்ததாகவும் சொன்னார்கள். துரத்திப் பிடித்ததில் கால் இல்லாதவர்களும் அடக்கம். இது சம்பந்தமாக சதாசிவம் விசாரணை கமிஷனுக்கு புலிகள் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு வைகோ புலிகளுக்கு ஆதரவாக வாதிட முனைந்தார். எனினும் அவர் சட்டத்தரணியாதலால் வாதிட முடியாது; சட்டத்தரணியில்லாதோர் மட்டுமே வாதிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே தி.மு.க. தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த ஆற்காடு வீராசாமி புலிகளுக்காக வாதிட்டார். வாதங்களைக் கேட்கும் நிலையில் நீதிபதி இல்லை. அவை தாலாட்டுப்போல இருந்திருக்க வேண்டும். தூங்கி வழிந்துக் கொண்டிருந்தார் நீதிபதி. ஆனாலும் வாதிடுவதை நிறுத்தவில்லை ஆற்காடு வீராசாமி. வெளியில் நின்றிருந்த வைகோ புலிகளின் நலனைக் கவனித்துக் கொண்டார்.

வைகோ, தலைமைக்குத் தெரி

“ 14நாள் கழிந்ததும் சென்னையிலுள்ள புத்த விகாரைக்கு குண்டு வைக்கப்போனார்கள் என்றும் தாம் துரத்திப்பிடித்ததாகவும் சொன்னார்கள். துரத்திப் பிடித்ததில் கால் இல்லாதவர்களும் அடக்கம். இது சம்பந்தமாக சதாசிவம் விசாரணை கமிஷனுக்கு புலிகள் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு வைகோ புலிகளுக்கு ஆதரவாக வாதிட முனைந்தார். எனினும் அவர் சட்டத்தரணியாதலால் வாதிட முடியாது; சட்டத்தரணியில்லாதோர் மட்டுமே வாதிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. ”

யாமல் இலங்கைக்குச் சட்டவிரோதமாகப் பயணித்து வன்னியில் பிரபாகரனையும் அவருடன் இணைந்து போராடிக்கொண்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்களையும் சந்தித்தார். தான் படகில் புறப்பட்ட பின்னர் கட்சித் தலைவர் மு.கருணாநிதிக்கு இத் தகவல் தெரியக் கூடியதாக ஏற்பாடு செய்திருந்தார். பிராமணனுக்கு மீன் முள்ளுச் சிக்கினால் என்னவாகும்? வெளியே சொல்லவும் முடியாது; சகிக்கவும் முடியாது. கட்சிக்குள் இனித் தவிர்க்கமுடியாத சக்தியாக வைகோ வந்துவிட்டார் என்பதை உணர்ந்தார் கருணாநிதி.

இந்திய - ஸ்ரீலங்கா கடற்படை மற்றும் இராணுவங்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இலங்கைக்கு வந்து அந்த யுத்த கள நிலைமைகளைப் பார்த்தவர் - அவற்றை வெளியிட்டவர் என்ற வகையில் வைகோவின் செல்வாக்குப் பெருகியது. ‘நேசக் கரங்கள்’, ‘அன்பு வழி’ முதலான வானொலி நிகழ்ச்சிகள் மூலமும் தூரதர்சன் தொலைக்காட்சி மூலமும் உலகுக்கு இந்திய அரசு தெரிவித்து வந்தது போன்றல்ல அங்குள்ள நிலைமை என இந்திய மக்கள் குறிப்பாக தமிழர்கள் புரிந்து கொண்டனர். சாதாரண அரசியல் வாதிகளால் இவ்வாறான “றிஸ்க்” எடுக்கமுடியாது. ரயில் வராது என உறுதியாகத் தெரிவித்தபின்தண்டவாளத்தில் தலை வைத்துப்படுத்த கல்லக்குடி போராட்ட வரலாறு இனி கட்சிக்குள்ளும் தமிழக மக்களிடையேயும் தொடர்ந்து எடுபடாது என கலைஞர் முடிவு கட்டினார். இப்படியே போனால் கட்சி எதிர்காலத்தில் வைகோ போன்றோரின் கைக்குள் சென்றுவிடும்.

வைகோவைப் பொறுத்தவரை அவர் ஒரு சட்டத்தரணி. அரசியல் அவருக்கு ஒரு அடையாளம் மட்டுமே. ஆனால் கருணாநிதியின் மகன் ஸ்டாலினுக்கு அரசியல் என்பது தொழில். அதைக் கைவிட முடியாது.

1981இல் ஸ்டாலினுக்கு கட்சிக்குள் அளிக்கும் முக்கியத்துவம் தொடர்பாக ஒரு பத்திரிகையாளர் வினாவினார். அதற்குக் கருணாநிதி “தனக்குரிய தொழில் என்ன என்பதை அவன்தான் தீர்மானிக்க வேண்டும்” எனப் பதிலளித்தார்.

இலங்கையிலிருந்து அவமானத்துடன் உலகின் நான்காவது பெரிய இராணுவம் திரும்பிச் சென்றபோது அதனை வரவேற்க கருணாநிதி செல்லவில்லை. தமிழக சட்டசபையில் தமிழீழம் அமைந்தால் மகிழ்ச்சியடைவேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். (பின்னர் ஒரு தடவை இதுபற்றி கேட்டபோது புலிகள் மூலம் தமிழீழம் அமைந்தால் என நான் கூறவில்லை என மழுப்பினார்) கருணாநிதியின் ஆட்சியைக் கலைக்க வேண்டுமென ராஜீவ்காந்தி நினைத்தார். வி.பி. சிங் தலைமையிலான கூட்டணி அரசு குழப்பங்கள் நிறைந்ததாக இருந்தது. அதில் இருந்த சந்திரசேகர் தலைமையிலான கட்சிக்கு ஆதரவளிக்க ராஜீவ்காந்தி முடிவெடுத்தார். அதற்கு அவர் வைத்த நிபந்தனைகளில் ஒன்று கருணாநிதி ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்பது. குரங்காட்டியாக ராஜீவும் குரங்காக சந்திரசேகரும் இருந்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



# தல்செவன

## காங்கேசன்துறையின் மறுபெயரா?

■ இ.விஜே

இரு தசாப்தங்களைத் தாண்டிய ஏக்கம்.. கனவு... காங்கேசன்துறையில் மக்கள் வாழும் காலம் மீண்டும் வருமா? என்ற வினாக்களோடு காத்திருந்த போதுதான் ஆட்சி மாற்றம்.. அம்மக்களின் கனவை நிறைவேற்றியது. படிப்படியாக அம்மக்களின் நிலம் விடுவிக்கப்பட்டு வருகிறது. விடுவிக்கப்பட்டகையோடு அம் மண்ணின் தனித்துவங்களை மீண்டும் கட்டியெழுப்பி காங்கேசன்துறையை மீண்டும் அதே நிலைக்கு கொண்டுவரும் முனைப்புகளில் அம் மக்கள் ஈடுபட்டிருப்பதை காணும்போது பெருமையாக உள்ளது.


ஆனால், கடந்த வாரம் வெளியான பத்திரிகை கட்டுரை ஒன்றில் காங்கேசன்துறை கடற்கரையினை "தல்செவன கடற்கரை" என்று தலைப்பிட்டு அழைத்திருந்தமை வேதனை தருகிறது. ஏனெனில் 'காங்கேசன்துறை' என்பது அழகான தமிழ்ப்பெயர். புராண வரலாற்றுகளுடன் கூட சம்பந்தப்பட்ட பெயர். அதில் தெய்வீகமும் கலந்திருப்பதை எவரும் மறுத்துவிட முடியாது. கீரிமலையில் குதிரைமுகம் நீங்கிய மாருதப்புர வீகவல்லி என்னும் தென்னிய இளவரசி ஒருவர், தன் அவலட்சணம் போக்கிய கடனுக்காக முருகக் கடவுளின் திருவுருவச் சிலையை அனுப்பி வைத்தார். முருகக் கடவுளுக்கு காங்கேயன் என்ற ஒரு பெயரும் உண்டு. காங்கேயனுடைய சிலை வந்து இறங்கியதுறை என்பதனாலேயே "காங்கேசன்துறை" இப்பெயர் பெற்றது. இத்தகு பின்னணி உடைய பெயரை மகத்துவமான சொல்லை 'தல்செவன' என தலைப்பிட்டு எழுத அப்பத்திரிகை அனுமதித்தமை அறிவுபூர்வமான ஒரு விடயமல்ல. ஏனெனில் 'தல்செவன' என்பது ஒரு சிங்களச் சொல். அதன் தமிழ்ப்பொருள் "பனைமர நிழலிலே" என்பதே ஆகும். காங்கேசன்துறையின் ஒரு பகுதியாக இயங்கும் 'தல்செவன' விடுதி உண்மையிலேயே எம் கலாசார விழுமியங்களுக்கு ஒவ்வாத ஒன்றாக பார்க்கப்படுகிறது. இதனை நிர்வகிப்பவர்கள் இராணுவத்தினரே. தமிழ் மக்களின் பாரம்பரியங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில்... அதற்கு நாமும் துணை போவதென்று வேதனையான விடயம். சமூகத்தில் பொறுப்புகளில் உள்ளவர்கள் இது சார்ந்த விடயங்களில் அவதானிப்பைச் செலுத்துவது அவசியமாகும்.

மேற்படி பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை உண்மையிலேயே சமூக அக்கறையை வெளிப்படுத்துகின்றது என்பதை மறுப்பதற்கில்லை. மறுத்திடவும் முடியாது. அவ்வளவிற்கு தீப் பண்புகள் அரங்கேறும் நிகழ் களமாக அப்பகுதி மாறி வருகின்றது. அது தடுக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கிடையாது. அதேவேளை, காங்கேசன்துறை தன் கம்பீரமான பெயர் அழைப்பை இழந்து விடுமா? என்பதே மக்கள் சார்ந்த கவலையாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் முதலில் கம்பீர முறுக்கைத் தருவது அவன் பிறந்த ஊரே ஆகும். அதன் பின்பே நாடு. வெளிநாட்டில் நிற்கும் ஒருவன் தன் தாய் நாட்டை நேசிப்பான். தாய் நாட்டில் நிற்பவன் தன் ஊரேயே உயிர் மூச்சாகக் கருதுவான். இதை எவரும் மறுத்திட முடியாது. காங்கேசன்துறை, என்பது வெறும் சொல் அல்ல. அவ்வூரில் வாழும் ஒவ்வொருவரதும் உயிர் மூச்சு. அந்த உயிர் மூச்சு, சிங்களத்தில் கலந்து போவதை ஒவ்வொரு மண்ணின் மைந்தனும் ஏற்றுக்கொள் மாட்டான். இதற்கான தீர்வு மிக அவசியம்.

அந்தத் தீர்வு என்ன? இராணுவத்தினர் நடத்துக்கின்ற அந்த விடுதி உண்மையில் காங்கேசன்துறை களஞ்சியசாலையின் கட்டடங்களே ஆகும். அப்பகுதியில் அவ்விடுதியை நிறுத்திவிட நல்லாட்சி அரசும் முதலில் நடவடிக்கை எடுத்ததாக ஒரு செய்தி அப்போது வெளிவந்தது. ஆனால், அதின் செயல் வடிவம் இல்லை. எனவே, அதன் பெயரை "பனைமர நிழலிலே" என்று அழகமான தமிழ்ப் பெயராக மாற்றி, தமிழ்ப் பண்பாடு தோன்றும் வகையில் அதன செயற்பாடுகளை மாற்றி அமைக்க இராணுவத்தினரிடம் வேண்டுகோள் விடுப்பதே இப்போது உள்ள வடக்கு மாகாண சபையின் செயலாகும். கீரிமலையில் மகிந்த அரசு காலத்தில் கட்டப்பட்டு வந்த ஜனாதிபதி மாளிகை யின் கட்டுமானப் பணிகளை நல்லாட்சி அரசு தடுத்து நிறுத்தியமை ஆக்கபூர்வமான செயலாக பார்க்கப்பட்டது. அம் மாளிகைகளை தம்மிடம் தருமாறு வடக்கு மாகாணசபை கேட்ட செய்தியும் நாம் அறிந்த விடயம் ஆகும். காரணம் உல்லாச விடுதிகளை அமைத்து வருமானத்தையும், வேலை வாய்ப்புக்களையும் பெருக்க முடியும். ஆனால், ஏனோ அந்த செயற்றிட்டம் "பேச்சளவில் நின்றுவிட்டது. வடக்கு அரசும் அதன் பின் அதற்கான எந்த ஒரு செயற்பாட்டிலும் முழுமூச்சுடன் செயற்படவில்லை. சரி, அம்மாளிகைதான் முழுமை பெறவில்லை. முழுமை பெற்றால் ஏதேனும் செய்யலாம். ஆனால், 'தல்செவன' விடயம் எப்போதும் நீறுபூத்த விடயமாகவே இருக்கப்போகிறது.









மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது போல, "தல்செவன" விடயத்தில் தமிழர்தரப்பும் - இராணுவத்தரப்பும் செயற்பட்டுக் கொண்டிருப்பது ஆக்கபூர்வமான செயல் அல்ல. அவ்வப்போது 'தல்செவன' விடயம் மேலெழுந்து வருவது ஆக்கிரமிப்பின் அடையாளம் ஆகும். ஒரு காலத்தில் அந்த ஆக்கிரமிப்பு எமது "காங்கேசன்துறை" என்ற அழகிய, கம்பீரமான பெயரையும் ஆக்கிரமித்துக் கொள்ளும். எனவே, இது சார்ந்து சிந்தித்து செயலாற்றுவது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும். இதனை செயற்படுத்துவது மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும். மீள்குடியேற்றம் கண்டு வரும் காங்கேசன்துறை, ஒரு காலத்தில் யாழ் நகருக்கு இணையாகக் காணப்பட்ட நகரமாகும். துறைமுகம், சீமெந்து ஆலை, புகையிரத தலைமை நிலையம், மிகப்பெரிய பண்டகசாலை/ களஞ்சியசாலை, பஸ்நிலையம், நகர சபை மண்டபம், விவசாயம், வங்கிகள், கடற்றொழில், பனைவளம் என்று பல்துறையில் வருமானங்களையும் கொண்ட நகரக்கட்டமைப்பாக இயங்கியது. ஆனால், இன்று அத்தனை அடையாளங்களையும் இழந்து நிற்கிறது. இவற்றில் சில அடையாளங்கள் திட்டமிட்டு வேறுபகுதிகளுக்கும் மாற்றப்பட்டுள்ளன. இன்னும் மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. எனவே, அத்தனையும் மீள காங்கேசன்துறைக்கே கொண்டு வரப்பட்டு, காங்கேசன்துறை, பழைய காங்கேசன்துறையாக நகரக்கட்டமைப்பாக மாறிடவேண்டும் என்பதே மக்களின் பேரவாகும். ■





# தொண்டமான் பங்களாவின் மறுபக்கம்

■ கங்காணி

தன்நம்பிக்கையும், கடின உழைப்புமே மனித வாழ்வின் முன்னேற்றத்துக்கான தொடக்கப் புள்ளியாகக் கருதப்படுகின்றது. இறம்பொடை, வெளண்டன் தோட்டத்துக்கு சப்பாத்து கூட இன்றி சென்ற அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் தந்தையான கருப்பையாபிள்ளை, அந்த தோட்டத்துக்கே முதலாளியான கதை உங்களில் எத்தனை பேருக்கு தெரியும்?

மனித வாழ்வில் யாருக்குதான் துன்பகாலம் இல்லை. இப்படிதான் தமிழகத்தில் சர்வ வசதிகளுடனும் வாழ்ந்த கருப்பையாபிள்ளைக்கும் வாழ்வில் பொருளாதார ரீதியில் சறுக்கல் ஏற்பட்டது. இதனால் தொழிலுக்காக அவரும் இலங்கைக்கு குடிபெயர்ந்தார்.

"கம்பளை, இரட்டைப்பாதை என சில இடங்களில் அவர் தொழில்புரிந்தாலும் ஒரு கட்டத்தில் வேலை தேடி, திண்டாடவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. ஒரு புறத்தில் வறுமையும் - மறுபுறத்தில் வேலையின்மையும் அவரை வாட்டி வதைத்து விட்டன என்றேகூறவேண்டும்" என தொண்டமானின் வாழ்க்கை வரலாறு குறித்த 'தலைவர் தொண்டமான்' எனும் நூலில் விபரிக்கப்பட்டுள்ளது.

பெரும் சிரமங்களுக்கு மத்தியில் 1890 ஆம் ஆண்டு வெளண்டன் தோட்டத்தில் கங்காணி வேலை அவருக்கு கிடைத்தது. செருப்புகூட இன்றியே அந்த தோட்டத்துக்குள் காலடியெடுத்து வைத்தார். கடுமையாக உழைத்தார். செல்வத்தின் உச்சத்தையும் தொட்டார்.

எந்தத்தோட்டத்துக்கு செருப்புஇன்றி சென்றாரோ அதே தோட்டத்துக்கு 1909ஆம் ஆண்டில் சொந்த மோட்டார் காரில் முதலாளியாக சென்றார்.

வெளண்டன் தோட்டத்தையும் விலைகொடுத்து வாங்கினார். புரட்டொப் தோட்டத்தின் மலைஉச்சி வரை அந்த தோட்டம் இருக்கின்றது. முதலில் தேயிலை பயிர் இடப்பட்ட இடங்களில் அதுவும் ஒன்று. இன்று தொண்டமான்களின் கோட்டையாக திகழ்கின்றது.

இந்த பங்களா அமைந்துள்ள பகுதி கோதை நகர் என்றே அழைக்கப்படுகின்றது.

எனினும், மேற்படி பங்களாவை வாங்குவதற்காக சௌமியமூர்த்தி தொண்டமானின் தந்தை கையாண்ட வழிமுறைகள் பற்றி பலகோணங்களில் கதைகள் வெளியானாலும் அவற்றுக்கான ஆதாரங்கள் இல்லை. நெய் வியாபாரம் செய்தும், வட்டிக்கு பணம் கொடுத்துமே உழைத்து முன்னேறினார் என மாற்று அரசியல் வாதிகள் விமர்சித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சௌமியமூர்த்தி குமாரவேல் இராமநாத் தொண்டமான் மூலம்தான் 'தொண்டமான்' பரம்பரை பரந்து பெருகியது எனலாம். படித்து தேர்ச்சி பெற்றவராக இருந்தபோதிலும் தனது தந்தையான சௌமியமூர்த்தி தொண்டமானின் அந்தரங்கச் செயலாளராகவே பணியாற்றினார்.

1988 இல் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் வரை தந்தைக்கு உதவியாளராகவே இராமநாதன் இருந்தார்.

மாகாணசபைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர், மாகாண அமைச்சராகவும் பதவிவகித்தார். இராஜேஸ்வரி என்பவரை இளம் வயதிலேயே மணம் முடித்தார். (அண்மையில் உயிரிழந்தவர்)

இராமநாதனுக்கும், இராஜேஸ்வரிக்கும் ஐந்து குழந்தைகள். நான்கு பெண் குழந்தைகள். ஒருவர் மட்டுமே ஆண் குழந்தை. அவர்தான் ஆறுமுகன் தொண்டமான்.

அநுராதா, ஆதிலக்ஷ்மி, முத்து விநாயகம், ஆறுமுகன் தொண்டமான், தமயந்தி கீதா.

தந்தை இராமநாதன் மாகாணசபை உறுப்பினரான பின்னர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அந்தரங்கச் செயலாளராக ஆறுமுகன் தொண்டமான் தெரிவானார். இராஜலக்ஷ்மி என்பவரையே இவர் திருமணம் முடித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கரஸின் பொதுச் செயலாளராக தற்போது பதவி வகிக்கும் ஆறுமுகன் தொண்டமான், மத்திய அரசில் அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளார்.



இராமநாதன் தொண்டமான்
சௌமியமூர்த்தி தொண்டமான்
ஆறுமுகன் தொண்டமான்

# தமிழர் நிலங்கள் பறிபோகின்றன!

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2013ஆம் ஆண்டின் பின்னர் எனது மூத்த மகன் 18வயது பூர்த்தியாகிய பின் காணிச் சட்டத்துக்கு அமைவாக எனது கணவரும் மகனும் இணைந்து முன் மொழிவுத்திட்டம் தயாரித்து 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதேச செயலகம்பாண்டியன்குளத்திற்குகுத்தகைஅடிப்படையில் காணி வழங்குமாறு அனுமதி கோரினர். அதனை பிரதேச செயலகம், முல்லைத்தீவு கச்சேரிக்கு அனுப்பியது. அங்கிருந்து தான் இது அரசியல் மயப்படுத்தப்பட்டு ஊதிப் பெருப்பிக்கப்பட்டது.

காணி உரிமைக் கோரிக்கை நான் பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்னரே ஆரம்பித்து விட்டது. நான் அன்று வரைஇதில்எனது செல்வாக்கை பயன்படுத்துவதாக கூறுவது அரசியல் வங்குரோத்து தனமானது. ஏறத்தாழ 46 வருட உற்பத்தி வரலாறு கொண்ட காணி அது. எனது கணவர் 32 வருடங்களாகப் பயிர் செய்து வந்த காணியில் ஏனைய விவசாயிகள் பெற்றுக் கொள்ள நலன்களை பெற்றுக் கொள்வதற்காக அதன் உரிமையை சட்டரீதியாக கேட்பதில் தவறு உண்டா?

எனது மகனும் இந்த நாட்டுப் பிரஜை தான். ஒரு மத்திய தர வர்க்கத்தைச் சார்ந்தவர் .அவர் இந்தக் காணியின் உரிமையை கேட்பதற்கு சட்டரீதியான ஆட்சி உரிமை உண்டு.

**கேள்வி:** வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடையும் நிலையில் உள்ளது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக, அந்த சபையின் செயற்பாடுகளை எப்படி நோக்குகிறீர்கள்?

**பதில்:** இலங்கை அரசியல் சட்டத்தில் 1989ஆம் ஆண்டு 13ஆவது திருத்த சட்டத்தின் மூலம் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.ஒவ்வொரு மாகாண சபைகளும் தமக்கென நியதி சட்டங்களை உருவாக்கலாம் அந்த நியதி சட்டங்களை வைத்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிறையவே செய்திருக்கலாம். மாகாணசபை செயற்பாடுகள் தொடர்பாக நான் சொல்வதை விட அவை தொடர்பான ஊடகச் செய்திகள் போதுமானவைதானே

**கேள்வி:** அடுத்த மாகாணசபைத் தேர்தலில் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாரை முன்னிறுத்த வேண்டும் என எண்ணுகிறீர்கள்? அது ஏன்?

**பதில்:** மக்கள் மனங்களை வென்ற ,தூரநோக்கு சிந்தனை உடைய பொருளாதார மற்றும் அரசியல் வான்மையுடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய ஒருவரை முன்நிறுத்த வேண்டுமென எண்ணுகிறேன். ஏனெனில் 30 வருட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கும் கிழக்கும் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்துத்தில் மீள்குடியமர்வு செய்யப்பட்டு பத்து வருடங்களாகின்றன. ஆனால் இலங்கையில் வறிய மாவட்டம், இலங்கையில் பின் தங்கிய மாவட்டம், மாற்றுவலுவுள்ளோர் பெண் தலைமைத்துவம் இவ்வாறு ஏகப்பட்ட பிரச்சினைகளை கவனமாக கையாண்டு, இராஜ தந்திரங்களை பிரயோகித்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியையும் மறுபக்கம் நீண்ட காலம் புனரயோட்டிப்போன தமிழ் மக்களின் அரசியல் அபிலாசனைகளையும் வென்றெடுக்கும் காரியங்களும் நிறைவடைய வேண்டும் என்பதால் அதைச் செய்யக்கூடிய ஒருவரையே முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பு முன்னிறுத்த வேண்டும்.

**கேள்வி:** முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் இடம் பெற்று வரும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், அவற்றினால் அபகரிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகள் என்பன தொடர்பில் பூரண ஆதாரங்களுடன் கூடிய ஆவணமொன்றை தயாரிக்கும் குழுவில் தாங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தீர்கள். அந்த ஆவணம் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டதா? அதன் விளைவாக ஏதும் நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதா?

**பதில்:** அந்தக் காரியங்கள் திட்டமிட்டபடி நகர்ந்து செல்கிறன. இப்போதைக்கு இது பற்றி விபரிக்க முடியாது

**கேள்வி:** ஒரு அரச அதிகாரியாக இருப்பதற்கும், அரசியல்வாதியாக இருப்பதற்குமான வித்தியாசத்தை உணர்கிறீர்களா? இந்த இரண்டில் எதன்மூலம் மக்களுக்கான பணியைச் செய்த ஆத்ம திருப்தி உங்களுக்கு கிடைக்கிறது?

**பதில்:** இது எனது இதயத்தை புரட்டிப்பார்க்கும் ஒரு கேள்வி. ஒப்பீட்டு பார்க்க வேண்டிய ஒன்று. அரச அதிகாரியாக இருந்த போது நான் உண்டு எனது வேலை உண்டு கணவன் பிள்ளைகள் வீடு, வாசல் என இருந்தேன்

அரசியலிலே இரவு நன்றாக உறங்குவது கேள்வியாக உள்ளது. அவலப்படும் மக்கள் அவசர தேவைக்காக இரவிலும் அழைப்புக்களை ஏற்படுத்துவார்கள். அதிகாரியாக இருந்த வேளை சுற்று நிருபங்களோடு மட்டுமே செயற்பாடுகள் இருக்கும் .மக்களது கோரிக்கைகளை செய்யலாம் அல்லது செய்ய முடியாது என பதில் இருக்கும். ஆனால் மக்களைப் பார்க்க பாவமாக இருக்கும். மீள்குடியமர்வின் பின் மக்களது பிரச்சினைகளை, தேவைகளை பகுப்பாய்வு செய்தபோது அதிகாரியாக இருந்து துயரை துடைக்க முடியாது என்றே ஓய்வு பெறுவதற்கு 10 வருடங்கள் இருந்தும் எனது வேலையை உதறிவிட்டு அரசியலுக்குள் பிரவேசித்தேன்.

என்னால் துணுக்காயில் ஆரம்பிக்கப்பட்ட 'ஒளிரும் வாழ்வு' அமைப்பு மாவட்டத்தின் ஏனைய பிரதேச செயலக பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட்டு புலம் பெயர் உறவுகளின் உதவிகளால், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இளைஞர்,யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருகிறேன். கல்வித் துறை வளர்ச்சிக்கு பல பங்களிப்பைச் செய்கிறேன். இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை, விடுவிக்கத் தொடர்ந்து குரல்கொடுக்கிறேன். இவ்வாறு தொடர்ந்து சொல்லிக்கொண்டே போகலாம். அரச அதிகாரியாக இருந்திருந்தால் மக்களுக்கு இவ்வளவு சேவையை செய்திருக்க முடியாது

**கேள்வி:** அடுத்த நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடுவீர்களா?

**பதில்:** எனது அரசியல் பிரவேசத்தில் 23 நாட்கள் மட்டுமே பரப்புரை செய்வதற்கு அவகாசம் இருந்தது. பண பலமோ அரசியல் பின்னணியோ, செல்வாக்கோ இல்லாத போதும் சொற்ப வாக்குகளாலேயே சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. எனது அரசியல் பயணம் வெளிப்படைத் தன்மையானது. மக்களுக்காக என்னால் இயன்ற சேவையை வழங்கியிருக்கிறேன் என்ற திருப்தி யுள்ளது. மாற்று வலுவுள்ளோரை நிறுவனமயப்படுத்தி பல சேவைகளை வழங்குவதற்கு வித்திட்டுள்ளேன். நான் ஒரு மாற்றுவலு உள்ளவள் என்றாலும் நடையாக நடந்து அமைச்சுக் கட்டடங்களில் ஏறிச் சாதித்தவை மக்களுக்கு தெரியும்

எனது கண்ணியமான செயற்பாடு ,கட்சிக்கு விசுவாசம் தலைமைக்கு கட்டுப்படுதல் என்பனவற்றை கட்சி உறுப்பினர்களும் தலைவர்களும் அறிவார்கள். எனவே அடுத்த முறை நான் போட்டியிடுவது குறித்துக் கட்சியும் மக்களும் தீர்மானிக்கட்டும். ■

## மூளைக்கு வேலை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 5 | 4 | 9 | | |
| 1 | | | | 6 | | | 4 | 2 |
| 7 | | | | 8 | 9 | | | |
| | 7 | | | | 5 | | 8 | 1 |
| | 5 | | 3 | 4 | | 6 | | |
| 4 | | 2 | | | | | | |
| | 3 | 4 | | | | 1 | | |
| 9 | | | 8 | | | | 5 | |
| | | | 4 | | | 3 | | 7 |

## பட்டம் சொன்ன பாடம்




அப்பாவும் மகனும் சேர்ந்து பட்டம் விட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பா கேட்டார், "கண்ணா!.. நூலின் வேலை என்ன சொல்லு பார்க்கலாம்?"

மகன் கொஞ்சமும் தாமதிக்காமல் சொன்னான் "நூல் தான் அப்பா பட்டத்தை இழுத்துப் பிடித்து வைத்திருக்கு".

அப்பா சொன்னார், "இல்லை மகனே நூல் தான் அதைப் பறக்க வைக்குது"

மகன் சிரித்தான். அப்பா ஒரு கத்தரியால் நூலை வெட்டினார். முதலில் பட்டம் விடுபட்டு தாறுமாறாகப் பறந்தது. கொஞ்ச நேரத்தில், சற்றுத் தூரம் தள்ளி கீழே போய் விழுந்தது.

"ஒழுக்கமும் இப்படியானதுதான் மகனே . அது உன்னை இழுத்துப் பிடித்திருப்பதாக நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதில் இருந்து அறுத்துக் கொண்டால் சுதந்திரம் என்று நினைத்திருக்கிறாய். ஆனால் அந்த சுதந்திரம் தற்காலிகமானது. சீக்கிரமே கீழே விழுந்து விடுவாய். ஒழுக்கம் தான் உன்னைக் கொடி கட்டிப் பறக்க வைத்துக் கொண்டிருப்பது. உன்னை அதிலிருந்து அறுத்துக் கொள்ளாதே."

## நாடு கடந்தும் சாதிக்கும் ஸ்ரேயாஸ்!



கர்நாடகா மாநிலம் பெங்களூரைச் சேர்ந்தவர் ஜிதேந்திரா. இவரது மனைவி அஞ்சு சிங். இவர்களுக்கு ஸ்ரேயாஸ் ரோயல் என்ற மகன் உள்ளார். இந்தச் சிறுவன் 3 வயதாக இருக்கும்போது, பணி நிமித்தமாக இங்கிலாந்தில் குடியேறினர். தற்போது 9 வயதாகும் ஸ்ரேயாசுக்கு செஸ் போட்டியில் ஆர்வம் அதிகம். இங்கிலாந்து சார்பில் பல தொடர்களில் பங்கேற்றுள்ளார். சிறுவர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ள அவர், பிரிட்டன் செஸ் சம்பியன்ஷிப் தொடரில் விளையாடி வருகிறார்.

தற்போது, அவர்களின் விசாக்காலம் செப்ரெம்பர் மாதத்துடன் முடிவடைய உள்ளது. ஆனால் ஸ்ரேயாசை தேசிய சொத்து எனக்கருதி தொடர்ந்து வசிக்க அனுமதி தர வேண்டும் என இங்கிலாந்து எம்.பிக்கள் அந்த நாட்டு உள்துறை அமைச்சகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

செஸ் போட்டியில் பல சாதனைகள் படைக்கும் இந்தியச் சிறுவனை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டாம் என இங்கிலாந்து எம்.பிக்கள் அந்நாட்டு உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியுள்ளனர். "ஸ்ரேயாசை நாட்டை விட்டு வெளியேற அனுமதித்தால், திறமையாளரை இங்கிலாந்து இழந்து விடும். எப்போதும், உலகின் திறமையானவர்கள், அறிவாளிகளை, இங்கு வாழவும், பணி செய்யவும் அனுமதிக்க வேண்டும்" என்பது அந்நாட்டவர்களின் வேண்டுகோளாக உள்ளது.

## கதை சொல்வோம்...

சிறுவர்களே! உங்கள் கற்பனை உலகத்தில் உருவாகும் கதைகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தரமான கதைகள் எதிரொலி வாரமலரில் பிரசுரமாகும் .

அனுப்ப வேண்டிய முகவரி....

**'கதை சொல்வோம்'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com

## வாழ்த்தலாம் வாங்கோ



**2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

மல்லாகத்தைச் சேர்ந்த
தங்கேஸ்வரன் – மயூரி தம்பதியரின்
புதல்வி

**ஓவியா**

தனது 2ஆவது பிறந்த
தினத்தை தனது இல்லத்தில்
29.08.2018 அன்று வெகு
விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை மனதார வாழ்த்துகிறது
**'எதிரொலி' குடும்பம்**



**ஹாய் குட்டீஸ்!**

ஒகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் பிறந்தநாள் கொண்டாடும் சிறார்களின் விவரங்களை, இப்படிவத்தில் பூர்த்தி செய்து, வெட்டி, தெளிவான புகைப்படத்துடன் அனுப்புங்கள். உங்களை வாழ்த்துவதற்கு எதிரொலி தயாராக உள்ளது.

பெயர் : ______________

பிறந்த திகதி : ______________

வயது : ______________

முகவரி : ______________

______________

தொலைபேசி இலக்கம் : ______________

**வாழ்த்தலாம் வாங்கோ**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com




## போராட்டங்களின் நாயகன் அனான்!

"உலகில் எந்தப் பகுதியில் மக்கள் துயரத்தில் சிக்கினாலும் அது முழு உலகினதும் அக்கறைக்கும் உரிய விடயம் என்பதே நான் கற்றுக் கொண்ட பாடம்" என்பது கோபி அனானின் வாயில் இருந்து அடிக்கடி வெளிப்படும் வார்த்தைகள். மேற்கு ஆபிரிக்கப் பாடசாலை ஒன்றிலேயே கோபி அனான் தனது வாழ்க்கையின் முக்கிய பாடத்தைக் கற்றார். அந்த சிந்தனை அனானுக்கு வாழ்க்கை முழுவதும் வழிகாட்டியது. இதன் காரணமாகவே அவர் தனது வாழ்நாளின் போது உலகம் சந்தித்த முக்கிய நெருக்கடிகள் அனைத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

எச்.ஐ.விக்கு எதிரான போராட்டம், ஈராக் யுத்தம், காலநிலை மாற்றம், சிரியாவின் உள்நாட்டு யுத்தம் என அவர் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளாத விடயமே இல்லை எனலாம்.

கோபி அட்டா அனானும், அவரது சகோதரி எவுவா அனானும் குமாசி நகரில் பிறந்தவர்கள், இரட்டையர்கள்.

அனான் செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில்பிறந்தவர். அவரது குடும்பத்தவர்கள் பாரம்பரியமாக சமூகத்தின் உயர் பதவிகளை வகித்தவர்கள். தந்தை மாகாண ஆளுநர். அனானுக்கு பத்தொன்பது வயதாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அவரது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது. ஹானா என அது மாறியது. ஹானாவிலும் அமெரிக்காவிலும் கல்வி கற்ற அனான் ஐ.நாவில் பணியாற்ற ஆரம்பித்தார். அவர் தனது பணியை உலக சுகாதார ஸ்தாபனத்திலேயே ஆரம்பித்தார். அங்கிருந்தே அவர் உலகின் தலைசிறந்த இராஜதந்திரி என்பதை நோக்கிய பயணத்தை ஆரம்பித்தார். ஆனால் அக்காலப்பகுதியில் அவர் தன்வாழ்நாளின் மிக மோசமானகுற்றச்சாட்டுகளையும் எதிர்கொண்டார்.

1993 ஆம் ஆண்டளவில் அனான் ஐ.நாவின் பிரதிச் செயலாளர் நாயகம் என்ற முக்கியமான பொறுப்பு வரை பயணித்திருந்தார். அமைதிப் படையின் தலைவராக விளங்கினார். 1994 ஆம் ஆண்டு உலகத்தை உலுக்கிய அந்த இனப்படு கொலை இடம்பெற்றது. அதன் பின்னர் 1995 இல் உலகம் மீண்டும் மற்றொரு இனப்படுகொலையைச் சந்தித்தது. பொஸ்னியாவில் ஐ.நா.வின் பாதுகாப்பான இடம் என அறிவிக்கப்பட்ட பகுதியில் 8000 முஸ்லீம்கள் சேர்பிய படைகளால் கொலை செய்யப்பட்டனர். இந்தஇருஇனப்படுகொலைகளுக்காகவும் அனானும் அவரது அலுவலகமும் கடும் குற்றச்சாட்டுகளையும் விமர்சனங்களையும் சந்திக்க வேண்டிய நிலை உருவானது. இதன் பின்னர் தனது 59 வயதில் 1997 இல் கோபி அனான் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகமாக பதவியேற்றார். ஐக்கியநாடுகள் அமைப்பைச் சீர்செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்த அனான் உலகின் நன்மைகளுக்காக மில்லேனியம் இலக்கு,எயிட்ஸ்மற்றும்வறுமைக்கு எதிரான போராட்டங்களையும் ஆரம்பித்தார்.

2006 இல் தனது 70 வயதில் அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். எனினும் ஓய்வை ஏற்றுக்கொள்ளும் மனமின்றி அவர் தனது கோபி அனான் பவுண்டேசனை ஆரம்பித்தார். அதன் பின்னர் பல நாடுகளில் சமாதான பணியில் ஈடுபட்டார். 2012 இல் சிரியாவுக்கான விசேட பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில், இந்த மாதம் 18 ஆம் திகதி உடல் நலக்குறைவால் காலமானார். அவரது மனிதாபிமானப் பணிகள் அவருக்கு நோபல் பரிசையும் பெற்றுக்கொடுத்தன- கூடவே விமர்சனங்களையும்.



## பொலனறுவையில் 'அ' சொன்ன ஹக்கீம்!

கொழும்பில் சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட மேலும் பல அரசியல் பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.

அரசியலுக்கு அப்பால் தனிப்பட்ட வாழ்க்கை பற்றியும், கடந்த காலம் குறித்தும் இதன்போது அரசியல்வாதிகள் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனராம்.

தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்ட அமைச்சர் ஹக்கீம் "நான் கொழும்பு ரோயல் கல்லுரியின் பழைய மாணவனாக இருந்தாலும் நான் பொலன்னறுவையிலும் கல்வி பயின்றுள்ளேன்" என்று கூறினார்.

ஹக்கீம் இவ்வாறு கூறிய பின்னர், "நீங்கள் பொலனறுவையில் இருந்தீர்களா? அங்கு எதற்காக தங்கினீர்கள்", என்றெல்லாம் சில அரசியல் வாதிகளை ஹக்கீமிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

சளைக்காமல் ஹக்கீமும் பதிலளிக்க தொடங்கினார். "எனது தந்தை பல இடங்களில் தொழில் புரிந்துள்ளார். இதனால் எமக்கும் ஒவ்வொரு இடமாக செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன் ஓர் அங்கமாகத்தான் பொலனறுவையிலும் குடியேறினோம்" என்றார்.

ஹக்கீம் இவ்வாறு கூறும்வரை அவர் பொலனறுவையில் வசித்ததையும் கல்வி பயின்றதையும் பல அரசியல் வாதிகள் அறிந்து வைத்திருக்கவில்லை. எனினும், ஹக்கீமின் பொலனறுவை வாழ்க்கைப் பற்றி ஜனாதிபதி அறிந்து வைத்திருந்தார் என அறியமுடிகின்றது.

"அட.பொலனறுவையில் படித்தவர்கள் தான் நாட்டில் இன்று உயர் பதவிகளில் இருக்கின்றனர்' என்று இதன்போது அரசியல் பிரமுகர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். ■



## முனியாண்டி குசும்புக்காரேண்டா...!

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த பெண்களுள் சுமார்150இற்கும் மேற்பட்டவர்கள் கடந்தவருடம் செப்ரெம்பர் இறுதியில் மூச்சுத்திணறலால் மயக்க முற்ற நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இச்சம்பவத்தையடுத்து நோர்வூட் பகுதியில் பெரும் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டதுடன், அச்சமும், பீதியும் மக்களை சூழ்ந்துகொண்டன. உணவு விஷமானதால்தான் அதை உட்கொண்டவர்கள் மயக்கமடைந்தனர் என ஆரம்பத்தில் கூறப்பட்டது.

எனினும், 250 பேர்வரை மாத்திரமே வேலை செய்யக்கூடிய இடத்தில் கோழிகளை அடைப்பது போல் 800இற்கும் மேற்பட்டவர்கள் சேவைக்கு இருத்தப்பட்டதாலேயே உரிய காற்றோட்டம் உள்வராததால் மூச்சுத்திணறல் ஏற்பட்டது என பின்னர் அறிவிக்கப்பட்டது.

ஆனால், ஏன், திடீரென இப்படியொரு சம்பவம் ஏற்பட்டது என மாறுபட்ட கோணத்திலும் தகவல்கள் வெளிவந்தன. அந்தவரிசையில் தெய்வக்குற்றம் காரணமாகவே இது நடந்திருக்கலாம் என பாதிக்கப்பட்ட ஊழியர்களுள் சிலர் கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆம். மேற்படி தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியிலிருந்து சற்றுத் தொலைவில் காவல் தெய்வமான முனியாண்டிக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் கடந்த காலங்களில் வருடாவருடம் முனியாண்டிக்கு பலிகொடுக்கும் வேள்வி பூஜை நடத்தி வந்துள்ளனர். ஆடு, கோழி வெட்டி திருவிழா போல் குறித்த நிகழ்வு நடைபெறுமாம். ஆனால், கடந்த இரண்டு வருடங்களாகவே முனியாண்டிக்கு வேள்வி பூஜை நடத்தவில்லையாம்.

இதனால், முனியாண்டி சீற்றமடைந்ததாலேயே இந்த விபரீத நிலை ஏற்பட்டதாகவும் நம்பினர். இதை உறுதிப்படுத்தும் வகையில் சிலர் கருத்துகளையும் முன்வைத்திருந்தனர். இதை நம்புவதா அல்லது இல்லையா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும். ஆனால், இந்த முறை எப்படியாவது முனியாண்டிக்கு பூஜை நடத்த வேண்டும் என்பதில் பிரதேச மக்கள் குறியாக இருக்கின்றனராம்.

எது எப்படியோ முனியாண்டி குசும்புக்காரேண்டா... வருசா...வருசம் ஆடுகறி கேக்குறான் என மேற்படி தகவலை கேள்விப்பட்டவர்கள் நகைச்சுவையாக பேசுவதையும் கேட்கக்கூடியதாக உள்ளதாம். ■




## பொல்லைக்கொடுத்து அடிவாங்கிய அமைச்சர் பைசர்



பெரும் பரபரப்புக்கும், எதிர்ப்பார்ப்புக்கும் மத்தியில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பான எல்லைநிர்ணய அறிக்கை மீதான விவாதம் கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

அறிக்கையை அங்கீகரிப்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவு அவசியமாக இருந்தபோதிலும் எந்தவொரு உறுப்பினரும் ஆதரவாக வாக்களிக்கவில்லை. அறிக்கையை முன்வைத்து அதற்கு ஆதரவுகோரிய அமைச்சரே இறுதியில் எதிராக வாக்களித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

எல்லை நிர்ணய அறிக்கைக்கு ஒட்டுமொத்த சிறுபான்மையினக்கட்சிகளும் போர்க்கொடி தூக்கின. ஆளுங் கூட்டணியின் பிரதான பங்காளியான ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. மஹிந்த ஆதரவு பொதுஎதிரணியும் எதிர்த்து வாக்களிக்கும் நிலைப்பாட்டையே எடுத்திருந்தது.

எனினும், இவ்வறிக்கையை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டும் என்பதில் அமைச்சர் பைசர் முஸ்தபா குறியாக இருந்தார். இதற்காக தீயாக வேலைசெய்தார். சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் தம்முடன் இருப்பார்கள் என உறுதியாக நம்பினார். விருப்புவாக்குமுறை ஒழிக்கப்படவேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக இருப்பதால் அறிக்கையை இலகுவில் நிறைவேற்றிவிடலாம் என திட்டம் தீட்டினார்.

விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அவர், அறிக்கைக்கு எதிர்ப்பு வெளியிட்டவர்களை கடுமையாக விமர்சித்தார். குறிப்பாக சிறு பான்மைக்கட்சிகளை விளாசித் தள்ளினார். அறிக்கைக்கு எதிராக வாக்களிப்பவர்கள் ஜனநாயக விரோதிகள் என்றுகூட சாடினார்.

ஆனால், இறுதிநேரத்தில் அமைச்சரே அறிக்கைக்கு எதிராக வாக்களித்ததால் எதிரணி உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். நீங்களும் ஜனநாயக விரோதியா எனவும் நக்கல் பாணியில் வினாக்களை தொடுத்தனர். அமைச்சர் ஏன் தனது நிலைப்பாட்டை இவ்வாறு மாற்றிக்கொண்டார் என்பதே தற்போது எழும் மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும். ■

## சகுனியாகவா கொழும்பு வந்தார் சுவாமி?



பாரதிய ஜனதாக் கட்சியின் எம்.பியும், மஹிந்தவின் தீவிர ஆதரவாளருமான சுப்பிரமணியன் சுவாமி கடந்தவாரம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார் என்பதை நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

கொழும்புவந்த கையோடு விசேட விமானம்மூலம் - மஹிந்தவின் சொந்தஊரான மெதமுலனவுக்கு பறந்த சுவாமியை, களத்துக்கே சென்று நாமல் எம்.பி. வரவேற்றார்.

ராஜபக்ஷவின் பூர்வீக இல்லத்துக்கு சென்ற அவர், மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சந்திர ராஜபக்ஷவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். அதன்பிறகு அவரை அழைத்துக்கொண்டு மஹிந்த தனிஅறையொன்றுக்கு சென்றார். அங்கு இருவரும் சுமார் இரண்டு மணிநேரத்துக்குமேல்பலவிடயங்கள்தொடர்பில்பேச்சு நடத்தியுள்ளனர்.

டில்லியில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள கருத்தரங்கில் உரையாற்றுவதற்குரிய அழைப்பை நேரில் கையளிப்பதற்காகவே மஹிந்தவை, சுவாமி சந்தித்தார் எனக் கூறப்பட்டாலும் இதன் பின்புலம் குறித்து இராஜதந்திர மட்டத்தில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆசிய வலயத்தில் சீனாவின் ஆதிக்கம் கோலோச்சியுள்ள நிலையில், கொழும்பிலும் அந்நாடு ஆழமாக காலூன்ற முற்படுகின்றது. அந்நாட்டின் வங்கிக்கிளையொன்றை திறப்பதிலும் ஆர்வம்காட்டிவருகின்றது.

மறுபுறத்தில் எட்கா உடன்படிக்கை உள்ளிட்ட இந்தியத் திட்டங்களுக்கு இலங்கையில் எதிர்ப்புகள் வலுத்துவருகின்றன. மஹிந்தவின் சகாக்களே போர்க்கொடி தூக்குபவர்களின் பட்டியலில் முன்னணியில் திகழ்கின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தோற்கடிப்பதில் டில்லி ஆர்வம் காட்டியது என மஹிந்த பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருந்தார். டில்லிமீதான அதிருப்தி காரணமாகவே மஹிந்த தனது சகாக்களை தூண்டிவிடுகிறார் என மோடி அரசு கருதுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே இந்தியத் திட்டங்களுக்கு ஆதரவளிக்குமாறு சுமாமி, மஹிந்தவிடம் கோரினார் என்றும், மோடியின் சிறப்புச் செய்தியொன்றையும் அவர் வழங்கினார் என்றும் கூறப்படுகின்றது. அடிக்கடி சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டு அரசியல் களத்தை பரபரப்பாகவே வைத்திருப்பது சுவாமிக்கு கைவந்த கலை. எனினும், தமிழக மக்கள் இவரை கோமாளி அரசியல் வாதியாகவே பார்க்கின்றனர். ■

எதிரொலி Ethiroli

29 ஓகஸ்ட் - செப்.04- 2018



● வேதநாயகம் தபேந்திரன்

# அறம் பிறழும் மானிடராகி...



'மஹத்தயா பொஹோம ஸ்துதி'

அந்த நடுத்தர வயதுப் பெண்மணி தலை வணங்கி அந்த அரச அதிகாரியிடம் நன்றி செலுத்தினார்.

அப்படியே இன்னும் சிலர் தமக்கு அரச உதவியைப் பெற்றுத் தந்த அந்த அரச அதிகாரிக்கு நன்றி தெரிவித்தனர். சிங்களப் பொது மக்களின் நன்றி உணர்வில் நெகிழ்ந்து போனார் அந்த அதிகாரி.

இன்னும் சிலர் ஒன்றும் கூறாமல் போவதைக் கண்டார். அவர்களை அழைத்து மஹத்தயா பொஹோம ஸ்துதி என்று தலை வணங்கிய மக்களைக் காண்பித்து "நீங்கள் இது போல தலைவணங்கத் தேவையில்லை. நன்றி என்று ஒரு ஒற்றை வார்த்தை சொல்லி விட்டுப் போகலாம் தானே" என்றார்.

அதற்கு உதவி பெற்றவர்களில் ஒருவர் கூறினார் "நீங்கள் அரசாங்கம் தந்ததைத்தானே எமக்குத் தந்தீர்கள்.

அதற்கு நாம் இப்படி எல்லாம் கூற வேண்டிய தேவை இல்லை." மூவின மக்கள் வாழும் பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகம் ஒன்றின் அந்தத் தமிழ் அதிகாரி தனது தமிழ் மக்களது பண்பை நினைத்து வெட்கப் பட்டார். வேதனைப்பட்டார்.

நன்றி கூறுதல், பாராட்டுதல் பண்பில் மிகவும் வறிய நிலையிலுள்ள தமிழ் மக்கள் தொடர்பான அந்த உண்மைச் சம்பவம் பல இடங்களில் நாளாந்தம் நடந்தேறுகிறது.

கல் தோன்றா மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடியில் வந்த வள்ளுவரும் "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம். உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு " எனக் கூறியுள்ளார்.

ஆனால் அதற்குப் பின்பாக மனித நாகரீகப் படி நிலைகளைக் கண்ட இனங்கள் தமது நல்ல பண்புகளால் வேகமாக முன்னேறிச் செல்கின்றன.

உலகிற்கு நாகரீகம் போதித்த தமிழன் நற்பண்புகள் சிதைந்து போகும் நிலை கவலைக்குரியது.

ஒருவரது திறமையைப் பாராட்டினால் தாம் குறைந்து போய் விடுவோம் அவர் உயர்ந்து போய் விடுவார் என்ற தாழ்வுச் சிக்கல் இன்று பரவலாக பலரிடம் வந்து விட்டது.

அலுவலகத்தில் ஒருவர் தனது கடமையில் திறமை காட்டி வேலையை மிகவும் வினைத்திறனுடன் செய்தால் பாராட்டுவதற்குப் பலர் முன்வர மாட்டார்கள்.

இவர் என்ன பெரிதாகக் கிழித்து விட்டார். இதை நாம் செய்ய மாட்டோமா என்ற மட்டம் தட்டும் குணம் தான் வெளிப்படும். செய்த சாதனையில் குறைபாடு ஒன்றைக் கண்டுபிடித்து அதை விமர்சிப்பார்கள்.

பாடசாலை மாணவர் மட்டத்தில் இந்த நிலை பெரிதும் குறைவு. கள்ளமில்லா வெள்ளை உள்ளம் கொண்ட வயது அல்லவா.

பொதுச் சமூகச் சூழலிலும் இதே நிலை தான். முக நூல் போன்ற சமூக வலைத் தளங்களைப் பார்ப்போமாயின் ஒருவர் தனது வெற்றியை சாதனையைப் பகிர்வாராயின் வாழ்த்துக்கள், பாராட்டுக்கள், Congrats போன்றவற்றை Copy, Past செய்து தான் கொள்ளுவார்கள்.

அவரது திறமையைப் பாராட்டி ஒருசில வார்த்தைகள் எழுதிப் பதிவிட பலருக்கு பஞ்சி அல்லது பாராட்டினால் தாம் குறைந்து போய் விடுவோம். என்ற பயம்.

அது போலச் சிறந்த பேச்சு ஒன்றுக்கு கைதட்டிப் பாராட்ட மாட்டார்கள்.

உலகில் அறிவால் திறமையால் மிகவும் மேம்பட்ட இனங்களில் எமது தமிழினமும் ஒன்று.

ஆனால் பொறாமைப் பண்புகள் உச்சம் பெற்றதால் மேன்மை கொள்ளமுடியாத இனமாகப் போய் விட்டது. தமிழனுக்கு எதிரி யார் என்று கேட்டால் அன்றும் இன்றும் தமிழன் தான் என விடை பகர வேண்டிய நிலை.

ஒருவரது திறமையை பெருமனதுடன் பாராட்டும் பண்பு இல்லாதமையால் தமிழினம் வளர முடியாமல் வீழ்ந்து செல்லும் இனமாக மாறி விட்டது.

ஸ்பெயின்நாட்டு மாலுமி கிறிஸ்தோபர் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டறியப் போகிறேன் எனக் கப்பலில் புறப்பட்டார்.

உலகம் உருண்டை மேற்கிலிருந்து கிழக்காகச் சென்றால் கிழக்கே உள்ள இந்தியாவைக் காணலாம் எனக் கண்டறியலாம் எனக் கூறிப் புறப்பட்டார்.

கொடும் பயணத்தின் பின்பாக மேற்கிந்திய தீவுகளின் பஹாமாஸ் தீவின் கரையில் இறங்கினார்.

அங்கு ஸ்பெயின் நாட்டுக் கொடியை நாட்டினார். ஸ்பெயின் நாட்டிற்கு மீளத் திரும்பினார்.

அவருக்கு மாபெரும் பாராட்டு விழாவை ஸ்பெயின் நாட்டு பிரமுகர்கள் சிலர் ஏற்பாடு செய்தனர்.

அப்போது அவ் விழாவிற்கு வந்திருந்த சில பிரமுகர்கள் " இவர் என்ன பெரிதாகச் சாதித்து விட்டார்.

மேற்கிலிருந்து கிழக்காகப் போனால் இந்தியா வரும் தானே. பூமி உருண்டை. அதனால் இந்தியாவைக் கண்டது ஒன்றும் அதிசயம் அல்லவே என்றனர்.

"கடலில் நெடும் தூரம் போனால் கரை வரும் தானே. இது என்ன புதினம்" என்றவாறு எல்லாம் இகழ்ந்தனர்.

ஒரு பதிலும் கூறாமல் அமைதி காத்த கொலம்பஸ் தனது ஏற்புரை நேரத்தில் எழுந்து " எனது திறமையைப் பாராட்டிப் பேசியோருக்கு நன்றி.

எனது திறமையை களங்கப்படுத்திப் பேசியோருக்கு ஒரு பரிசோதனை வைக்கிறேன்.

அதில் நீங்கள் வெற்றி பெற்று விட்டால் அமெரிக்காவைக் கண்டறிந்தது பெரிய விடயமல்ல என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

இதோ இந்த மேசையில் 5 முட்டைகளை வைக்கிறேன். இந்த முட்டைகளில் ஒன்றை இந்த மேசையில் விழாமல் நிறுத்தி வைக்க வேண்டும்.

கொலம்பசைக் குறை கூறியோர் ஒவ்வொரு வராக எழுந்து முட்டையை எடுத்து நிறுத்தி முயற்சித்தனர். முடியவில்லை. ஒன்றிரண்டு முட்டை விழுந்து உடைந்து போனது. தம்மால் முடியாது என்றனர்.

கொலம்பஸ் எழுந்தார். முட்டை ஒன்றை எடுத்து அருகிலுள்ள பூச்சாடி ஒன்றிலிருந்து சிறிதளவு மண்ணை எடுத்து மேசையில் வைத்தார்.

பின்பு முட்டையை அம் மண்ணின் மீது வைத்தார். முட்டை கீழே விழாமல் ஆடாமல் அசையாமல் நின்றது.

கொலம்பசை மட்டம் தட்டியோர் அட இதுவா நாங்கள் இதைச் செய்திருப்போமே என்றனர்.

கொலம்பஸ் கேட்டார் "நான் உங்களை முட்டையை மேசை மீது நிறுத்தத் தானே சொன்னேன். மண்ணை எடுக்காமல் நிறுத்தச் சொல்லிச் சொல்லவில்லையே" என்றார்.

இது போலத் தான் நானும் கிடைக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சமயோசித புத்தியாலியால் அமெரிக்காவைக் கண்டு பிடித்தேன். உங்களை இந்த செயலைச் செய்ய வேண்டாமென நான் கூறவில்லையே எனக் கொலம்பஸ் கூறினார்.

அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு ஒரு சமயம் உரையாற்றிய போது கூறினார் " போர் ஆரம்பிப்பதற்கு முன்பு தமிழர்களிடம் நிறைய நல்ல பண்புகள் இருந்தன. போர் ஆரம்பித்து காலம் செல்லச் செல்ல தமிழர்களிடம் இருந்த நல்ல பண்புகளைச் சிங்கள மக்கள் எடுத்து விட்டார்கள்.

சிங்கள மக்களிடம் இருந்த கூடாத பண்புகள் பலவற்றைத் தமிழ் மக்கள் எடுத்து விட்டார்கள்." யார் என்ன குறை சொன்னாலும் இக் கூற்று உண்மையானதாகவே உள்ளது.

அடுத்தவர் திறமைகளைப் பாராட்டுதல் என்ற நற்பண்பை நாம் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இந்தப் பண்பினை முன்பள்ளி ,பாடசாலை மட்டங்களிலிருந்து நாம் கட்டி எழுப்புதல் வேண்டும்.

இல்லையேல் தமிழனின் தாழ்வு இன்னுமின்னும் அதிகரித்து பண்பாட்டு வறுமையில் உச்சமுள்ள இனமாகி விடுவோம். ■

# நாறப்போகிறது நாயாறு!



● நவீன சவாரித்தம்பர்

இப்ப கிட்டடியில முள்ளியவளைப் பக்கம் ஒருக்கா, என்ர கூட்டாளி ஒருத்தனுடையவீட்டை போனனான் பாருங்கோ. கூட்டாளி வீட்டு முற்றத்துக் கும்பிமணலுக்கு மேலை இருந்து கொண்டு, அவனும் நானும் பலதும் பத்தும் கதைச்சுக் கொண்டிருக்கேக்கை கடற்தொழில் செய்யிற ஆட்களின்ர கதை வாயில வந்திட்டுது.

நாயாற்றில எங்கட கடற்தொழிலாளி மாருடைய மீன் வாடியளை எரிச்ச ஆட்கள் பொலிஸ் பாதுகாப்போடை, தங்கட மூடை முடிச்சுக்களை அப்புறப் படுத்தினதாக கதையொண்டு உங்கினேக்கை அடிபட்டது. அது மெய்யோ...பொய்யோ...எண்டு கேட்டன்.

அதுக்கு அவன் சிரிச்சுப்போட்டுச் சொன்னான்.

"திண்டு ருசி கண்ட பூனை ஒரு நாளும் அடுப்படியைவிட்டு அங்காலை இஞ்சாலை நகராது. ஏதோ கண்துடைப்புக்கு ஒருசில வாடியளை அப்புறப்படுத்துற வேலையள் நடந்திருக் கலாம். ஆனால், பிரச்சினை முற்றுமுழுதாக முடிஞ்சிட்டுதெண்டு நினைக்கக் கூடாது. பூனையளின்ர விளையாட்டு இனியும் தொடரத்தான் செய்யும்..."

எனக்கு அவன் சொன்னது நியாயமாத்தான் மனசுக்குப் பட்டுது.

நாயாற்றுச்சனம் இன்னொருவருடைய கடல் எல்லைக் குள்ளை புகுந்து, அவையளின்ர வளங்களைச் சுரண்டிக் கொண்டு வரேல்லை. அவையள் பரம்பரை பரம்பரையாக தங்கட முல்லைத்தீவுப் பெருங்கடலிலைதான், தொழில் செய்தவையள். இப்ப அந்த ஆட்களின்ர தொழிலிலை இன்னொருத்தன் வந்து கைவைச்சு கபளீகரம் செய்யிறது அவையளுக்கான விதியுமில்லை பழியுமில்லை. இது அவையள் தங்களுக் கெண்டு தெரிஞ்செடுத்த அரசியல்வாதிகளாலைதான் இப்ப நாறிக்கிடக்குது நாயாறு.

தென்னிலங்கையில இருக்கிற ஒரு பிக்கு தன்ர ஆளணி பேரணியளோடை வாகனங்களில வந்து, நாயாற்றில இறங்கி, விகாரை கட்டுறதுக்கு ஆர்ப்பாட்டம் செய்ய முடியுதெண்டால், சொந்த மண்ணுக்குள்ள குந்தியிருக்கிற எங்கட எம்.பிமாரும் அவையளின்ர எடுபிடி களும் இவையளை மேய்க்கிற நெத்தியில பொட்டுப்பிறை வைச்ச ஆசார சீலர்களும் ஒண்டாச்சேர்ந்து சிங்களவர் வாடியளை எரிச்ச அடுத்த நாளே அங்கைபோய் ஒரு பிரளயத்தை உண்டுபண்ணி, தங்கட ஒற்றுமையைக் காட்டிப்போட்டு வந்திருக்க வேணும். ஏன் போகேலை? மாவீரர் தினத்துக்கும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கும் முன்னுக்குப்போய் நிண்டுகொண்டு, பந்தம் கொளுத்துறதுக்கும் விளக்கேத்துற துக்குக்கும் அடிபுடிப்படுகிறவை ஏன் நாயாற்றுப் பக்கம் போய் தங்கட 'கெட்டித்தனத்தை'க்காட்ட பயப்படுகினம் எண்டது ஒண்டுமாத் தெரியாமல் கிடக்குது.

ஆனால், இந்தவிசயத்தில வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் எண்டவரைப் பாராட்டத்தான் வேணும். அந்தாள் கடற்தொழில் செய்யிற சனங் களுக்கு ஏதாவது ஒண்டெண்டால், ஓடிவந்து சனத்தோடை சனமாக நிண்டு போராடுறார், கதைக்கிறார், வெளி உலகத்துக்கு தெரியப்படுத்துறார்.

அதோடை இன்னுமொரு விசயத்தை சொல்லவாறன்.

நாயாற்று வாடியளை எரிச்சதைக் கேட்கப்பறைய ஆட்களில்லை. வடமராட்சியில எங்கட தொழிலாளர்மார் கடலட்டை பிடிச்சது குற்றமெண்டு குளறிக் கூத்தாடுகினம். அப்ப நாயாற்றுக்கடலில நேற்று வந்தவன் மட்டும் கத்தரிக்காயும், கறணைக்கிழங்குமே பிடிக்கிறான்? இது என்னையா நியாயம்?

ஆனால், ஒண்டுமட்டும் தெளிவாய் தெரியுது. எங்கட அரசியல்வாதியள் ஒண்டாக, ஒற்றுமையாகச் சேர்ந்து நாயாற்றுப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறுவார்களேயானால், எங்களுக்குப் பின்னால வாற சந்ததிக்கு நிம்மதியிருக்காது...எண்டது ஒருபுறம் கிடக்க, நாயாறு இன்னும் 'நாறிப்' போய்க் கிடக்கும் எண்டதையும் உந்த அரசியல்வாதியளுக்கு சொல்லி விளங்கப்படுத்தத் தேவையில்லைக் கண்டியளே! ■

சிறுகதை

# வேரோடு பிடுங்கினாற் பின்னரும்





பிரமிளா பிரதீபன்

எப்போதும் இல்லையென்றாலும் எப்போதாவது தன் வலக்கையின் நான்கு விரல்கள் கொண்டு மெது வாய் ஸ்பரிசித்துத் தலையை வருடி விடுவான். அப்ப டியே சுவர்க்கத்துக்குள் நுழைந்தாற் போல் உடலெங் கும் மின்சாரம் பரவி அரை மயக்க நிலையில் கண்கள் சொக்கும்.

ஒரிரு நிமிடங்கள்தான். சடாரென வருடலின் வேகம் தணிந்து விரல்கள் சிறிது சிறிதாய் செய லற்றவைகளாகி ஓய்ந்து போய் தலையில் சரிந்து கிடக்க அவன் தூங்கிப் போயிருப்பான்.

சுகபோதையாய் திரண்டு தழுவிய தூக்கத்தின் அரை குறை ஆரம்பம் எட்ட ஓடிப்போகும். மீண்டும் அந்த வருடலுக்காய் ஏங்கி அவன் கைகள் பிடித்து அசைத்து பார்ப்பாள். மெல்லமாய் உலுக்கிப்பார்ப்பாள். அவன் முழுவதுமாய் தூங்கி முடித்திருப்பான்.

* * *

முன் வாசலில் செழிப்பமாய் வளர்ந்திருந்த கறிவேப் பிலைச் செடியை வேருடன் அப்படியே பிடுங்கி யெடுத்திருந்தாள் பாட்டி.

"நல்ல நாளும் அதுவுமா முன்னுக்கே கறுவப்பிள்ள செடி ஆகாது"

படபடத்தபடி ஆணிவேருடன் ஒட்டியிருந்த சிறிதளவு மண்ணைக் கீழே சிந்தி விடாமல் கைகளால் அமத்திப் பிடித்துக்கொண்டபடி வீட்டின் தெற்கு மூலையில் வெட்டி வைத்திருந்த குழிக்குள் அந்தக் கன்றை அப்படியே பொருத்தினாள். புதிய மண் சிறிதளவையும் வாரிக் குழியை நிரப்பி தட்டித்தட்டி இறுக்கினாள். இறுதியாய் "உசுறுத்தண்ணி" என்று கூறியபடியே ஒருகைப்பிடி நீரை சூழவும் தெளித்து. தண்மூடி கும்பிட்டுக்கொண்டாள்.

"கன்னுக்கு மண்ணு புடிக்கனும் பொண்ணுக்கு மனசு புடிக்கனும்"

முணுமுணுத்தபடியே கற்கள் சிலதைப் பொறுக்கி அணையாக வைத்தாள்.

குறித்த நேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் பெரும் ஆரவாரத்துடன் கூட்டமாக வந்து சேர்ந்திருந்தனர்.

முதன் முதலாய் அவனுடன் தனித்துப் பேசிய அன்றைய சந்தர்ப்பமொன்றில், நீண்ட நேரத் தயக்கத்துக்குப் பின் ஒரு கட்டளையுடனேயே அவனை மணக்க சம்மதித்திருந்தாள்.

அவனும் அக்கட்டளைக்கு இணங்கியிருந்தான். ஆனால் அவனுக்கு ஒரே சிரிப்பு. கொஞ்சமும் எதிர்பாரா விண்ணப்பமது.

"நான் தூங்கும் வரை தலை வருடிவிட முடியுமா?" என்றாள்.

"என்ன?"

அவனுக்குச் சரியாகப் புரியவில்லை.

"தூங்கும் வரை தலை வருடிவிட முடியும்னா எனக்குச் சம்மதம்"

'என்ன இது?" என்றான்.

"அப்ட் பழகிட்டேன். பாட்டி அம்மா சமயத்துல அப்பா கூட- இப்டி யாராவது தலை வருடினாதான் தூக்கம் வருது"

அவன் கண்ணடித்தபடி சிரித்தான். அவளும்.

வீட்டில் எல்லோருமாய் சந்தோசமாய் பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

வீடெங்கும் அவளது புகைப்படங் கள் வயது வித்தியாசங்களுடன் ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருந்தன.

* * *

கொடுத்த வாக்கை மீறவில்லை அவன். சில சந்தர்ப் பங்களில் சிரித்துக்கொண்டே சொல்லியும் காட்டுவான்.

"தூங்குற வரைக்கும் தலை வருடுறேன்னு தானே சொன்னேன். நான் தூங்குற வரைக்கும்"

பழக்கமற்ற முடியாததொன்றை செய்ய அவனுக் கும் இயலவில்லை. அவளுக்கும் இயலவில்லை.

மாற்றங்களால் தானே வாழ்வு நகர்கின்றது!

தலை வருடலில்லா தூங்கும் முறைகளைப் பல வழிகளில் தேடினாள். இலக்கங்கள் எண்ணுதல், டீவி பார்த்தல், கண்மூடி அசையாமல் கிடத்தல், ஆழ்ந்து யோசித்தல், தலை மாற்றிப்படுத்தல்-

தினமொரு புதுமுறையில் எப்படியோ தூங்கிக் கொண்டாள். இதுதான் முறையென்று எதுவொன்றுக் கும் பழகி அடிமையாதல் பெருந்தவறு தானோ !

முழுவதுமாய் விளக்குகள் அணைத்துக் கடும் இரு ளின் துணைக்கொண்டு தூங்கிப்போதல் ஒரு வகை யில் எளிதாகவிருந்தது. ஆனாலும் நேரம் செல்லச் செல்ல இருள் சற்றே பரிச்சயமாகிக் காட்சிகள் புலப் பட்டு அந்தக் கருமைக்குள்ளும் விசித்திரமான உல கொன்று விரியத் தொடங்கும்.

எதுவித இடர்களுமற்று விடியும் வரை நித்திரை கொள்ளுதலும் ஒருவகையான வரம்தான்.

விடிந்ததும் தாய்வீட்டுக்குப் போகும் பதை பதைப்புத் தூக்கத்தை அண்மிக்க முடியாமல் தடுத் தது. சில மாதங்களுக்கு பிறகான பிரயாணம் இது.

* * *

பலத்த வரவேற்பும், விருந்தும், நிறைவான மகிழ் வும்.

இதுவென்று சொல்லவியலா வெறுமையொன்று வீடெங்கும் வியாபித்திருந்தது.

தெற்கு மூலையில் வளர்ந்து நின்ற கறிவேப்பிலைச்செடி சற்றே உயரம் கூடியும், புதிய பல கிளைத்தோன் றல்களுடனுமாய் தள தளத்த புதியதொரு செழிப்பத்துடன் இருப்பதாய் அவளுக்குத் தோன்றி யது.

"பட்டு போயிரும்னு பயந்துட்டே புடுங்கி வேற எடத்துல நாட்டினேன். பாத்தியாடி - கிடுகிடுன்னு வளந்து செழிப்பமா நிக்கிறத! "

பாட்டி வாஞ்சையுடன் இலைகளை வருடிக்கொடுத் தாள்.

■

நூல் அறிவோம்

# வர்ரா எழிலுடன் ஜூலை மாத ஜீவநதி!





● உமைபாலன்


வாழ்க்கையின் நிலைகருதி அவ்வப்போது சில இலக்கிய சஞ்சிகைகள் தோன்றுவதும், பின்பு சில காலம் நிலைத்துவிட்டு மறைந்து போவதும் கடந்துபோன காலங்களில் நிகழ்ந்த கவலைகளோடு கூடிய ஒரு பதிவாகும்.

தற்கால இணையத்தள விரிவாக்கல்க ளும், நவீன தொடர்பாடல் பரம்பல்களும் விருத்தியடைந்துள்ள நிலையில், "நூல் களைத் தேடி வாசித்தல்" என்பது மிகமிக அரிதாகவே காணப்படுகின்றது. அதே சமயம் இந்த நவீன விரிவாக்கத்தில் "விளிம்பு நிலை வாசகர்கள்" உள்ளேகித் தங்களது இலக்கிய வாசிப்பையும் அதற் கான தேடல்களையும்பெற்று, அப்பால் நகர்வது என்பது இயலாததொருவிடயம். இந்த இயலாதவர்களுக்காகவேயென்று அவர்களின் வசதிக்கேற்ப, வாழ்க்கையின் நிலைகருதி அவ்வப்போது சில இலக்கிய சஞ்சிகைகள் தோன்றுவதும், பின்பு சில காலம் நிலைத்துவிட்டு மறைந்து போவதும் கடந்துபோன காலங்களில் நிகழ்ந்த கவலைகளோடு கூடிய ஒரு பதிவாகும். ஆனால்,சில இலக்கிய சஞ் சிகைகள் இலக்கியத்துக்காகவும், விளிம்பு நிலை வாசகர்களுக்காகவும் சுயலாப, வியாபார நோக்கம் கருதாது, வெளிவந்து கொண்டிருப்பது கண்கூடு. அந்தவகை யில், யாழ். குடா நாட்டில் இருந்து வெளிவரும் கலை இலக்கிய மாதி சஞ்சிகையான "ஜீவநதி" ஜூலை மாதமும் தனக்கே உரித்தான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதைக் காண முடிகின்றது. சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், நூல் விமர்சனங்கள், பத்தி எழுத்து, பேசும் இதயங்கள் (வாசகர் கடிதங்கள்) போன் றவை மிகவும் பயனுறுதிமிக்கதாக அமைந் துள்ளன. மொத்தம் இருபத்தியிரண்டு படைப்பாளர்களது ஆக்கவியல்களைத் தாங்கி, வெளிவந்திருக்கும் இந்த ஜூலை மாத ஜீவநதி சஞ்சிகையின் முன் அட் டையை த. ரிலக்சனது படங்கள் அலங் கரிக்கின்றன.

மொத்தத்தில் வாசிப்புத்தளத்தை விரும் பும் ஈழத்து இலக்கிய வாசகர்கள் இந்த ஆடி (ஜூலை) மாத ஜீவநதியைத் தேடிச் சென்று வாசித்தல் நன்று.

■





# நிலவிடுவ
# நல்லாட்சி

● செந்தூரி

**1994** ஓகஸ்ட் 16 , காங்கேசன்துறைக் கடற்பரப்பில் அதிகாலை 12 .35 கேட்ட பேரோசை வடபகுதிக்கான கடற்கட்டளை தலைமையகக் கப்பலும் - செல்வி புஸ்பகலா துரைசிங்கம் எனும் 21 வயதுடைய மெல்லியளும் மோதிக்கொண்ட போதில் பிறந்த அதிர்வினால் உருவானது.

காங்கேசன்துறை துறைமுகத்தின் 45 அடியாளத்து நீர்ப்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, 326 அடி நீளமும் - 52 அகலமும் கொண்ட - ஏழாயிரம் தொன் எடையைத் தாங்கிப்பயணிக்கும் கொள்ளளவுடைய, அதிநவீன ராடர்களை ஏந்திக்கொண்டு இந்து சமுத்திரக் கண்காணிப்பை நிகழ்த்தும் மிகப் பெரிய தலைமைக் கட்டளைக் கப்பலை - தனி மனிதனொருவனால் தகர்க்க முடியுமென்று இலங்கை கடற்படையும் - கட்டளையதிகாரிகளும் கனவிலும் நினைத்திருக்கவில்லை!

"அங்கயற்கண்ணி" என்ற ஓர்மத்துக்குள் இருக்கும் பெருவலிமையை -மனோதிடத்தை அவளின் சகோதரர்களான என்னையும் சேர்த்த எங்களாலே கூட விம்பப்படுத்த இயலாத போது, அவள் சார்ந்த தமிழினத்தின் எதிரிகளால் மட்டும் எங்ஙனம் சீரணிக்க முடியும் இத்தகைய அசாத்தியத்தை??

"நல்லூரில திருவிழா நடக்கிற காலத்தில தான் நான் போகவேணும் - அப்ப தான் என்ர நினைவு நாளுக்கு வீட்டை போற பிள்ளையளுக்குச் சாப்பாடு குடுக்க அம்மாட்ட கையில கச்சான் வித்த காசு இருக்கும்" - அங்கயற்கண்ணி கடலேற முன்னைய பயிற்சிக் காலங்களில், தனது தோழிகளிடம் பகிர்ந்து கொண்ட நெஞ்சைப்பிழியும் உண்மை அது.

காலாகாலமாக அடிமையாகிக்கிடந்த காங்கேசன் துறையையும் - மயிலிட்டித் துறையையும் விடுவிக்கத் தன் பொற்பாதங்கள் பதித்து வருகை தந்த நல்லாட்சியின் தேவன் கௌரவ மைத்திரிபால சிறிசேனாவை வரவேற்க, சிங்களப் பாரம்பரியத்துடனான வெற்றிலைக்கூறை கைகளிலேந்தி நின்ற யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மைத்திரியின் பக்கத்திலிருக்கும் ஆசனத்துக்கு அந்தரப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாவருக்கும் புஸ்பகலாவையோ - கச்சான் விற்ற அவளது அம்மாவையோ கொஞ்சமும் நினைவில்லை?

இந்திய அமைதிப்படைக் காலத்துக்கு முன்பே சொந்த நிலத்தின் பூர்வீகிகளை ஆயுதத்தால் துரத்தி விட்டு காங்கேசன்துறை - மயிலிட்டி - மாவிட்டபுரம் - பலாலி பிரதேசத்தைக் கையகப்படுத்தி - அடிமைகொண்ட இலங்கை அரசபயங்கரவாதத்துக்கு இப்போதாவது நல்லெண்ணம் பிறந்ததே என்று நாங்கள் மகிழ்ந்தால், அதுவும் மாயையே!

வலிகாமம் வடக்கின் குறிப்பிட்ட கடலெல்லையுடைய பிரதேசங்களில் தற்சமயமும் தேவையான அளவு ஆயுதப்படைகளின் தலைமையக முகாம்களைப் பலப்படுத்தி அமைத்துக்கொண்டு - அவற்றை சூழ முன்னைய காலத்தில் பாதுகாப்பு பிரச்சினைகளுக்காக கையகப்படுத்தியிருந்த தனியார் காணிகளை மட்டுமே விடுவித்தும் - விழாக்கொண்டாடியும் - ஆத்திரப்படவேண்டிய தமிழர் பிரதிநிதிகளை அரவணைத்து சாட்சிகளாக கக்கத்தில் வைத்துக்கொண்டு ஏய்த்து மகிழ்கிறது, நல்லாட்சி!

ஆக, விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக்குடியமரும் மக்களும் - மக்களுக்கான சிவில் நிர்வாக கட்டமைப்புக்களும், பலப்படுத்தப்பட்ட இலங்கைத் தரைப்படை மற்றும் இலங்கை கடற்படை முகாம்களுக்கான இன்னுமொரு வகை பாதுகாப்பு போர்வை.

மக்களுக்குள் - இராணுவக் கட்டமைப்பை இரண்டற கலந்துவிடுவதற்குரிய சிங்களச் சதிக்கு வலி. வடக்கு மக்கள் மீண்டுமொருமுறை அரச பயங்கரவாதத்தின் ஏவலுக்கு சாட்சியாகியிருக்கிறார்கள், மீள்குடியேற்றத்தின் பிறகும் என்பதே உண்மை!

'காங்கேசன்துறை விடுவிப்பு' - 1994 லேயே அங்கயற்கண்ணியின் இலக்காயிருந்தது.

அவள் ஆசைப்பட்டது போலவே இதுவும் நல்லூர் திருவிழாக்காலமே!

நாமெவருமே தெரிந்து கொள்ள முயற்சிக்காத, அங்கயற்கண்ணியின் அம்மா இன்னமும் நல்லூரில் கச்சான் விற்றுக்கொண்டிருக்கலாம் அல்லது நல்லூர் மாநகரசபையின் பெருமுதலாளித்துவ கச்சான் கடைக்குரிய மூன்றரை இலட்சம் வரை மதிப்புள்ள ஏலத்தொகையைப் புரட்ட முடியாமல் வீட்டோடு முடங்கியிருக்கலாம்.

அங்கயற்கண்ணிக்குப் பிறகு ஆகக் கடைசியாக, 'காங்கேசன்துறை விடுவிப்பை' இலக்காகக் கொண்டு அமைதிவழியில் போராடிய மக்களை - சிற்றூர்திக்குள் வைத்து கழிவோயில் ஊற்றியெறிந்து அவமானப்படுத்தி அசிங்கப்படுத்தி திருப்பியனுப்பியதும் அதே அரச பயங்கரவாதம் தான்.





கட்டியிருந்த ஆடைகளில் வீசியெறியப்பட்ட கழிவோயிலின் கருமையும் - பிசுபிசுப்பும் இன்னமும் அகலாமல் நினைவிலிருக்க, மைத்திரியை கட்டிப்பிடிக்கும் - கைகொடுக்கும் ஆர்வத்தை அடக்க முடியாமல் தவிப்பதற்கு 'தமிழ்த்தேசிய அரசியல்' - 'அபிவிருத்தி அரசியல்' - 'மென்வலு அரசியல்' - 'நல்லாட்சி முட்டுக்கொடுப்பு' - 'வடக்கு -கிழக்கு அபிவிருத்தி செயலணி' ஆகிய சொல்லாடல்களை விட மிகப்பொருத்தமானது, "எச்சை"!

### மயிலிட்டி - வரலாற்றுத் தொடர்ச்சியுடைய மீன்பிடித்துறைமுகம்

மயிலிட்டித்துறை - யாழ்ப்பாண இராசதானியை சங்கிலியமன்னர்கள் ஆண்ட காலத்திலிருந்து மீன்பிடித்துறைமுகமாக பராமரிக்கப்பட்ட வரலாற்றுப் பெருமையுடைய கிராமம்.

இரண்டாம் சங்கிலியன் காலத்தில், மயிலிட்டி பிரதேசத்தை தேவர் வம்சத்துக்குரிய மூன்று நிலவுடையார்களின் ஆட்சிக்குரிய பிரதேசமாக பிரித்து நிலவுடைமையும் - மக்கள் பராமரிப்பும் - மீன்பிடி தொழிலும் - வருமானவரிசேகரிப்பும் பொறுப்புக்களாக கொடுக்கப்பட்டிருக்கின்றன.

குறித்த முத்தேவர்களின் பெயர்களிலேயே இவ்வூர்களின் பெயர்களும் வழங்கிவந்திருந்தன.

பிற்காலத்தில் காங்கேசன்துறை ஐந்தாம் வட்டாரத்துக்குரிய பிரதேசம், வீரமாணிக்கதேவன்துறை எனும் பெயரோடு வீரமாணிக்க தேவராலும் -

ஆறாம் வட்டாரப் பகுதி பெரியமாணிக்கத் தேவன்துறை எனும் பெயரோடு பெரிய்மாணிக்க தேவராலும் -

மயிலிட்டி கிராமசபையென பிறகுவழங்கிய பிரதேசத்தின் ஒன்பதாம் - பத்தாம் வட்டாரங்கள், நரசிம்மதேவன்துறை என நரசிம்மதேவராலும் பராமரிக்கப்பட்டன, என்கிறது வரலாறு.

யாழ்ப்பாண இராசதானியின் பெருமைகூறும் நூல்கள், மயிலிட்டித்துறையின் மீன்வளத்தையும் -கப்பல்போக்குவரத்தையும்-படகுப்போக்குவரத்தையும் - முத்துக்குளிப்பு வருமானங்களையும் நினைந்து பெருமை கூறுகின்றன.

மன்னராட்சி காலத்தில் கடல்வாணிபத்துக்கும் புகழ்பெற்ற மயிலிட்டித்துறைமுகம், பின்னர் தொழிலால் குறுகி மீன்பிடித்துறைமுகமாக தனக்கென பெயர் கொண்ட தனித்துவ துறையாக மிளிர்ந்திருக்கிறது.

உபயசேகரதோட்டம், கொற்றாவத்தை, கொட்டுப்பள்ளம், வைத்தியசாலையடி, வேரவில், வேரவில் வடக்கு,




# டுவிப்பு விழாக்களும் சிக்கு துடக்கு கழிப்பும்

வேல்வீதி, துறை, பணிவு, புதுத்தெரு, தோப்பு, பாதிரியடைப்பு, திருப்பூர், கிழக்குத்துறை, பழந் துறை, காளவாய்,

காலங்காடு, கரையான்காடு, குடியேற்றம், தச்சப் பகுதி ஆகிய வெவ்வேறு குறிச்சிகள் இணைந்ததே, மயிலிட்டி.

ஆழ்கடல் மீன்பிடியில் சணல்வலைத்தொழில் என்ற மரபுசார் மீன்பிடிமுறைக்கு பெயர்போன துறையாக இவ்வூரின் மீனவமக்கள் பெயர்பெற் றிருந்தார்கள்.

சணலை அறுவடைசெய்து - கடல்நீரினுள் மூழ்கி ஊறவைத்து - அடித்துபிரித்து - பஞ்சாக்கி - நூலாக்கி - நூலை கண்டல்பட்டிடையிட்டு அவித்து உர மூட்டி - சாயமூட்டி - வலையாக்கி சுயதொழிலோடு வாழ்ந்த உழைப்பாளர்களை கொண்ட மயிலிட்டித் துறைக்கு யாழ்மாவட்டத்தின் அயல் தீவுகளிலிருந் தும் மக்கள் தொழிலுக்காக வந்து தங்கிப்போயி ருக்கின்றார்கள்.

சணல்வலைத்தொழிலை விட, கட்டுமரவலை - வெள்ளவலை - சூடவலை - காவித்தொழில் - பெருந்தூண்டல்வலை - பறவைவலை - சிறுதூண் டல்வலை - படுப்புவலை - வீச்சுவலை ஆகியன, நவீன இயந்திரகால மீன்பிடிக்கு முன்னர் மயிலிட்டித் துறையில் பயன்படுத்தப்பட்ட இயற்கைநேய மர புக்குரிய மீன்பிடிமுறைகளுக்குரிய பெயர்கள்.

1964 டிசம்பரில், மயிலிட்டித் துறையை தாக்கிய சூறாவளி பெருமளவான பொருளாதாரத் தாக்கத்தை யும் அன்றாட வாழ்க்கை பாதிப்பையும் ஏற்படுத்தி யது. மயிலிட்டிக்குரிய மக்கள் 56 பேர் அகால மரணமெய்தினார்கள். படகுகள், வலைகள், தொழி லுபகரணங்கள் உட்பட பெருமளவான சொத்தழி வும் நேர்ந்தது. சூறாவளிக்கு பிறகான மயிலிட்டியின் மீள்கட்டுமானம் மந்தகதியில் இடம்பெற்றுக்கொண் டிருக்க 1983 இனக்கலவரத்தின் பிறகு இவ்வூரின் மக்களின் நிம்மதியான நாளாந்தவாழ்க்கையில் கண் ணூறு விழுந்தது. இந்திய அமைதிப்படைக்கு முன்னான காலத்திலிருந்து பலாலியை தரைப்படை முகாமாக தெரிவுசெய்த இலங்கை ஆயுதப்படை களின் தளமாக்கலுக்கு, பலாலியின் எல்லையி லிருந்த மயிலிட்டி கிராமமும் பலியாகியது. தொடர்ச்சியான இராணுவ அத்துமீறல்களாலும் - முன்னேற்றங்களாலும் மயிலிட்டி மக்கள் இடம் பெயர தொடங்கியதுடன், 1990 இல் அவ்வூரிலி ருந்து ஒருவர்கூட எஞ்சாமல் முழுமையாக விரட்டி துரத்தப்பட்டனர்.

**வலி வடக்கு மீள்குடியேற்றத்தில் மயிலிட்டி**

பலாலி இராணுவத்தளத்தினதும் - விமானப் படை ஓடுதளத்தினதும் பாதுகாப்பினை கருதி பலாலியையும் அதன் அயலூர்களையும் முற்றிலும் விடுவிக்காத போக்கு, இலங்கை அரசபடைகளின் வழக்கமான சாக்குபோக்குகளில் முதன்மையானது.

பலாலி உட்பட வளலாய் - மயிலிட்டி - தையிட்டி - வசாவிளான் - வறுத்தலைவிளான் - கட்டு வன் ஆகிய பிரதேசங்களில் பலாலியின் எல்லைக் குரிய குறிச்சிகளின் மீதுள்ள முட்கம்பி வேலிகளை அகற்றாமல், அந்த மக்களின் சொந்தநிலத்தினுள் அனுமதிக்காமல் சுமார் 28 வருடங்களாக அகதிப் பட்டத்தோடு அலைய விட்டிருக்கிறது, அரச பயங் கரவாதம்.

மேற்சொன்ன ஊர்மக்களோடு சேர்த்து, மாவிட்டபுரம் - கீரிமலை - காங்கேசன்துறை - தெல்லிப்பழை ஆகிய ஊர்களிலிருந்தும் இடம் பெயர்ந்து மூன்று தசாப்தகாலங்களாக அகதி முகாம் களிலும் - குடியேற்றத் திட்டங்களிலும் - வாடகை வீடுகளிலும் வலிகாமம் வடக்கின் மக்கள் பட்ட துயரங்கள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை.

பாதிக்கு மேலே குடும்பங்களாக புலம்பெயர் நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரிய தோடு, நிரந்தரமாக நிலத்தை விட்ட கன்று - அகலாத ஊரின் நினைவுக ளோடு காத்திருக்கும் மக்களும் பலர்.

2010 இல் வலிவடக்குக்கான மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட தாக அரச கணக்குகள் எண்ணிக்கை காட்டினாலும் கூட, மயிலிட்டிக் கிராமம் தனது முதலாவது நில விடு விப்பினை அனுபவித்தது, 2017 ஆடி மாதத்திலேயே!

போர் நிறைவுற்று ஏழு வருடங் களுக்கு பிறகும் தனது சொந்த நிலத் தில் குடியேறுவதற்கான உரிமையை பெறுவதற்காக ஆள்வோனிடம் கையேந்தி நிற்கவேண்டிய அவலத்தை இம்மக்கள் அனுபவிப்பதற்கான காரணம் சிறுபான்மையாயிருப்பது மட்டுமல்ல? சிறுபுத்தி கொண் டோரை வடக்குத் தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளாக தெரிவுசெய் ததும் தான்!



அந்தந்த மக்களின் ஆட்சிக்குரிய தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி வைத்ததோடு மட்டுமல்லாது - குறித்த காணிகளை விடுவிக்கும் நிகழ்வை கொண் டாட்டமாக நடாத்தி - மக்களோடு சேர்த்து மக்கள் பிரதிநிதிகளையும் விருந்தினர்களாக அழைத்து மகிழும் 'சுயஇச்சை', இலங்கை அரசியல் வரலாற் றில் தெளிவான சுயலாப அரசியல் விளம்பரத்துக் குரியது.

கூடுதலாக, "எங்களால் விடுவிக்கப்பட்டது" போன்று பொருள்படும் வர்ண சுவரொட்டிகளை - படங்களோடு ஒட்டிப்புகழ் தேடும் அரசியல் இன்ன மும் உயரிய அசிங்கத்துக்குரியது.

மயிலிட்டி விடுவிப்பும் - மயிலிட்டி துறைமுக அபிவிருத்தி அங்குரார்ப்பணமும் சாமானியனை பொறுத்தவரை வெறும் காணிக்கையளிப்பு நிகழ்வா கலாம்.

ஆனால் பிந்திய வருகையான தமிழ்த்தேசிய கூட்டமைப்பையும் சேர்த்த அரச ஒட்டுக்குழுக்களுக் கும் - நல்லாட்சி அரசுக்கும் வலிவடக்கின் நில விடுவிப்புக்கள் நிகழ்த்தும் அர்த்தங்கள் ஆயிரமா யிரம்.

"அடுத்த வடக்கு முதலமைச்சர் வேட்பாளர் தெரிவில் ஏகபோகம்",

"வடக்கு அபிவிருத்தி செயலணியில் பொறுக் கித்தின்னுதல்",

"சீனாவுக்கு பதிலாக இந்தியாவிடம் பலாலியை தாரை வார்த்தல்",

"யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழு வில் முதன்மை பெறல்",

"அரசவிசுவாசம் மிக்க கூட்டமைப்புக்கு வெளியே நிற்கும் மாகாணசபை உறுப்பினர்களை ஒன்றிணைத்தல்",

"காசுவாங்கிக்கொண்டு கறுப்புக்கொடி ப்ராஜெக்ட் நிர்வாகிகளை சி.விவி க்கு எதிராக திருப்புதல்",

"சட்டத்தரணி சேரின் கூட்டமைப்பு தலைமைத் துவத்தினை ஒத்திகை பார்த்தல்",

"வடக்கு மக்களிடம் எஞ்சியிருக்கும் சுயநிர்ணய தீர்மானங்களை பறித்து முழுமையான அபிவிருத்தி அரசியல் விரும்பிகளாக திருப்புதல்",

"கூட்டமைப்பின் அரச அடிவருடும் அசிங்கங் களை, வாழ்வாதாரங்களால் மறைத்தல்"

- ஆகியன அவற்றில் சில.

"ஆடுகள் எப்போதும் ஓநாய்களையே தலைவர் களாகத் தெரிவு செய்யுமென்று" அவர்கள் யாவரும் நன்கறிவர்.

எம் முகங்களில் நாமே உமிழ்ந்திருப்போமாக! ■

# சித்திரக்குள்ளனின் சிறப்பு

மனித உருவங்களைக் கொண்டு தராதரத்தை நிர்ணயிக்கும் இன்றைய சமுதாயத்தில், பல வீனமே ஒருவரின் சிறந்த பலம் என நிரூபித்தவர் நேபாள நாட்டைச் சேர்ந்த சந்ரா பஹதூர் டங்கி (Chandra Bahadur Dangi) எனும் குள்ளர் ஆவார். உலகின் முதிர்ந்த குள்ள மனிதராக 2012ம் ஆண்டில் இனங்காணப்பட்ட இவர் 54.6 cm உயரமும் 15kg எடையும் கொண்டவர். இவர் 30.11.1939இல் பிறந்து 03.09.2015இல் தனது 76வது வயதில் காலமானார்.






# 20ம் நூற்றாண்டின் யோகா மாஸ்டர்



யோகா பயிற்சி உடல்உள ஆரோக்கியத்தை வலுப்பெறச் செய்கின்றது என நிரூபித்துள்ளார் இந்த பெண்மணி. 1918ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13ம் திகதி பிறந்த டவோ போகன்,லின்ச் (Tao Porchon Lynch) எனும் அமெரிக்க பெண்மணி உலகின் பழமையான யோகா பயிற்றுவிப்பாளர் என்னும் கின்னஸ் சாதனையை 2012ஆம் ஆண்டு, தனது 93ஆவது வயதில் நிலைநாட்டியுள்ளார். 1926ம் ஆண்டு தனது 8ஆவது வயது முதல் யோகா பயிற்சியில் ஈடுபட்டு எமது நூற்றாண்டின் பாராட்டப்பட்ட யோகா பயிற்றுவிப்பாளராக உருவெடுத்துள்ளார்.

# சிற்பங்களின் அருங்காட்சியகம்

மெக்சிகோ நாட்டில் நீருக்கடியில் உருவாக்கப்பட்டுள்ள கன்கம் அருங்காட்சியகமானது (Cancum Underwater Museum) ஏறத்தாழ 500 சிற்பங்களை விழுங்கி பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்துகின்றது. விலைமதிப்பற்ற பவளப் பாறைகளை பாதுகாக்கும் நோக்கிலேயே அந்நாட்டு கடற் பூங்காவின் இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் 2010ம் ஆண்டு முதல் இது உத்தியோகபூர்வமாக இயங்கி வருகிறது.



# இவ்வளவு பொம்மைகளா?

கரடி பொம்மையை (Teddy bears) விரும்பாத பெண்கள் இருந்தால் கையை உயர்த்தவும், என சொல்லும் அளவுக்கு இன்று கரடி பொம்மைகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. அந்த வகையில் அமெரிக்க நாட்டை சேர்ந்த ஜெக்கி மில்லி (Jackie Miley) எனும் பெண்மணி 2012ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியளவில் 8,026 கரடி பொம்மைகளை தன்னகத்தே கொண்டுள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

# டேல் அலியின் 'சல்யூட்' சவால்



டேல் அலி

விளையாட்டைப் பொறுத்தவரையில வெற்றி - தோல்விகள் எந்தளவுக்கு பேசுபொருளாக உள்ளனவோ அதே அளவுக்கு வீரர்களின் கொண்டாட்டங்களும் உலகளவில் வைரலாகாமல் இல்லை.

இதற்கு சிறந்ததோர் உதாரணமாக உலகின் மின்னல் மனிதன் என வர்ணிக்கப்பட்ட ஜமைக்காவின் குறுந்தூர ஓட்ட வீரரான உசைன் போல்டின், வெற்றியின் பின்னரான அசைவுகள் உலகளவில் பிரபலமான வெற்றிக் கொண்டாட்டத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுன்றன.

இத்தகையதோர் கடினமான வைரல் அசைவு தற்போது விளையாட்டுலகை ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறது.

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணி வீரர் டேல் அலி. இவர், இங்கிலாந்தின் கழகமான டோட்டாஹாம் அணியிலும் விளையாடி வருகிறார்.

இவர், தான் சார்ந்த அணிக்காகக் கோல் போடும் போது சல்யூட் அடித்து அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவார். இவ்வாறு களத்தில் இயங்கிக் கொண்டிருந்த இவர், அனைவருக்கும் ஒரு சவாலை விடுத்துள்ளார்.

வலது கையின் பெருவிரல், ஆள்காட்டி விரல்களை மடக்கி சல்யூட் அடிப்பதுதான் அந்த சவால். இப்படிச் செய்வது மிகக் கடினம். இது தற்போது மிகப்பெரிய அளவில் "டேல் அலி செலிபிரேட் சலஞ்ச்" என்ற பெயரில் பிரபலமாகியுள்ளது.

பல்வேறு விளையாட்டு நட்சத்திரங்கள் அலியின் சவாலை ஏற்று அவற்றைச் செய்தும் காட்டியுள்ளனர்.

இதே பாணியில், இங்கிலாந்துக்கு எதிரான கிரிக்கெட் ஆட்டத்தில் ஜோ ரூட்டை பிடியெடுப்பு மூலம் ஆட்டமிழக்கச் செய்த இந்திய வீரரான லோகேஷ் ராகுல் கொண்டாடியுள்ளார்.

இந்தச் சவாலை ஏற்றவர்களில் முக்கியமானவர் பிரேசில் நட்சத்திர வீரரான நெய்மர்.

டோட்டாஹாம் அணியின் முகாமையாளரான மௌரிகோவும் அந்த சவாலை ஏற்று அதைச் செய்து காட்டியுள்ளார். இவர் அந்த சவாலை எவ்வாறு இலகுவாகச் செய்யலாம் என்பதை வீடியோப் பதிவாகவும் பதிவிட்டுள்ளார்.

பிரிட்டன் குறுந்தூர ஓட்ட வீராங்கனையும் பத்திரிகையாளர் சந்திப்பொன்றின்போது இதனைச் செய்துள்ளார்.

இதற்கிடையில் அவர் மற்றொரு சவாலையும் விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நீங்களும் இவரது சவால்களை ஏற்று சமூக வலைதளங்களில் ஏற்றிப்பாருங்கள்... அதுவும் வைரல்தான்.



# sugar free பானங்கள் ஆபத்தானவையா?

**கேள்வி - நீரிழிவு நோயாளர்கள் sugar free பாணங்களை, உணவுகளை உபயோகிக்கலாமா? அவை ஆபத்தற்றவையா?**

**பி.கண்ணன், ஹட்டன்**

பதில்:- sugar free பானங்கள் என எதைக் குறிப்பிடுகிறீர்கள். போத்தலில் அடைத்து வரும் பானங்களைத்தானே.

மாம்பழம், விளாம்பழம், பப்பாசி, தோடம்பழம் எனப் பலவிதமான பழங்



கள் பழச்சாற்றுப் பானங்களாக போத்தலில் அடைத்து விற்பனைக்கு வருகின்றன. இவற்றில் பல சீனி சேர்ந்தவை. ஆனால் பல சீனி சேர்க்காதவை.

அவ்வாறான சீனி சேர்க்காத பழச்சாற்றுப் பானங்கள் நீரிழிவு நோயாளிகளுக்குப் பாதுகாப்பானதா என்று கேட்டால் அதற்கு விரிவாகப் பதில் சொல்ல வேண்டும்.

சீனி என்பது சுக்ரோஸ் (Sucrose) என்ற வகை இனிப்பாகும். இது உடலில் சேர்ந்தவுடன் குளுக்கோசாக மாறி நீரிழிவு நோயாளிகளின் குருதி சீனி அளவை அதிகரிக்கும். ஆனால் பழங்களிலும் பழச்சாற்றிலும் உள்ளது புரக்டோஸ் (Fructose) என்ற இனிப்பாகும். இது உடனடியாகக் குருதி சீனியின் அளவை அதிகரிக்காது. ஆனால் அதில் இனிப்பு சத்து இருக்கிற காரணத்தால் அது ஈரலில் சேமிக்கப்பட்டு கொழுப்பாக மாறும். அந்தக் கொழுப்பு இரண்டு வகைகளில் உடலுக்குப் பாதிப்பைக் கொண்டு வரலாம். முக்கியமானது நிறை அதிகரிப்பாகும். அளவுக்கு மீறிய நிறையானது நீரிழிவை அதிகரிப்பது, பிரசரை அதிகரிப்பது, முழங்கால் போன்ற மூட்டுக்களில் தேய்வுகளை ஏற்படுத்துவது உட்பட பல்வேறு பாதிப்புகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம்.

இரண்டாவது பாதிப்பு குருதி கொலஸ்டரோலின் அளவை அதிகரிக்கும். முக்கியமாக ரைகிளிசரைட் என்ற வகை கொலஸ்டரோலை அதிகரிக்கும். கொலஸ்ரோல் அதிகரித்தால் இரத்த நாடிகள் அடைபடுவதால் மாரடைப்பு பக்கவாதம் உட்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்படும்.

பொதுவாக ஓரளவு பழங்களையும் அதிக செறிவில்லாத பழச்சாற்றுப் பானங்களையும் நீரிழிவாளர்கள் உட்கொள்ளலாம். பழங்களில் பல விதமான விற்றமின்களும் கனியங்களும் நார்ப்பொருளும் இருப்பதால் அவற்றை உட்கொள்வது நல்லது. ஆனால் அளவோடு ஆனால் போத்தலில் அடைத்து வரும் பெரும்பாலான பழச்சாற்று பானங்களில் உள்ள நார்ச்சத்து அகற்றப்படுகிறது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இது விரைவில் செரிமானமடைந்து விரைவில் அகத்துறிஞ்சப்படும். அத்துடன் அவற்றில் பழச்சத்து சாற்றின் செறிவு அதிகமாகும்.

அதாவது நீங்கள் ஒரு முறை அருந்துவது ஒரு பழத்தின் சாறாக இருக்காது. இரண்டு மூன்று பழங்களின் செறிவு அதில் இருக்கும். அவ்வாறு இருந்தால் அதில் சீனி இல்லாவிட்டால் கூட அதிக புரக்டோஸ் காரணமாக நிறை அதிகரிப்புடன் கூடிய பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே பழச்செறிவு அதிகமான பானமானால் போதியளவு நீர் சேர்த்து செறிவைக் குறைத்துக் குடிக்க வேண்டும்.

சீனி, புரக்டோஸ் போன்ற இயற்கை இனிப்புக்களைச் சேர்க்காமல் செயற்கை இனிப்புகளை சேர்த்து தயாரிக்கப்படும் பானங்களும் உணவுகளும் உள்ளன. saccharin, acesulfame, aspartame, neotame, and sucralose போன்றவற்றை போன்ற செயற்கை இனிப்புகள் மனித பாவனைக்கு உகந்தன என அமெரிக்காவின் FDA அங்கீகரித்துள்ளது. ஆயினும் அவற்றுக்குச் சில பக்கவிளைவுகள் இருப்பதாக ஆரம்ப ஆய்வுகள் சுட்டிக் காட்டின. இருந்தபோதும் அவை பாரதூரமான பாதிப்புக்கள் இல்லை. எனவே அவை சேர்ந்துள்ள உணவுகளை, பானங்களை அருந்துவதால் பெரிய பாதிப்புக்கள் ஏதும் ஏற்படாது. இயற்கையாகத் தாவரத்தில் இருந்து பெறப்படும் stevia என்று மற்றொரு இனிப்பு இருக்கிறது. இனிப்புக்காக இதைப் பானத்தில் சேர்ந்திருந்தால் பாதிப்பு ஏதும் இல்லை. சோடா என நாம் பொதுவாகச் சொல்லும் மென்பானங்களில் சீனியின் அளவு அதிகம். இப்பொழுது எந்தளவு இனிப்பு என்பதை லேபளில் சொல்ல வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆயினும் மென்பானங்களிலும் Sugar Free இப்பொழுது இலங்கையிலும் கிடைக்கின்றன. அவற்றில் பெரும்பாலும் stevia என்ற இனிப்பையே சேர்த்துள்ளார்கள்.

இவ்வாறு பல விடயங்கள் இருப்பதால் sugar free உணவுகளை, பானங்களை வாங்கும்போது அதன் லேபிளை கவனமாகப் படியுங்கள். அதில் என்ன இனிப்பு எந்தளவு கலந்திருக்கிறார்கள் என்பதை அவதானித்து வாங்குங்கள்.



சொல்லுங்கோ டொக்டர்?

# பஸ் பயணங்களில் கால்கள் வீக்கம்!



**கேள்வி- நீண்ட தூர பஸ் பயணங்களின்போது கால்கள் வீங்கி விடுகின்றன? இது எதனால்?**

**வைஷ்ணவி, கிளிநொச்சி**

பதில்- நீண்ட தூர பஸ் பிரயாணங்களின் போது கால்கள் வீங்கிவிடுகின்றன என்று சொன்னீர்கள். எனவே இரண்டு கால்களும் வீங்குகின்றன என்று அர்த்தமாகிறது. ஏனெனில் ஒரு கால் மட்டும் வீங்கினால் அதற்கான காரணங்களும் சிகிச்சையும் வேறுபடும். பொதுவாகப் பிரயாணங்களின் பின்னரான கால் வீக்கம் ஆபத்தானதல்ல. பஸ்சில் பிரயாணம் செல்லும் உங்களைவிட அதிக நேரம் விமானப் பயணம் செய்து வருபவர்களின் கால்கள் மேலும் அதிகமாக வீங்குவதுண்டு. பிரயாணத்தின் போதான இத்தகைய கால் வீக்கங்களுக்கு முக்கிய காரணம் கால்களை தரையில் வைத்தபடி நீண்ட நேரம் ஒரே இடத்தில் செயலற்று உட்கார்ந்து இருப்பதுதான். இவ்வாறு இருக்கும்போது கால்களுக்கு செல்லும் குருதியில் ஒரு பகுதி மேலே செல்லாமல் நாளங்களில் தேங்கி நிற்கும். இதனால் குருதியில் உள்ள நீரின் ஒரு பகுதி நாளத்தை விட்டு வெளியேறி அருகில் உள்ள திசுக்களுக்குள் ஊடுருவும். இதுவே கால் வீக்கத்தைக் கொண்டு வருவதற்கான காரணமாகும்.

பொதுவாக கணுக்காலை அண்டிய பகுதிகளில் இது வெளிப்படையாகத் தெரியும். ஆனால் இது நீண்ட பிரயாணம் செய்யும் எல்லோருக்கும் ஏற்படுவதில்லை என்பதும் உண்மையே. இரு கால்களும் வீங்குவதற்கு ஒருவர் உட்கொள்ளும் சில மாத்திரைகளும் காரணமாகலாம். நீங்கள் குடும்ப கட்டுப்பாட்டு மாத்திரை உபயோகிக்கிறீர்களா. அவ்வாறு உபயோகிப்பவர்களுக்கு கால் வீக்கம் வருவதற்கான சாத்தியங்கள். உண்டு. அதே போல உயர் இரத்த அழுத்தத்துக்கு உபயோகிக்கும் நிபிடிப்பின், அமைலோடிபின் (Nifedepine, Amlodepine) போன்ற மாத்திரைகளுக்கும் கால் வீக்கம் வருவதுண்டு. புருபன்டைகுளோபெனிக் சோடியம், பைரொக்சிகாம் போன்ற வலி நிவாரணி மாத்திரைகளும் கால் வீக்கத்தைக் கொண்டு வரலாம். நீரிழிவு நோய்க்கு உபயோகிக்கும் பையோகிளிட்டசோன் மாத்திரைகளும் அவ்வாறு வீக்கத்துக்கு காரணமாகலாம். அதேபோல பிரட்டிசலோன் மாத்திரையும் காரணமாகலாம்.

மாத்திரைகளால் ஏற்படும் கால் வீக்கம் பிரயாணம் பண்ணினால்தான் வரும் என்றில்லை. சாதாரண நேரத்திலும் வரலாம். இருந்தபோதும் சிலருக்கு நீண்ட நேரம் பிரயாணம் செய்யும் போதுதான் முதலில் வெளிப்படுவதுண்டு.

மருந்துகள்தான் உங்கள் கால் வீக்கத்துக்குக் காரணமாயின் மருத்துவருடன் கலந்தாலோசித்து வேறு மருந்துகளை மாற்ற முடியுமா என்பதைத் தீர்மானியுங்கள். நீங்களாக நிறுத்த வேண்டாம். சரி பிரயாணம் போதான இந்தக்கால் வீக்கம் ஏற்படாமல் தடுக்க நீங்கள் என்ன பாதுகாப்பு எடுக்க முடியும். ஒரேயடியாக உட்கார்ந்திருப்பதைத் தவிர்த்து ஓரிரு மணித்தியாலயங்களுக்கு ஒரு தடவை எழுந்து சிறிது தூரம் நடந்துவிட்டு மீண்டும் உட்காருங்கள். இது ஆகாய விமானத்தில் சாத்தியம். ஆனால் சனம் நிறைந்த பஸ்ஸில் முடியாத காரியம் என்பதை அறிவேன்.

அவ்வாறெனில் நீங்கள் உட்கார்ந்தபடியே உங்கள் முழங்கால்களையும் கணுக்கால்களையும் சற்று மடித்து நீட்டி பயிற்சி கொடுத்தால் இரத்தம் தேங்கி நிற்காது. கால்களுக்கான குருதிச் சுற்றோட்டம் சீரடையும். சாக்கைத் தூக்கிப் போட்டது போல ஆசனத்தில் ஒரே மாதிரி உட்கார்ந்திருக்காது, உங்கள் உடல் நிலையை இடையிடையே மாற்றி உட்காருங்கள். காலுக்குமேல் கால் போட்டுக் கொண்டிருப்பதை பிரயாணத்தின் போது தவிருங்கள். இறுக்கமான ஆடைகளை அணிவதையும் நீண்ட பிரயாணத்தின் போது தவிருங்கள். கால் வீக்கத்துடன் வலி இருந்தால் அல்லது ஒரு கால் மட்டும் வீங்குகிறது எனில் மருத்துவ ஆலோசனை கட்டாயம் பெற வேண்டும். ■




**கேள்வி - இனிக்கும் வாழ்வுக்குக் காதல் திருமணமா? நிச்சயித்த திருமணமா?**

**வி.பாலா, வவுனியா**



**பதில்-** நீயாகவே போய் கிணற்றில் குதித்தால் அது காதல் திருமணம். 4 பேர் சேர்ந்து உன்னைக் கிணற்றில் தள்ளிவிட்டால் அது நிச்சயித்த திருமணம்.

**கேள்வி- தேர்தல் வரப்போகிறதாமே. சராசரி மனிதர்கள் கூட இனி பெரிய மனிதர்களாகி விடுவார்களே?**

**எஸ். பவிந்தா, வவுனியா**

**பதில் -** தான் செய்த தவறைப் பொண்டாட்டிக்கிட்ட மறைக்கிறவன் சராசரி மனுஷன். தனக்கு ஒரு பொண்டாட்டி இருக்கிறதையே மறைக்கிறவன் பெரிய மனுஷன்.

**கேள்வி- எனது மனைவியை 'டீ' போட்டுத்தான் கூப்பிடுவேன். நீங்கள் எப்பிடி?**

**எம். வசந்தன், கண்டி**

**பதில்-** நான் எனது மனைவியை TEA போட்டுத்தான் கூப்பிடுவேன்.

**கேள்வி- என்ன வாழ்க்கை சார் இது. ரொம்ப கஷ்டமாயிருக்கு. சந்தோஷத்தைக் காண்பதே அரிதாயிருக்கே.**


**ஆர். மூர்த்தி, கொழும்பு**

**பதில்-** கஷ்டம்என்பது பொண்டாட்டி மாதிரி....! எப்பவும் கூடவே இருக்கும். சந்தோஷம் என்பது மச்சினிச்சி மாதிரி அப்பப்ப வந்திட்டு போயிடும். சந்தோஷத்த சந்திக்க உமக்குத் தான் அதிர்ஷ்டமில்லைப்போலும்

**கேள்வி- இந்த நவீன உலகத்தில் இன்னமும் ஆணாதிக்கம் இருக்கிறதா?**

**கே. மஞ்சுளா, கிளிநொச்சி**

**பதில்-** ஒரு நடிகர் 4 பொண்ணுங்களோட ஆடினா அது "ஒப்பனிங் சோங்". அதுவே ஒரு பொண்ணு 4 ஆண்களோட ஆடினா அது "அயிட்டம் சோங்" இதான் ஆணாதிக்கச் சமூகம்.



# சிறப்பு சித்திரவதை முகாம் 11

தோழர் பாலன்



இந்தியா இலங்கை அகதிகளுக்கும் எதிராக அமுல்படுத்த முடியாது என்பது எனது ஆணித்தரமான கருத்து. குறிப்பாக தமிழக அரசு இந்தச் சட்டத்தை அமுல் படுத்தும் முறை கேலிக் கூத்தானது என்பதும் எல்லா சட்டங்களுக்கும் முரண்பாடானது என்பதும் ஐய மில்லை.

இது முக்கியமான சட்டப் பிரச்சனை என்பதால் இதன் நுணுக்கங்களை மேலும் விவரிக்காமல் இத்துடன் விடுகிறேன். இந்த சட்டத்தை இவ்வாறு தமிழ்நாடு துஸ்பிரயோகம் செய்வதை இன்னும் முறையாக எவரும் உச்ச நீதிமன்றம் கொண்டு சென்று வாதாடவில்லை. அவ்வாறு செய்யின் இன்று சிறப்பு முகாம்களில் உழலும் பலருக்கு விடிவேற்படும் என்பதில் ஐயமில்லை" என்கிறார்.

தமிழ்நாட்டில் ஈழ அகதிகள் தொடர்பாக அனுதாபம் உள்ள பல சட்டத்தரணிகள் இருக்கின்றனர். அவர்களில் யாராவது ஒருவர் இதனை உச்சநீதிமன்றம் கொண்டு செல்வாரேயானால் சிறப்புமுகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளுக்கு நிச்சயம் விடுதலை கிட்டும் வாய்ப்புள்ளது. யாராவது செய்வார்களா?

**தாயகம் திரும்பியோரும் சிறப்புமுகாமில் அடைக்கப்பட்டனர்**

இரா.சிவலிங்கம் அவர்கள் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர். அவர் ஊட்டியில் உள்ள தாயகம் திரும்பிய மக்களுக்காகப் பாடுபட்டவர். அவர் எந்த வன்முறை அமைப்புகளுடனும் தொடர்பு கொண்டவரல்ல. சனநாயக அமைப்பில் நம்பிக்கை கொண்டவர். அவர் ஒரு படித்த சட்டத்தரணியும்கூட. அவரை வயதானவர் என்றும் பாராமல் சிறப்புமுகாமில் அடைத்தனர். அவரை விடுதலை செய்யும்படி முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி கிருஸ்ணய்யர் கேட்டுக் கொண்டார். அப்போதைய இலங்கை அமைச்சர் தொண்டமான் அவர்களும் கேட்டுக்கொண்டார். பல மனிதவுரிமை அமைப்புகள் கேட்டுக்கொண்டன. இருந்தும் தமிழக அரசு அவரை விடுதலை செய்ய மறுத்தது. அவர் நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற போதும் பொலிஸ் அவரை சட்டவிரோதமாக சங்கிலியால் பிணைத்துத் துன்புறுத்தியது. இதுகுறித்து அவரது மனைவியினால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்ட பின்பு, தான் தண்டிக்கப்படலாம் என அச்சப்பட்ட நிலையிலேயே அவரை விடுதலை செய்ய தமிழக அரசு முன்வந்தது.




அதிகாரிகளின் அதிகார துஸ்பிரயோகத்துக்கு கொடூரமாக வதைபடுகின்ற அப்பாவிகளுக்கு இரா. சிவலிங்கம் அவர்கள் ஒரு சிறந்த உதாரணமாகும்.

தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழி தமிழர்களும் சட்டவிரோதமாக செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டமைக்கு இன்னொரு உதாரணம் முனியம்மா குடும்பமாகும். முனியம்மா மதுரையைச் சேர்ந்தவர். அவரது கணவன் பெயர் பெருமாள். அவர்கள் மகன் பெயர் செல்லத்துரை. இந்த மூவருமே தாயகம் திரும்பிய இந்தியர்கள். பெருமாள் மதுரை மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்து ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் அவரது மனைவியும் மகனும் எந்தக் காரணமும் இன்றி செங்கற்பட்டு சிறப்புமுகாமில் அடைத்து வைக்கப்பட்டனர். அவர்களோடு சேர்ந்து மேலும் மூன்று தாயகம் திரும்பியோரும் பத்து மாதங்களுக்கு மேலாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். பத்து மாதங்களுக்கு பிறகுதான் "கியூ" பிரிவு மேதாவிகள் இந்த ஐவரும் தாயகம் திரும்பியோர்கள், ஆதலால் அவர்களை சிறப்புமுகாமில் அடைத்து வைக்க முடியாது என்று கண்டு பிடித்தனர்.

**[சித்திரவதை தொடரும்]**

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

இந்த வாரம் அவசரமாகச் செயற்பட வைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை தலை தூக்கலாம். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை உண்டாகலாம் கவனம் தேவை. பிள்ளைகளிடம் அன்பாகப் பழகுவது நன்மை தரும். உறவினர் வகையில் மன வருத்தம் ஏற்படலாம். நீங்கள் அமைதியாக இருந்தாலும் வீண் சண்டைகள் மற்றும் வீணான குழப்பங்கள் உங்களைத் தேடிவர வாய்ப்பு இருக்கிறது.

## கடகம்

குடும்பத்தில் சிறுசிறு வாக்கு வாதங்கள் உண்டாகலாம். கணவன், மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பிள்ளைகளின் படிப்பில் அக்கறை காட்டுவது நல்லது. கலைத்துறையினர் எல்லா நன்மைகளையும் தடையின்றி அடைவீர்கள். இதுவரை தொந்தரவு கொடுத்துவந்த நோய் விலகும். அதனால் ஏற்பட்ட மனப்பாரம் குறையும். கடன்கள் அடைபடும். வியாபாரம் செழிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கைகொடுக்கும்.

## துலாம்

குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். தம்பதிகளிடையே விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக சில பணிகளை மேற்கொள்வீர்கள். கலைத்துறையினர் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வருவாய் உண்டு. சோதனைகள் வெற்றியாக மாறும். உங்கள் செயற்பாடுகள் மற்றவர்களைக் கவரும். உல்லாசப் பயணங்களில் நாட்டம் செல்லும்.

## மகரம்

எதிலும் எச்சரிக்கையாகச் செயற்படுவது நன்மை தரும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் திடீர் மனஸ்தாபங்கள் உண்டாகும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை ஏற்படும். பிள்ளைகளிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. கலைத்துறையினருக்கு தொழிலில் சிக்கல்கள் உருவாகாது என்றாலும் சிற்சில வாக்குவாதங்கள் இருக்கும். எதிலும் அளவோடு ஈடுபட்டு வந்தால் தொல்லைகள் இராது. வேலையாட்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

## இடபம்

அலைச்சல் இருக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாட வேண்டிய நிலை ஏற்படலாம். உங்களுக்கு எதிரானவர்கள் மேல் ஆத்திரம் கொள்ள வேண்டாம். பிறமொழி பேசுபவர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். பெண்கள் எதைப் பற்றியாவது நினைத்துக் கவலைப்படுவீர்கள். வாக்குறுதிகள் கொடுக்கும்போது கவனம் தேவை. விருந்து நிகழ்ச்சியில் பங்கு பெறுவீர்கள். சந்தோஷங்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறத் திட்டமிட்டுப் படிக்க வேண்டும்.

## சிம்மம்

குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் குறையும். கணவன், மனைவிக்கிடையே இருந்த பூசல்கள் நீங்கி ஒற்றுமை உண்டாகும். உறவினர்களுக்காக விருப்பம் இல்லாத காரியத்தில் தலையிட வேண்டி இருக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் ஏற்படும். கலைத்துறையினர் ஓய்வில்லாமல் உழைக்க நேரும். அதற்கேற்றவாறு கூடுதல் வருமானமும் வரும். புதிய ஒப்பந்தங்கள் வரும். இலாபம் பெருகும். பழைய கடன்கள் வசூலாகும். உடல்நிலையில் இருந்துவந்த சிரமங்கள் முற்றிலும் நீங்கும்.

## விருச்சிகம்

கொடுத்த வேலையைத் திறம்படச் செய்வீர்கள். எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதற்குள் பல தடைகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். பிள்ளைகளிடம் அன்புடன் நடந்து கொள்வது நல்ல பலன் தரும். கலைத்துறையினருக்குப் புதிய மாற்றம் உருவாகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். வாகனங்களைப் பிரயோகப்படுத்தும் போது மிகவும் கவனம் தேவை. வெளிநாடு செல்ல வேண்டி வரலாம்.

## கும்பம்

தன்னலம் கருதாமல் பிறர் நலத்தை மனதில் கொண்டு செயற்படுவீர்கள்.எல்லா வகையிலும் இலாபம் கிடைக்கும். நல்ல சிந்தனை உண்டாகும். அறிவுத்திறன் அதிகரிக்கும். சிலநேரங்களில் மற்றவர்கள் பேசுவதைத் தவறாகப் புரிந்து கொள்ள நேரிடும். ஆனால் மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் சிறப்பாக நடக்கும். போட்டிகள் குறையும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். தொழில் ரீதியான காரியங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள்.

## மிதுனம்

மேலதிகாரிகள் உங்கள் செயல்களில் குறை காணாமல் இருக்க வேண்டுமெனில், கவனமாகச் செயற்படுவது நல்லது. குடும்பத்தாரிடம் கோபமாகப் பேசுவதைத் தவிர்த்து இதமாகப் பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். குழந்தைகளின் எதிர்கால நலன் பற்றி சிந்திப்பீர்கள். உங்களது உடமைகளைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது.

## கன்னி

எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் ஏற்படும். குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். தம்பதிகளிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் மூலம் பெருமை சேரும். உறவினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். கலைத்துறையினர் பொறுமையுடன் செயற்பட வேண்டும். மறைமுகப் போட்டிகளால் நெருக்கடிகளைச் சந்திக்கலாம். கவனமாகச் செயற்பட்டால் இலாபம் பெறலாம். அயல்நாட்டில் இருந்து நல்ல செய்திகள் வந்துசேரும்.


## தனுசு

நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பணவரவு திருப்தி தரும். எதிர்பார்த்த தகவல்களால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் இலாபம் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். பெண்களுக்கு உங்களது செயல்களுக்கு மற்றவர்களிடம் இருந்து பாராட்டு கிடைக்கும். பயணங்கள் மூலம் சாதகமான பலன்கள் உண்டாகும்.

## மீனம்

குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். கலைத்துறையினருக்கு பணியாட்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். இலக்கியத் துறைகளில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும். சக கலைஞர்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம். கலைப் பொருட்கள் விற்பனைத் தொழில் செய்வோருக்கு இலாபம் அதிகரிக்கும்.

# இயற்கையின் வேக மங்கை




அரசியல் புகுந்து விளையாடாத இடமே இல்லை. அது நாசம் பண்ணாத மனிதர்களே இல்லை. விளையாட்டிலும் கூட கொஞ்சமும் வெட்கமில்லாமல் நுழைந்து மோசம் பண்ணுகிறது. 'இறுதிச் சுற்று' திரைப்படத்தில் மாதவன் "விளையாட்டுத்துறையில் உள்ள அரசியலை எறிந்து விடுங்கள். தெருவுக்குத் தெரு சாதனையாளர்கள் கிடைப்பார்கள்." என்பார். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கேஸ்டர் செமன்யா உடல் சார்ந்த அரசியலோடு இன்னமும் போராடுகின்றமை, ஒவ்வொரு பெண்ணுக்கும் நம்பிக்கை அளிக்கிறது. 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஷிப்பில் 800 மீற்றர் தூரத்தை 1 : 55 : 45 என்ற கால அளவில் ஓடித் தங்கப் பதக்கத்தை வென்றாலும், அந்த வெற்றி உவப்பானதாக அமையவில்லை. ஒரு மாதத்துக்கு முன் ஓடியதிலும் பார்க்க 4 நொடிகள் குறைந்திருக்கின்றதே என்ற சந்தேகங்கள் எழுப்பப்பட்டு, பாலினம் பற்றியும் ஹோர்மோன் குறித்தும் கேள்விகள் எழுந்தன. 1500 மீற்றர் போட்டியில் 25 நொடிகளும், 800 மீற்றர் போட்டியில் 8 நொடிகளும் முன்னேறியிருந்தாள்.

"இதை ஒரு வித்தியாசமான, எங்களைப் பொறுத்தவரை நியாயம் இல்லாத வெற்றியாகத்தான் கருத வேண்டியுள்ளது. மற்றவர்களிடம் இருந்து பிரித்துக் காட்டுகின்ற வெற்றி" என்று கூறி சர்வதேச தடகள அமைப்பு 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தங்கப் பதக்கத்தை அவளிடம் இருந்து பறித்துக் கொண்டது. அரசியலையும், ஏகாதிபத்தியத்தையும் மீண்டும் விளையாட்டுக்குள் செலுத்தும் முயற்சி என்று தென்னாபிரிக்க அரசும், மக்களும் போராட , 11 மாதங்கள் கழித்து 2010 இல் பதக்கம் மீண்டும் திரும்பக் கிடைத்தது. அதே செமன்யா தான் 2012 லண்டன், 2016 ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டிகளில் 800 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கங்களை வென்றெடுத்தாள். இப்போது மீண்டும் ஒரு தடைக்கல்." 800, 1500 மீற்றர் ஓட்டப்பந்தயங்களில் பங்கு பெறும் பெண் வீராங்கனைகளின் தசையின் நிறையளவு, வலிமை மற்றும் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்க உதவும் டெஸ்டோஸ்டீரானின் அளவு பரிசோதிக்கப்பட வேண்டும். அது அதிகம் சுரந்தால் குறைக்க மருந்து உட்கொள்ள வேண்டும் அல்லது இவர்கள் ஆண் போட்டியாளர்களோடு ஓட வேண்டும்." இந்த ஆண்டு நவம்பர் முதல் இது நடைமுறைக்கு வருமாம். செமன்யா மீண்டும் போராடத் தொடங்கி விட்டாள். "இயற்கைக்கு மாறான ஒரு செயலைச் செய்யச் சொல்கின்றார்கள். என்னை இறைவன் எப்படிப் படைத்தாரோ நான் அப்படியே வாழ விரும்புகின்றேன். நான் கேஸ்டர் செமன்யா. நான் ஒரு பெண். நான் வேகமானவள் . இயற்கை உடலுக்கு வேறுபட்ட ஒவ்வொரு பரிணமிப்பு இருக்கும் அதைச் செயற்கையாக மாற்றுவதா? நான் நானாகவே இருப்பேன். இறுதிவரை போராடுவேன்" என்கின்றாள் வலிமையோடு செமன்யா. நிச்சயம் வென்று வருவாள். தங்கப் பதக்கங்களை கொண்டு வருவாள் இந்தக் கறுப்புப் புயல்.

**கவிஞர் பிரேம்ராஜ்**
**கொழும்பு**



## சுசியின் டயறியில் இருந்து


சமூகச் செயற்பாட்டாளராகவும், உளவியல் ஆலோசகராகவும் இயங்கிக்கொண்டிருக்கும் சுசி, வன்கொடுமைகள், துன்புறுத்தல்கள், அடக்குமுறைகளுக்குள் சிக்கி, அதில் இருந்து மீளமுடியாமல் முடங்கிப்போய் இருக்கும் பல பெண்களைத் தனது சொற்களால் தூக்கிவிட்டு, மீட்டெடுக்கும் அரிய பணியை மேற்கொண்டு வருகின்றார். அவர் சந்தித்த பல பெண்களை இனிமேல் நீங்களும் ஒவ்வொரு வாரமும் சந்திக்கப் போகின்றீர்கள்.

# திருமணக் கனவுக்குப் பின்னால்...

வடக்கு மாகாணத்தில் அந்தஸ்திலும், தொழில் ரீதியாகவும் கொடி கட்டிப் பறந்தவர்கள் தான் சண்முகமும், வள்ளியம்மையும். வள்ளியம்மையோ சிறந்த ஆசிரியை. அக்காலத்தில் அவளுக்கு நிகராக சேவையாற்ற எவருமில்லை. கட்டியவனும் கண்ணைப் போன்று பாதுகாக்கவே இல்லறத்துக்கு அன்பு சேர்க்கும் வகையில் கஜானன், காந்திமதி என இரண்டு பிள்ளைகள். காலத்துக்கேற்ப நன்றாகப் படித்து நல்ல உத்தியோகத்தில் இருக்கின்றனர். கஜானன் ஒரு பொறியியலாளர். சரியான காலத்தில் பெருந்தொகை சீதனத்துடன் வீடு, வாசல், வாகனம் என அனைத்து வரப்பிரசாதங்களோடும் இல்லறத்தை ஆரம்பித்தான். காந்திமதியும் பிரசித்தி பெற்ற தேசிய பாடசாலையில் தாயைப் போல சிறந்த ஆசிரியையாகப் பணிபுரிந்தாள். ஆனால் அவளுக்கு வாழ்க்கையோ கஜானனுக்கு போல் அமையவில்லை. காந்திமதி ஜாதகப் பொருத்தம் மிகுந்த வரனுக்காக காத்திருந்தாள். வரும் அத்தனை வரன்களும் ஜாதகத்தைக் காரணம் காட்டி விலகியே சென்றன. ஜாதகம் விதி வடிவில் தலைவிரித்தாடவே அந்த கவலையிலேயே தந்தை அவர்களை விட்டுப்பிரிந்தார். தந்தையின் பிரிவால் துயருற்ற தாயார் தொடர்ந்தும் வலை வீசி மணமகனைத் தேடினார். பல இலட்சங்களைக் கொட்டி கொடுப்பதற்கும் தயாராகினர். தாய் ஆசிரியை என்றபடியால் வெவ்வேறு மாவட்டங்களிலும் பல தோழிகள் இருந்தனர். அவ்வாறு ஒரு தோழி மூலமாக வந்த வரன் தான் வரதன். வரதன் ஏற்கனவே திருமணமாகிய இரு குழந்தைகளின் தகப்பன். ஆனால் ஒரு வருடத்துக்கு முன்பு விவாகரத்தைப் பெற்றுக்கொண்டவன். வரதன் மற்றும் காந்திமதியின் ஜாதகம் நூறு விகிதம் பொருந்தவே அவளை இரண்டாம் தாரமாகவேனும் திருமணம் முடித்துக் கொடுப்பதில் அவளது தமையன் மும்முரமாக ஈடுபட்டான்.

தன் மருமகள் தனது அரச பணியைத் தியாகம் செய்துவிட்டு தன்னோடு வீட்டில் இருக்க வேண்டும் என்பதே வரதனின் அம்மா சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்ட ஒரேயொரு வேண்டுகோள். காந்திமதிக்கு அதைக் கேட்டதும் சுருக்கென்றிருந்தது. விருப்பமில்லாவிட்டாலும் வீட்டாரின் தொடர் வற்புறுத்தலால் சரி எனச் சம்மதித்தாள். பல இலட்சங்களைச் சீதனமாகக் கொடுத்து காந்திமதியைத் திருமணம் செய்துவைத்தனர். திருமணமாகி கொழும்புக்குச் சென்றவளுக்கு இடி மேல் இடி விழுந்தது. வரதனின் தாய் புதுமணத் தம்பதியினரை தனிமையில் பேசுவதற்கேனும் அனுமதிக்கவில்லை. நிம்மதியைத் தேடிக் கோயிலுக்குச் செல்வதானாலும் கூடவே மாமியார். யாருடனும் பேசுவதற்குக் கூட அனுமதியில்லை.

(தொடரும்)



# கண்ணழகே!

கண்ணுக்கு மட்டும்தான் உள்ளத்தையும் சேர்த்துப் பிரதிபலிக்கும் குணம் உள்ளது. கண்களை அழகாகக் காட்ட எளிய முறையில் அலங்காரம் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

பெரும்பாலான இளம் பெண்கள் மொபைலையும், அலுவலகம் செல்லும் பெண்கள் கம்யூட்டரையும், இல்லத்தரசிகள் ரீ.வியையும் பார்த்துக்கொண்டே இருப்பதால் கண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகம்.

**ஐபுரோ பாலட்:** கண், புருவத்துக்கு என ஐபுரோ பாலட்கள் கடைகளில் கிடைக்கின்றன. இதில் மூன்று நிறங்கள் இருக்கும். இதில் உள்ள தூரிகை மூலம், இந்த வண்ணங்களைத் தேவைக்கு ஏற்ப கலந்து, புருவ முடிகளின் மீது மட்டும் தடவலாம். இது புருவத்தை பளிச்சென்று காட்டும்.

**ஐலாஷ்:** சந்தைகளில் பலவிதமான செயற்கை இமை முடிகள் கிடைக்கின்றன. இதனுடன் கொடுக்கப்படும் பசையின் உதவியால் இதைக் கண் இமைகளில் ஒட்டிக் கொண்டால், இமை முடிகள் நீண்டு, அடர்ந்து இருப்பது போன்ற அழகிய தோற்றத்தைக் கொடுக்கும். கவனம் தரமானவற்றைப் பார்த்து வாங்கவும்.

**ஐ ஷடோ:** தரமான ஐ ஷடோ உபயோகிப்பதால், கண்களில் ஒவ்வாமை ஏற்படுவதைத் தடுக்கலாம். ஐ ஷடோக்களின் துகள்கள், கண்களின் உள்ளே போய், ஒவ்வாமை மற்றும் கட்டியை ஏற்படுத்திவிடும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, கண்களுக்கு ஐ ஷடோ தடவும் முன்பாக, ஐ ப்ரைமர் தடவிவிட்டு செய்தால், கண் இமைகளை ஒவ்வாமையில்இருந்து காக்கலாம்.

# சீண்டினால் எதிர்ப்போம்!




என்னுடைய போன் ரிங் ஆகியது . எடுத்துப் பார்த்தேன். தோழிபிரணவி. எதிர்முனையில் அவள் அழுது கொண்டிருந்தாள். பதறிப்போன நான் "என்ன நடந்தது சொல்லு பிரணவி" என்றேன் பதற்றத்தோடு. அவள் அழுகை அதிகமானது. அவள் அழட்டும். அப்போதுதான் மனசு லேசாகும் என எண்ணியவாறு சில நிமிடங்கள் அமைதியாக இருந்தேன். பிரணவிக்கு திருமணமாகி 3 வருடங்கள் ஆகின்றன. அவளுடைய கணவன் அவளை அன்பாகவே பார்த்துக் கொள்வதாகப் பேசும்போதெல்லாம் சொல்வாள். அப்படியெனில் அவள் அழுகைக்குக் காரணம் என்னவாக இருக்கும் என யோசித்துக் கொண்டிருக்கும் போதே, அவளே ஆரம்பித்தாள். "மாமா (கணவனின் தந்தை) ஆபாசமாகப் பேசுகிறான். தப்பாக நடக்கும்படி வற்புறுத்துகிறான்" அவள் அதை முழுமையாக முடிக்கவில்லை. மீண்டும் அழுகை.

அவளுடைய கணவனுடைய குடும்பத்தாரை எனக்கும் தெரியும். மாமா எனப்படுகின்ற அந்த மனிதருக்கு 65 வயது இருக்கும். சமூகத்தில் உயர்ந்தவர் போலத் தன்னைக் காட்டிக் கொள்ளும் அவருக்குள், இத்தனை கீழ்த்தரமான எண்ணங்களா? என்னால் நம்பவே முடியவில்லை. "பிரணவி இது நீ அழுறதுக்கான நேரமில்ல. இந்தத் துயரத்த கோபமா மாத்து. இப்பிடியான ஆக்கள சமூகத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட வேணும். இந்த மனநிலையோட இருக்கிறவன் கையில சின்னப்பிள்ளைகள் சிக்கினா என்னவாகும். இன்னொரு வித்தியாவோ, சேயாவோ எங்கட சமூகத்துக்கு வேணாம். இவனப் பற்றி நீ ஆதாரத்தோட எல்லாருக்கும் தெரியப்படுத்து." என்றேன். பிரணவி தெளிவானாள். அவன் தப்பான நோக்கத்தோடு தன்னை அணுகுவதை கணவனிடம் தெரியப்படுத்தினாள். முதலில் அவளின் கணவன் அதை நம்பவில்லை. பின்னர் அவருடைய கண்முன்னே அந்த மனிதன் தவறான நடவடிக்கையில் ஈடுபடவே, எல்லாரும் பிரணவிக்கு ஆதவாக நின்றார்கள். தன் குடும்பத்தவராலேயே ஒதுக்கப்பட்ட அவன், இப்போது தன் தவறை உணர்ந்து மனம் வருந்திக்கொண்டிருக்கின்றான்.

## பாலியல் தொல்லைகளை பகிரங்கம் செய்வோம்

**'ரௌத்திரம் பழகு'**
அம்பலம் பதிப்பகம்,
இல. 241,
கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
**அல்லது**
ethirolimedia@gmail.com





# Wi-Fi உதவியால் ஆயுதங்களை கண்டுபிடிக்கலாம்

பலரும் கைபேசி, கணனி மற்றும் ஏனைய இலத்திரனியல் சாதனங்களை Wi-Fi மூலம் உலகளாவிய இணைய வலையுடன் இணைத்தே இருப்பார்கள். மிக விரைவில் இதே தொழில்நுட்பம் பொது இடங்களில் உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவப் போகின்றது என்பது தான் முக்கிய விடயம்.

Rutgers பல்கலைக்கழக மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இருந்து, சாதாரண Wi-Fi மூலம் பைகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள், வெடிபொருட்கள், வெடிபொருள் இரசாயனங்கள் என்பனவற்றை மிகக் குறைந்த செலவில், மிக வினைத்திறனாகக் கண்டுபிடிக்க முடியும் எனத் தெரியவந்துள்ளது.

அதேநேரம் ஒருவர் வெடிபொருட்களை மறைத்து வைத்திருக்கப் பயன்படுத்தும் பையானது பேப்பர் அல்லது நார் போன்ற பொருட்களால் ஆக்கப்பட்டிருந்தால், Wi-Fi சமிக்ஞை இலகுவாகப் பயணிக்கும். ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுக்கென Wi-Fi ஆயுதக் கண்டுபிடிப்புத் தொகுதியொன்றை உருவாக்கி உள்ளனர். இது பொருட்களை எதிர்கொள்ளும் போது Wi-Fi சமிக்ஞைக்கு என்ன நடக்கின்றது என்பதைக் கண்டறியும். இவர்கள் அத் தொகுதியை 15 வெவ்வேறு பொருட்கள் மற்றும் 6 வகை பைகளில் ஆராய்ந்த போது அது ஆபத்தான மற்றும் ஆபத்தில்லாத பொருட்களை வேறுபடுத்திக் காட்டியுள்ளது.


# மணிக்கட்டில் ஆய்வுக்கூடம்!



கையில் அணிந்துகொள்ளும் உடல் நலக் கண்காணிப்புக் கருவியை, ரட்கெர்ஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர். பல புதிய தொழில்நுட்பங்களைத் தொகுத்து இது உருவாக்கப்பட்டுள்ளது. இதனை அணிந்திருப்பவரின் இரத்தத்தில் உள்ள செல்களை அளப்பது முதல், அணிந்துள்ளவரைச் சுற்றியுள்ள காற்றில் மாசுக்கள், நச்சுக்களையும் அளக்கும் திறன் கொண்டது.

அதி நவீன நுண் திரவ உணரி, மைக்ரோ கொண்ட்ரோலர் மற்றும் 'புளூடூத்' ஆகிய தொழில் நுட்பங்களைக் கொண்டிருக்கும் இந்தப் புத்திசாலிக் கைப்பட்டை, அணிந்திருப்பவரின் மொபைல் செயலிக்கு அளவுகளை அனுப்பிவிடும். அதை மருத்துவரிடம் காட்டினால் அவர் உடல் நலத்தைப் பற்றி துல்லியமாகக் கணிக்க முடியும்.

இந்தக் கருவியை பலவித நோய்களுக்கான அறிகுறிகளை அறியும் விதத்தில், அவற்றுக்குரிய உணரிகளை மாற்றிக்கொள்ள முடியும். எனவே நோயறிதலுக்காக பெரிய ஆய்வகங்கள் மற்றும் அதிக கட்டணம் போன்றவற்றைத் தவிர்க்க இந்தக் கருவி உதவும். தற்போது சில மாதிரிகளையே ரட்கெர்ஸ் விஞ்ஞானிகள் உருவாக்கியிருந்தாலும், இதனை நம்பிக்கைத் தரும் கருவி என 'மைக்ரோசிஸ்டம்ஸ் அண்ட் இன்ஜினியரிங்' இதழ் பாராட்டி உள்ளது.



# வயதான செல்களுக்கு இளமை திரும்புமா?

இங்கிலாந்தில் உள்ள எக்செட்டர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் வயதான மனித செல்களுக்கு ஒரு சிறப்பு வேதிப் பொருளை செலுத்தியபோது, ஆய்வகத்தில் வைக்கப்பட்டிருந்த அந்த செல்கள், இளம் செல்களைப் போலவே துடிப்புடன் இயங்க ஆரம்பித்துள்ளன. செல்கள் குறிப்பிட்ட காலத்துக்குப் பின் பிரிந்து, பல்கிப் பெருகும் தன்மை கொண்டவை. இதனால்தான், இளம் வயதினருக்கு துடிப்பும், உடல் வளர்ச்சியும் ஏற்படுகிறது. ஆனால் வயது ஆக ஆக, செல்கள் பிரிந்து பல்கிப் பெருகும் வேகம் குறைய ஆரம்பிக்கிறது. இதைத்தான் முதுமை என்கிறோம்.

முதியோரின் உடலில் உள்ள செல்கள் பல்கிப் பெருகாவிட்டாலும் சத்துகளை உட்கொண்டு, அப்படியே உயிருடன் இருக்கும். இதை 'செல்லுலர் சென்செனஸ்' என்பர். இத்தகைய நிலையை அடைந்த செல்களுக்கு எக்செட்டர் விஞ்ஞானிகள், மிகச் சிறிய அளவில் ஹைட்ரஜன் சல்பைடை செலுத்தியபோது, 50 சதவீத செல்கள், இளம் செல்களைப் போலவே துடிப்புடன் செயற்பட ஆரம்பித்தன.

இதனால் இனி முதியவர்களுக்கு இளமையை திரும்பச் செய்துவிட முடியும் என இப்போதே சொல்லி விட முடியாது என்றும், மேலும் பல விலங்குகள் மீது சோதனை நடத்திய பிறகே மனிதர்கள் மீது இச் சோதனையை நடத்த முடியும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# ஈழப் போரும் கருணாநிதியும்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றில் கால்பங்கு ஆசனங்களைக் கூடக் கொண்டிராத சந்திரசேகரின் கட்சி ஆட்சி பீடமேற வெளியில் இருந்து ஆதரவளித்தார் ராஜீவ். எனவே ராஜீவின் கட்டளையை அவரால் மீறமுடியா திருந்தது. தமிழகத்தில் புலிகளினால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது எனக் குற்றம் சாட்டி கருணாநிதி அரசைக் கலைத்தார் சந்திரசேகர். பெரும்பான் மையைக் கொண்டிருந்த தமிழக அரசை மைனாரிட்டி மத்திய அரசு கலைத்தது. இவ்வாறான நிலைமைதோன்றி விடும் எனக் கருதிய கருணாநிதி ஏற்கனவே சிகிச்சைக்கென தமிழகத்தில் தங்கியிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கைதுசெய்து சிறப்பு முகாமில் அடைத்திருந்தார். அந்தச் சிறப்புமுகாம் இப்போதும் இயங்கி வருகிறது. கைது செய்யப்பட இருந்தோரில் காசிஆனந்தனும் ஒருவர். ஆனால், கருணாநிதி உத்தரவின் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார். உடனே கவிஞரைச் சந்தித்து அற்புதமான நாடகம் ஆடினார். கருணாநிதியின் கண்ணீரைக் கண்டதும் உண்மையாகவே அழுது விட்டார் கவிஞர்.

இந்த விடயத்தில் ஓநாயும் ஆட்டுக்குட்டியும் கதைதான். தான் புலிகளுக்கு ஆதரவில்லை எனக்கூறி சிறப்பு முகாமில் புலிகளை கலைஞர் அடைத்தாலும் ராஜீவ்காந்தி நினைத்தது தான் நடந்தது.

ஆட்சியைப் பிடிக்கவென ராஜீவ் திட்டமிட்டாலும் மரணம் அவரை அனுமதிக்கவில்லை. அத்தேர்தலில் தி.மு.க. படுதோல்வியடைந்தது. ஜெயலலிதா ஆட்சி பீடமேறினார்.

அப்போதுதான் வைகோவை அகற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. கைகோவை முதல்வராக்க, கட்சித் தலைவராக்குவதற்காக புலிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக தன்னைக் குறி வைத்துள்ளனர் எனத் தகவல் கிடைத்துள்ளதாக கருணாநிதி தெரிவித்தார். எது எவ்வாறு இருப்பினும் எனக்கு நம்பிக்கையுள்ளது எனக் கருணாநிதி சொல்வார் என வைகோ எதிர்பார்த்தார். எப்படியோ வைகோவின் வெளியேற்றம் நடைபெற்றது. ஸ்டாலினுக்குள்ள தடை அகற்றப்பட்டது. எந்தெந்த மாதிரியெல்லாம் புலிகளின் பெயரை கருணாநிதி பயன்படுத்தினார் என்பதை அறிந்தால் தலையைச் சுற்றும்.

(தொடரும்)

500 /=

உங்கள் சிறு விளம்பரங்களை குறைந்த விலையில் இங்கே விளம்பரப்படுத்தலாம். இதற்கு நீங்கள் செலுத்த வேண்டியது 500 ரூபா மாத்திரமே.

தொடர்புகளுக்கு:

076 711 2932

காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு
தொடர்புக்கு: 0772269808
விலை நேரில் பேசித் தீர்க்கலாம்.




யாழ். நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையின் 5 சிறப்புகளைக் கூறுக?

விடைகளை அனுப்புவோர் கீழே உள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து பதிலுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

- சரியான பதில் அனுப்பும் 5 பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் பணப்பரிசில்.
- சரியான பதிலை அனுப்பும் மேலும் 10 பேருக்கு ஒரு மாதத்துக்கு எதிரொலி வாரமலர் இலவசமாக வழங்கப்படும்.
- சரியான பதில்களை அனுப்புவோர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்குள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலோடு பதில்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பெயர் - ..................

தரம் - ..................

பாடசாலை - ..................

முகவரி - ..................

..................

தொலைபேசி இலக்கம் - ..................

அதிபரின் கையொப்பம் - ..................



# ஈழத்து அரங்க வெளியின் வரலாற்றுப் பாய்ச்சலில் யாழ். பல்கலைக்கழகம்

களம் 5

■ செல்வி

## அசைவுகள்: சமகால அரங்கு

அரங்க விழாவின் வெளியை சமகால நடனங்கள் இன்னொரு தளத்திற்கு இட்டுச் சென்றன எனலாம். சமகால நடனங்கள் என்ற வகைப்பாடானது, நெறியாளரின் படைப்பாக்க மனநிலையின் பாற்பட்டு அந்த நெறியாளர் சார் படைப்பு அடையாளத்தை உருவாக்கும் செயலின் கூட்டுச் சொல்லாக இருக்கின்றது. உடலை மையமாகக் கொண்டு வெளியில் அசையும் படிமக்களை உருவாக்குவதன் மூலம் நெறியாளர்கள் தமக்கான ஆற்றுகைகளை படைக்கிறார்கள். ஆனால் சாதாரண பார்வையாளர்கள் சிலர் அது தமக்குரிய வடிவமில்லை என்று அவற்றைக் கடந்துசென்று விடுகிறார்கள். குறியீடுகளும் படிமங்களும் கதை கூறுவது தமிழ் ம்ரபில் புதிதல்லவே. இலக்கியம், சிற்பம், ஓவியம் என குறியீட்டுவாதம், நவீனத்துவம், பின்நவீனத்துவம் என எல்லாப் பரிசோதனை முயற்சிகளும் நிகழ்ந்தது போலவே, அரங்கிலும் அந்த இயக்கவியல் மாற்றம் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. ஆனால் பார்வையாளன் அதற்குத் தன்னை அந்த அழகியல் வெளியை விளங்கிக்கொள்வதற்குத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பார்வையாளர்களை தயார்ப்படுத்தவேண்டிய பொறுப்பும் அரங்கத்துறையினரிடமே இருக்கிறது. பார்வையாளர்களைக் கருத்தியல் தளங்களோடு ஆற்றுகைகளை நோக்குபவர்களாகவும் நோக்க வேண்டிய தேவையும் இருக்கிறது. வெறுமனே நாடகம் பார்த்தல் என்ற சடங்கு நிலைப் பார்வையாளர்களை விட, சோதனை முயற்சிகளை அவரவர் தளங்களில் உள்வாங்கும் பார்வையாளர்களை பின்நவீனத்துவம் இலக்காகக் கொண்டுள்ளது. ஒரு பிரதி பார்வையாளர்களின் வழி ஓராயிரம் பிரதிகளாக நிலைமாறுகின்றன. இரைப்பை, முல்லைமண், நூலாடிகள் என்ற பிரதிகள் எத்தனை பிரதிகளாயினவோ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, நாடகமும் அரங்கக் கலைகளும் சிறப்புக்கலை மூன்றாம் வருட மாணவி மதிசாளினியின் நெறியாள்கையில், இரைப்பை என்ற பல அசைவுகளை உள்ளடக்கிய விம்பங்களின் ஆற்றுகையானது, மனித வாழ்வின் மையம் அவனது உடலின் இரைப்பையில் இருக்கிறது என்பதை உடலின் இயக்கங்களினாலும் வண்ணங்களினதும் ஒளியினதும் கூட்டுழைப்பினால் நிகழ்த்தப்பட்டது. இரைப்பையில் மொழியின் இடைவெளியை ஒலி நிரப்பிச்செல்ல கைலாசபதி கலையரங்கமும் அண்டமாகியது. ஒவ்வொரு விநாடியிலும் பல படிமங்களை நிகழ்த்திச்சென்ற மதிசாளினி, அரங்குசார்ந்த தனது தேடலின் தொடக்கப்புள்ளியை தெளிவாக இட்டுச் சென்றுள்ளார் என்பது தெரிந்தது.

ஆற்றுகையாளனது கருத்தியலானது அவனது சமூக, அரசியல், பொருளாதாரப் பின்னணிகளாலேயே பொதுவாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும். ஈழத்து ஆற்றுகையாளர்களைப் பொறுத்தவரையில் போரும் போரின் தழும்புகளும் அது சார்ந்த நினைவுகளும் எப்போதும் நனவு மனத்தையும் நனவிலியையும் ஆக்கிரமித்திருப்பதால், போரின் படிமங்கள் அவர்களது ஆற்றுகைகளில் அசைவுகளாவது தவிர்க்க இயலாதது. நவீன ஆற்றுகையும் அதற்கான சாத்தியப்பாட்டினை வழங்குகிறது. இந்த பின்னணியில், சிறீகண்ணன் என்பவரின் அனுபவங்களின் கருத்துருக்கள் அவரது நெறியாள்கையில் அவரது உடலின் அசைவுகளினால் "முல்லை மண்" என்ற நடன வழி ஆற்றுகையைக் கட்டியெழுப்பியிருக்கிறார். தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டப் பயணம் முற்றுப்பெற்ற முல்லைத்தீவு மண்ணுக்கு செல்லும் பயணத்தின் வழி, தமிழ்மக்களின் போர் நினைவுகளை தமிழர்களின் மரபுகள் வழிவந்த காண்பியக்கூறுகளின் குறியீடுகளின் வழி பதிவுசெய்திருக்கிறார். கண்ணகியின் படிமம் எனக்கு விடுதலையின் படிமமாகவே தோன்றியது. மரபிலிருக்கும் அசைவுகளை கோர்வைகளாக்கி, பார்வையாளர்களின் மனவெளிகளில் அவர்களின் போர் வாழ்க்கையை மீட்டிச்சென்றது. பிணக்குவியல்களும், சடங்குகள் மறுக்கப்பட்ட சடலங்களும் கண்முன்னே வந்துபோனது. காண்பிய ரீதியில் காட்சியும் ஒளியும் தம்முள் இயைந்து அசைந்திருக்கின்றமை சிறப்பானதாகும். கொள்ளிக்குடமும் கண்ணகியின் படிமமும் தமிழர்களின் நனவிலியில் என்றும் படிமங்களாகவே இருக்கும்.

கிரிதர்சன் நிக்கிலஸ் அவர்களின் எழுத்துருவாக்கம் மற்றும் நெறியாள்கையில் ஆற்றுகை செய்யப்பட்ட "நூலாடிகள்" வாழ்வு தொடர்பான



கேள்விகளையும் வாழ்வியலின் மையத்தினதும் விளிம்பினதும் மோதுகைகளும் ஏதோ ஒரு இழையைப் பற்றி அசைவதனையும் உடல்களின் அசைவுகளினூடு பேசியது. வாழ்க்கையின் கேள்விகளும் பதில்களும் ஒன்றுக்கொன்று தமக்குள் முரண்படுவதைப்போல ஒவ்வொரு காட்சிப் படிமங்களும் தமக்குள் முரண்பட்டுக்கொண்டன. அசைவுக் கோர்வைகளை உருவாக்குதலென்பது, கற்றுக்கொண்டவற்றை தமது ஆற்றுகைவெளிகளில் இணைப்பதன் மூலம் புதிய வடிவங்களை உருவாக்கும் கூட்டுவினையாகும். கலைப்படைப்புக்களில் இறந்தகாலத்தின் தொடர்ச்சியும் புதியதும் ஒருபுள்ளியில் இணைவது என்பது தவிர்க்கமுடியாததே. ஆற்றுகையாளர்கள் அனைவருமே அரங்கையும் பார்வையாளர்களையும் காண்பியங்களின் பொருள்கோடலிலும் உடலின் இயக்கத்திலும் கட்டிவைத்திருந்தார்கள். அந்த உடல்களின் இயக்கத்தை தனது ஆளுகைக்குள் வைத்திருந்த இசையமைப்பும் புத்தாக்க கூறாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. புனைவு யதார்த்தத்தின் ஒரு வடிவமாகவும் இந்நடனம் நோக்கப்படலாம். முகமூடியணிந்த மனித நடத்தையைச் சுட்டிச்சென்ற படிமம் ஆற்றுகையின் கனதியினை காட்டியது. உடல்கள், ஒலி, ஒளி, காட்சிப்பொருட்கள் எல்லாமே ஒரு தளத்தில் நின்று ஆற்றுகை முழுமைக்கு உதவின.



ஆற்றுகைகளைப் படைத்தல் என்பது ஒரு மனநிலைப்பாங்கு என்பதைச் சுட்டிச்சென்ற சமகால நடனங்களினை உள்வாங்கிய அரங்கவிழாவானது, கோட்பாடுகளின் வழி வரும் பரிசோதனை முயற்சிகள் அரங்குசார்ந்த கலைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாகுமேயொழிய, ஒருபொதுப் பார்வையாளனின் மனநிலையுடனும் அவனது அழகியல் அனுபவத்துடனும் இடைவெட்டாது. மக்கள் அரங்கு என்ற தெருவெளி நாடகமும் நகைச்சுவை நாடகங்களுமே என்றும் மக்களுக்குரிய பொது இரசனைக்கு விருந்தாகின்றன. அந்த வகையில் பிரநந்தன் அவர்களால் நெறியாள்க செய்யப்பட்டு கிளிநொச்சி கலைமகள் கலைக்கூட ஆற்றுகையாயர்களால் நிகழ்த்தப்பட்ட "மாயமான்" என்னும் தெருவெளி நாடகமும் ஹரன் அவர்களின் நெறியாள்கையில் ஹரன், வினோதன் ஆகியோரின் நடிப்பில் "நாய் கடிக்கும் கவனம்" என்னும் நகைச்சுவை நாடகமும் அரங்கவிழாவின் பொதுப் பார்வையாளர்களை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டன.

மாயமான் என்னும் தெருவெளி ஆற்றுகையில் அதன் தலைப்புசார்ந்து, 1980 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலாசாரக் குழுவினரால் ஈழத்து தெருக்களை நிரப்பிய "மாயமான்" ஆற்றுகை மீளவும் ஆற்றுகை செய்யப்படுகிறதோ என்ற குழப்பம் பார்வையாளரிகளிடத்தே நிலவியதைக் காணக் கூடியதாக இருந்தது. மக்களின் அன்றாட வாழ்வியலில் பல கவனக் கலைப்பான்களும் எவ்வாறு மனிதர் மனங்களில் 'மாயமான்களாகி' அவர்களது வாழ்க்கையினைக் கேள்விக்குறியாக்கி நிற்கின்றது என்பதை மையக்கருவாகக் கொண்டு, பல நிகழ்வுகளை ஒரு வெளியில் ஒருங்கிணைத்திருந்தமை சிறப்பானதாகும். அரங்கு மக்களுடன் நின்று மக்களின் பிரச்சினைகளைப் பேசும் இயல்பைக் கொண்டதாகும் நுண்கடன் முதல் வேலையில்லா பட்டதாரிகள், கேள்விகளுடன் தொக்கி நிற்கும் கல்வி முறைமை, இளைஞர்களின் பாதை மாறிய போக்குகள் என சமகாலத்தின் சிக்கல்களை முன்வைத்தது. நாடகத்தின் இசை பல்கலைக்கழக முன்றலில் எதிரொலித்த கனதி அளவுக்கு நடிகர்களின் நடிப்பு கனதியாக இருக்கவில்லை. நடிகர் குழாமின் தெரிவில் நெறியாளர் இன்னமும் கவனஞ்செலுத்தியிருந்தால் ஆற்றுகையின் காண்பிய நேர்த்தி போல ஆற்றுகையும் அமைந்திருக்கும். ஆயினும் பெரும்பாலும் பாடசாலை மாணவர்களை பார்வையாளர்களைக் கொண்டிருந்ததால், பொது மக்கள் அரங்கு என்ற வகையில் தன்னை சிறப்பித்துக்கொண்டது மாயமான்.

"சிரிச்சு சிரிச்சு செத்த" நாடக அனுபவத்தை பார்வையாளருக்கு கொடுத்த " நாய் கடிக்கும் கவனம்" கைலாசபதி கலையரங்கை முப்பரிமாணத்தில் கையாண்டது. பார்வையாளரின் வெற்றுக் கண்களுக்கு தெரியும் இருபரிமாணமும் அதன் பேசுபொருள் சார்ந்த மனப் பரிமாணத்தைத் தரும் மூன்றாவது பரிமாணமும் இணைந்துகொண்டது. வாழ்வியலின் யதார்த்தத்தினூடாக மிகவும் ஆழமான அரசியலை நகைச்சுவையினூடு நகர்த்திச் சென்றமை சிறப்பானதாக இருந்தது. எளிமை அரங்க கோட்பாடுகளை தனக்குள் உள்வாங்கிய வடிவமாகக் காணப்பட்டாலும், பேசுபொருள் சார்ந்து கனதியான விடயங்களைச் சொல்லிச் சென்றது. நடிகர்களின் உடல்மொழியும் மொழியின் விளையாட்டும் கணநேர விலகல் கூட இன்றி, சரியாகப் பொருந்தி நின்றதனால் சிரிப்பொலிகள் அரங்கினை நிறைத்தன. வாழ்க்கையின்சிக்கல்களை நேரடியாகவே மாயமான் கூற, வஞ்சப் புகழ்ச்சியில் சமகால வாழ்வியலை முன்வைத்துச் சென்றது அந்த இரட்டையர் அணி. நகைச்சுவை ஆற்றுகை என்பது அவ்வளவு இலகுவானதல்ல. உடலும் உடல்மொழியும் வாய்மொழியும் கணநேரம் விலகினாலும் நகைச்சுவை தோற்றுவிடும். இந்த இரட்டையர்களின் உடல்மொழிகளும் சமாந்தரத்தில் பயணிப்பதால் இன்னமும் பல நகைச்சுவை நாடகங்களை பொது அரங்குகளில் ஆற்றுகை செய்வார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

அரங்க ஆற்றுகைகளுக்கு உள்ளடக்க நிலை சார்ந்தும் வடிவ நிலை சார்ந்தும் தம்மை நிலை நிறுத்திக்கொள்ளவேண்டிய தேவை இருக்கின்றது. உள்ளடக்கம் சார்ந்து வாழ்வியலைப் பேசினாலும் அவற்றின் வடிவம் சார்ந்து, குறிப்பாக நவீன ஆற்றுகைகள் அரிஸ்ரோட்டலின் மும்மையை கட்டுடைக்கும் போது, அந்த ஆற்றுகைகள் கற்பித யதார்த்தத்திற்குள் உள்ளடங்கிவிடுகின்றன. ஆயினும் அரங்கு சார்ந்து இந்த கட்டுடைப்புக்கள் பரிசோதனைகளுக்கான தளங்களாகவே நோக்கப்படுகின்றன.

**( காட்சி தொடரும் )**



# மங்கலாகத் தெரியும் நாயகிகள் பிம்பத்தை உடைக்கிறாள் கோகிலா!

● முரளிதரன் காசிவிஸ்வநாதன்

அறம் படத்துக்குப் பிறகு நாயகன் இல்லாமல் நயன்தாராவை மட்டும் மையப்புள்ளியாக வைத்து உருவாகியிருக்கும் படம் 'கோலமாவு கோகிலா'. அறம் படத்தில் கதாநாயகி ஏற்றிருக்கும் ஆட்சியர் பாத்திரம் அவருக்கு ஒரு அதிகாரத்தைத் தருகிறது. ஆனால், இந்தப் படத்தில் எந்தப் பலமுமே இல்லாமல் வரும் நாயகி. நோயிலிருந்து தன் தாயைக் காப்பாற்ற முயல்கிறார். பலம்வாய்ந்த வில்லன்களை எதிர்கொள்கிறார். கொலை செய்கிறார். உண்மையில் இது நயன்தாராவுக்கு அடுத்த கட்டம். நயன்தாரா மட்டுமல்ல, படத்தில் வரும் பெண் பாத்திரங்கள் எல்லோருமே முக்கியமான முடிவுகளை எடுக்கிறார்கள். அந்த வகையில் இது ஒரு கவனிக்கத்தக்க படம்.

கீழ் மத்திய தரவர்க்கத்தைச் சேர்ந்த கோகிலாவின் அம்மாவுக்கு நுரையீரல் புற்றுநோய். தங்கை படித்துக்கொண்டிருக்கிறாள். தந்தையால் பெரிதாக சம்பாதிக்க முடியாது. இந்த நிலையில் யதேச்சையாக ஒரு போதைப் பொருள் கடத்தும் கும்பலின் அறிமுகம் ஏற்படுகிறது கோகிலாவுக்கு. தாயின் சிகிச்சைச் செலவுக்காக போதைப் பொருளைக் கடத்த ஆரம்பிக்கிறாள் கோகிலா.ஒரு கட்டத்தில் அதனால் பல பிரச்சினைகள் ஏற்பட, அதிலிருந்து தன் குடும்பத்தைக் காப்பாற்றித் தானும் எப்படி தப்புகிறாள் என்பதுதான் கதை. இதற்கு நடுவில் கோகிலாவின் வீட்டுக்கு எதிரில் கடை வைத்திருக்கும் யோகிபாபுவின் ஒருதலைக் காதலையும் சமாளித்தாக வேண்டும்.

ஒரு சாதாரண கடையில் வேலை பார்க்கும் கோகிலா தன் மேலாளரிடம் சம்பள உயர்வு கேட்கிறாள். மேலாளர், அதற்குத் தன்னை அரவணைத்துச் செல்ல வேண்டுமெனக் கூறப் பதிலுக்குக் கோகிலா கூறும் வசனம் அட்டகாசம். இப்படியாகப் பெரும் ஆரவாரத்துடன் தொடங்குகிறது படம்.போதைப் பொருள் கடத்தல் போன்ற ஒரு பாதாள உலகம் சம்பந்தப்பட்ட கதையின் மையப்புள்ளியாக ஒரு நாயகியை வைத்திருப்பதே இந்தப் படத்தின் முதல் வெற்றி. அதுவும் அந்த நாயகி நயன்தாராவாக இருக்கும்போது கேட்கவே வேண்டாம். தொடக்கக் காட்சியிலிருந்தே தூள் பரத்துகிறார்.

அப்பாவியைப் போல இருந்துகொண்டு மிகவும் அழுத்தமான வேலைகளைச் செய்யும் பாத்திரம். அதில் அப்படியே ஒன்றிப்போயிருக்கிறார் நயன்தாரா. ஆனால், பல காட்சிகளில் அவரது நடிப்பு 'நானும் ரவுடிதான்' படத்தை நினைவுபடுத்துகிறது. தவிர, படம் நெடுக முதுகில் பையும் ஒரே மாதிரியான உடையும் வருவது சலிப்பேற்படுத்துகிறது.

சூழலுக்கு ஏற்ப நடந்துகொண்டு தப்பிக்கும் நாயகி, விசித்திரமான பழக்கங்களைக் கொண்ட வில்லன்கள், உருப்படியில்லாமல் சொதப்பும் அடியாட்கள், சொதப்பும் காவல்துறை, சம்பந்தமில்லாத காரியங்களைச் செய்து சிக்கலில் மாட்டிக்கொள்ளும் நபர்கள் என ஒரு கொமெடி படத்துக்கான எல்லா அம்சங்களும் இந்தப் படத்தில் உண்டு. படத்தின் நாயகி நயன்தாராவை ஒருதலையாகக் காதலிக்கும் யோகிபாபு, நயன்தாராவுக்கு அடுத்தபடியாக படத்தின் பலமான அம்சம். நயன்தாராவுக்காகவே அவரது வீட்டுக்கு எதிரில் கடை வைத்திருப்பது, பிறகு அவருக்கு உதவப்போய் பெரிய சிக்கலில் மாட்டிக்கொள்வது என்று வெளுத்துக்கட்டுகிறார் மனிதர். அனிருத்தின் இசையில் 'கல்யாண வயசு' பாடல் மட்டுமல்ல, பின்னணி இசையும் ரசிக்கவைக்கிறது. நயன்தாராவின் ரசிகர்கள் மட்டுமல்ல, மற்றவர்களும் ரசிக்கக்கூடிய படம்தான்.



# விடை தேடும் 'ஏன்'

● யாமினி



'ஏன்' குறும்படம் யாழ். பல்கலைக் கழக நாடகக் கலைஞர்களினால் உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் யுத்த காலத்தில் இருந்த சமூக நிலையையும், மக்களின் விடை காணமுடியாத கேள்வியாகவும் இந்தக் குறுந்திரைப்படம் அமைந்துள்ளது. திரைக் கதையில் நிகழும் சம்பவங்களின் பின்னணியாக அரசியல் நிகழ்வே அமைகின்றது.

இங்கு ஓர் இளைஞன் தனியறையில் தங்குகின்றான். இரவு நெருங்க அவனைப் பயமும் நெருங்குகின்றது. அதனால் அவன் தனது துணையாக மதுவை அழைக்கின்றான். அருந்துகின்றான். அதுவும் அவன் அச்சம் தொலைக்கவில்லை. அவன் வீட்டுக் கதவுகள் உடைக்கப்படுகின்றன. அவனது வாழ்வின் பக்கங்களை அத்தோடு முடித்து விடுகின்றது அந்த இருள். அவன் மீண்டுவரவில்லை.

ஆனால் இந்தியத் தமிழ்ப் படங்களில் இவ்வகை அணுகலில் காணாமலாக்கப்படுவதில்லை. எத்தனை பயங்கர சூழலில் இருந்தும் தப்பிக்கச் செய்யும் சாகசம் அது. அது நம் சூழல்சார் பிரச்சினை ஒன்றின் மீதான அவர்களின் புரிதலாக அமைந்திருப்பதைக் காட்டுகின்றது. கதை அமைப்பில் ஈழம் சார்ந்த ஒரு படைப்பு இது எனலாம். தொழில்நுட்ப ரீதியான குறைகள் இருப்பினும் காலம் காட்டும் படம் என்ற வகையில் பாராட்டுக்குரியது.

சினித் துளி

# பாடல்களான வைரமுத்துவின் கவிதைகள்



மணிரத்னத்தின் இயக்கத்தில் உருவாகி வரும் 'செக்கச் சிவந்த வானம்' படத்தில் சிம்பு, விஜய் சேதுபதி, அரவிந்த் சாமி, அருண் விஜய், ஜோதிகா, ஐஸ்வர்யா ராஜேஷ், அதிதி ராவ் போன்றோர் நடிக்கிறார்கள். இந்தப் படத்துக்கு இசையமைக்கின்றார் ஏ.ஆர்.ரஹ்மான்.

செக்கச் சிவந்த வானம் படத்தில் கவிஞர் வைரமுத்துவின் 'பெய்யெனப் பெய்யும்மழை'கவிதைத்தொகுப்பிலிருந்து இரண்டு கவிதைகளை எடுத்து ஏ.ஆர். ரகுமானுக்குக் கொடுத்து இசையமைக்கச் செய்திருக்கிறார் இயக்குநர் மணிரத்னம்.

"நீல மலைச்சாரல் தென்றல் நெசவு நடத்துமிடம்...." எனத் தொடங்கும் கவிதையும், 'கண்ணில் ஒருதுளிநீர்..." என்ற மற்றுமொரு கவிதையுமே அனைவரையும் இசை மழையில் நனைக்க உள்ளன.



ந.பரமேஸ்வரன்
parames35@gmail.com




# யாழ்ப்பாணம்

## 1505–1948 வரையான வரலாற்றுத் தடங்கள் 8

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)

ஜோர்ஜ் டி மெல்லோ யாழ்ப்பாணம் வந்து காசிநைனாரை சிறையில் அடைத்துவிட்டு பெரிய பிள்ளையை அரசனாக்கினான். ஜோர்ஜ் டி மெல்லோ யாழ்ப்பாணத்தை விட்டு அகன்றதும் காசிநைனாரின் ஆதரவாளர்கள் காசிநைநாரை சிறையிலிருந்து மீட்டனர். காசிநைனார் பெரிய பிள்ளையை கொன்றுவிட்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினான்.

1582 இல் புவிராசபண்டாரம் என்ற பெயருடன் இன்னொரு அரசன் ஆட்சியைக் கைப்பற்றினான்.(முன்னைய புவிராசபண்டாரம் அல்ல) இவனும் மன்னாரை கைப்பற்றும் நோக்குடன் 75 மரக்கலங்களில் சென்று மன்னார் மீது போர் தெர்டுத்தான் இப்படையெடுப்பும் வெற்றி அளிக்கவில்லை.

1591ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3ஆம் திகதி மூசா மரிக்கார் என்ற முஸ்லீம் கடற் கொள்ளையனின் உதவியுடன் 12 ஆயிரம் பேர் கொண்ட படையுடன் சென்று மன்னார் மீது போர் தொடுத்தான். மூசாமரிக்காரின் 25 மரக்கலங்கள் உரிய நேரத்துக்கு வராமல் மணல்திட்டில் நங்கூரமிட்டிருந்தன. இதேவேளை கோவாவிலிருந்து உதவிக்கு வந்த போர்த்துகேய தளபதி மூசா மரிக்கார் மீது தாக்குதல் நடத்தினான். உரிய நேரத்தில் உதவி கிடைக்காமையால் இப்படை எடுப்பும் தோல்வியில் முடிவடைந்தது.

### போர்த்துகேயரின் 2வது படை எடுப்பு

1591 ஆம் ஆண்டு ஒக்டோபர் 26 ஆம் திகதி Andre de Furtado de Mondoza என்ற கீழத்தேயத்திற்கு பொறுப்பான பறங்கிய தளபதி 1400 போர்த்துகேய வீரர்களும் விக்கிரமசிங்கமுதலி என்ற சிங்கள தளபதியின் கீழ் மூவாயிரம் சிங்கள வீரர்களையும் கொண்ட (சிங்கள வீரர்களின் எண்ணிக்கை 500 என சில நூல்களில் உள்ளது.) படையுடன் 43 மரக்கலங்களிலும் 250 வள்ளங்களிலும் யாழ்ப்பாணத்தை நோக்கி படை எடுத்தான்.

புவிராசபண்டாரத்தின் படைகள் அரியாலையில் காத்து நிற்க பறங்கி படைகள் கொழும்புத்துறையில் தரையிறங்க முயற்சித்தன. கொழும்புத்துறையில் யாழ்ப்பாண படைகளுக்கும் பறங்கி படைகளுக்கு மிடையே கடும்போர் மூண்டது.இப்போரில் 250 யாழ்ப்பாண வீரர்கள் மாண்டனர்.

கொழும்புத்துறையில் தரையிறங்கிய பறங்கி படைகள் சென் டொமினிக் (St.dominic) என்ற கன்னியாஸ்திரி மடத்தின் அருகில் இரவு தங்கியதுடன் பண்ணையில் இருந்த முஸ்லீம்களின் களஞ்சியத்திலிருந்த நெல்லையும் சூறையாடின.

ஒக்ரோபர் 28ஆம் திகதி பாதிரிமாரின் ஆசியுடன் பறங்கி படை நல்லூரை நோக்கி முன்னேறியது. இந்த படை எடுப்பு இடம்பெற்ற காலத்தில் அத்தபத்து என்ற சிங்கள தளபதியே யாழ்ப் பாண அரசனின் மெய் பாதுகாவலனாக விளங்கினான். அத்தபத்துவின் படையும் விக்கிரமசிங்க முதலியின் படையும் வீரமாகாளியம்மன் கோவிலுக்கும் நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் மோதிக் கொண்டன. (தற்போது நல்லூர் கந்தசாமி கோவில் அமைந்துள்ள பிரதேசமாக இருக்கலாம்.)



**சமர் தொடரும்**

# நஞ்சற்ற நாளைக்காக 3

தமிழில் :- புனிதா ராஜேந்திரன்
(ஆலோசகர்– மொழிபெயர்ப்பாளர்
மூலோபாய தொழில்முயற்சி முகாமைத்துவ நிறுவனம் (SEMA)
ஜனாதிபதி செயலகம்)



அந்த உரத்தை நிலத்தில் இடுவதனால் நிலம் சீரழிந்து போகுமென 3000 ஆண்டுகால பாரம்பரிய விவசாய அனுபவத்தைக் கொண்டு விவசாயிகள் புரிந்த கொண்டனர்.

இந்த நாட்டு மண்ணில் பிறந்து வளர்ந்த விவசாயிகளுக்கு அந்த மோப்ப சக்தி இருந்தது. இயற்கையான ஜீரண முறைகளை நன்றாக தெரிந்து வைத்திருந்த விவசாயிகள் தாம் பாவித்துவந்த கடினமான, நாற்றமெடுக்கும் உரத்தை வெறுக்கவில்லை. அவர்கள் தமது பாய்களை விரித்து உறங்கும் வீட்டு நிலத்திலும், தமது சுளகுகளில் உட்புறம் பூசிய சாணத்தையம் வெறுத்து ஒதுக்கவில்லை. சாணத்தின் நாற்றத்தை சுகந்தமாகவும், பழங்கள் கனியும் போது எழும் வாசனை காட்டில் விலங்கொன்று இறந்து அழுகும் போது ஏற்படும் துர்நாற்றம் மற்றும் விலங்கு கழிவுகளாலிருந்து எழும் துர்வாடையும் உக்கிப் போகும் செயற்பாடே எனவும், அவை சமிபாடடைந்து மண்ணுடன் கலந்து விடும் எனவும் தெரிந்துவைத்திருந்த அவர்கள் அவை நிலத்தில் மண்ணாக மாறியவுடன் அது இயல்பான விடயமாகி விடும் எனவும் இனங்கண்டிருந்தார்கள். அவற்றை அசுத்தம் என ஒதுக்காமல் இரசாயனத்தையே அசுத்தம் என ஒதுக்கும் அறிவை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

### இயற்கையான சமிபாட்டு செயற்பாட்டை இனங்காண்போம்

இயற்கைவழி விவசாயம் என்பது மரப்பட்டை, வேர் தண்டு, காய், பழம் தாவர பாகங்கள் நிலத்தில் வீழ்ந்து சமிபாட்டு செயற்பாட்டுக்கு உட்பட்டு பிறிதொரு தாவரத்துக்கு போசாக்கு பதார்த்தமாக உறிஞ்சப்படுதலாகும். அந்த அகத்துறிஞ்சல் செயற்பாட்டுக்கு எவ்வளவு காலம் எடுக்கம் என்பதும் அதனை எவ்வாறு விரைவுபடுத்தலாம் என்பதனையும் புரிந்து கொள்ளுதலே இயற்கைவழி விவசாயத்தில் மிக முக்கியமானதாகும். இழையத்தன்மை கூடுதலான தாவரம், பழம் அல்லது நன்றாக கனிந்த பழமாயின் அந்த செயற்பாட்டுக்கு ஒரு மாதமோ, இரண்டு மாதமோ செல்லலாம். செலுலோஸ் கூடுதலாக இருந்தால், தும்புத்தன்மை கூடுதலாக இருந்தால் அத்துடன் சூழல் வெப்பநிலை தொடர்பான பிரச்சினை இருக்குமாயின் அந்த செயற்பாட்டுக்கு ஏழு, எட்டு மாதங்களும் செல்லலாம். அத்துடன் சமிபாடடடையும் பொருள் என்ன, அது எவ்வாறான சூழலில் உக்கிப்போகிறது என்பதும் இந்த செயற்பாட்டை இரண்டு மூன்று மாதங்களிலிருந்து முன்னூறு ஆண்டுகள் வரைகூட செல்ல காரணமாக அமையலாம். அதற்கான மிகச் சிறந்த உதாரணமானது தரையில் வீழ்ந்து முன்னூறு ஆண்டுகள் கடந்தும் உக்கலடையும் செயற்பாடு நிறைவடையாத சிங்கராஜ வனத்திலுள்ள வீழ்ந்து கிடக்கும் மரங்களைக் குறிப்பிடலாம்.

அதற்கமைய இயற்கைவழி விவசாயத்தின் போது இவ்வாறான நீண்ட காலமெடுக்கும் உக்கலடையும் செயற்பாடுகளுடன் செயற்படுவது மிகவும் சிரமான விடயமாகும் என்பதனால் உக்கலடையும் செயற்பாடு விரைவாக நிறைவடையும் முறைமை மற்றும் காலவரையறை தேவையானதாகும். உதாரணமாக பல ஆண்டுகள் செல்லும் இந்த உக்கலடையும் செயற்பாடுகள் உயிரொன்றின் உணவு சமிபாட்டு கட்டமைப்பாகவும், கழிவு முகாமைத்துவக் கட்டமைப்பாகவும் சுற்றாடலுடன் இணைந்து செயற்படுகிறது. அதற்கமைய அந்த இழைய உயிரினம் தொடக்கம் அனைத்து உயிரினங்களும் தாவர வேர் கட்டமைப்பை போசாக்குச் செயற்பாட்டுக்காக பெரும் பணியை ஆற்றுவதாகவும், அவற்றினால் மரத்துக்கு கிடைக்கும் போசணைப்பதார்த்தம் சில மணி நேரங்களிலோ சில நாட்களிலோ மீண்டும் மரத்தினால் உறிஞ்சப்படும் என்பதனையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த சமிபாட்டு செயற்பாட்டில் பாரிய இயற்கையான செயற்பாடு இடம்பெறுவதுடன் உயிரியல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளுக்குமிடையில் அற்புதமான இடைத் தொடர்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக சிங்கராஜ வனத்தில் பாரிய விருட்சங்கள் இருக்கும் அதேவேளை அவற்றுக்கு நடுவேயுள்ள 10 அடி இடைவெளியில் பழமரங்களும் காணப்படுகின்றன. அந்த பழமரங்களும், பழங்களும் நிலத்தில் வீழ்வதுடன், அவை விரைவாக மண்ணுடன் சமிபாடடைந்து விடுகின்றன. மறுபுறமாக அந்த பழங்களை உண்பதற்காக ஏனைய பகுதிகளிலிருந்தும் வரும் பல்வேறு உயிரினங்கள் அங்கே விட்டுச்செல்லும் கழிவுகளால் அந்த மரங்களுக்கு தேவையான உடனடியான போசாக்கு பதார்த்தங்கள் கிடைக்கின்றன. அதன் மூலம் நீண்டகால அடிப்படையிலான சமிபாட்டு செயற்பாட்டின் ஊடாக செலுலோசுடன் கூடிய லிக்னின் எனும் இரசாயனத்துடனான இழைய வகைகளை ஜீரணித்து மரத்துக்காக உறிஞ்சக்கூடிய முறைமை உருவாவதுடன் அந்த நேரத்திலேயே மரத்துக்கு தேவையான சமிபாட்டு தேவைகளுக்கான என்சைம் மற்றும் ஜீரணிக்கப்பட்ட போசாக்கு பதார்த்தம் வழங்கப்படுகிறது.

பெருங்காட்டினுள் இடம்பெறும் இந்த. ஜீரண செயற்பாட்டின்போது கண்ணுக்கு தெரியாத பில்லியன் கணக்கான உயிரினங்கள் இருக்கலாம் என்பதுடன் கண்களால் காணக்கூடிய ஊர்வன, பறப்பன மற்றும் விலங்குகள் போன்ற உயிரினங்களையும் காணமுடியும். எந்த முறையிலாக இருந்தாலும் ஜீரண செயற்பாட்டின் பெறுபேறாக மரத்துக்கு உடனடியாக தேவையான போசணைப் பதார்த்தங்கள் கிடைப்பதுடன், அவை அந்த நேரத்திலேயே தாவரத்துக்கு கிடைக்கின்றன என்பதனையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் படிப்படியாக பெற்றுக்கொள்ளக்கூடிய போசணை பதார்த்தங்களும் அந்த மரத்தினால் அகத்துறிஞ்சப்படுகின்றன. காட்டில் நிலவும் ஈரலிப்பில் கனிந்த பழங்கள், விலங்கு கழிவுகள், தாவர பகுதிகள் நிலத்தில் வீழ்வதகால் ஏற்படும் மிகவும் நுட்பமான சிக்கலான செயற்பாடுகளை உரியவாறு புரிந்து கொள்வது இன்றும் எமக்கு சவாலாகவே உள்ளது. **(தொடரும்)**

# அன்புக்குரியவர்களே!
## உங்களுடன் ஒரு நிமிடம்...





சர்வதேச கிருஷ்ண பக்திக்கழகத்தால் கொழும்பு கொட்டாஞ்சேனையில் பகவான் கிருஷ்ணருக்கு ஆலயம் அமைக்கப்படுவது பற்றி அறிந்திருப்பீர்கள். எத்தனையோ ஆலயங்கள் இருக்கும்போது புதிதாக இன்னொரு ஆலயம் எதற்கு என்னும் எண்ணம் உங்கள் மனதில் எழலாம். கிருஷ்ண பக்திக்கழகத்தின் ஸ்தாபகரும் எங்கள் ஆன்மீகக் குருவுமான பத்தி வேதாந்த சுவாமி பிரபுபாதாவின் நோக்கம் மக்கள் மத்தியில் வேத கலாசாரத்தை மீண்டும் தோற்றுவிப்பதும் அமைதி, சமாதானம், மகிழ்ச்சி, செல்வச்செழிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதும்தான். ஆலயம் அமைப்பதால் இந்நோக்கம் எவ்வாறு நிறைவேறும் என்று நினைக்கலாம். ஆலயங்கள்தான் மக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டிகளாக இருந்துள்ளன.

ஆன்மிகக் கல்வி, கலை, கலாசாரம் என்பன ஆலயங்கள் மூலமே வளர்க்கப்பட்டன. அந்த நிலைமையை மீண்டும் தோற்றுவிக்கும் வகையில்தான் கிருஷ்ண பக்திக்கழகத்தால் உலகெங்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதே நோக்கத்தில்தான் பகவான் கிருஷ்ணருக்கான இந்த ஆலயம் பக்தி மயமாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலயம் தற்போது பூரணத்துவ நிலையை அடைந்துகொண்டிருக்கிறது. இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஸ்தபதியும் கட்டடக் கலைஞர்களும் ஆலயத்தை விரைவாகக் கட்டி முடிக்கும் வகையில் மும்முரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இந்த ஆலயம் அமைக்கும் திருப்பணிக்கு பங்களிப்பு நல்க விரும்புபவர்கள் விரைந்து செயற்பட்டு தம் பங்களிப்பை நல்குமாறு அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். ஆலய வரலாற்றில் உங்கள் பெயர் பதிக்கப்படுவதோடு, அது என்றென்றும் உங்களுக்கும், உங்கள் அன்புக்குரியவர்களுக்கும், உங்கள் பரம்பரையினருக்கும் ஆசி வழங்கிக்கொண்டிருக்கும். ஆலயம் அமைப்பது, அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவது என்பனவற்றுக்கு எண்ணற்ற பலன்கள் கிட்டும் இதுபற்றி ஸ்கந்தபுராணம், அக்கினிபுராணம் என்பவற்றில் காணக்கிடைக்கின்றன.

### ஆலயத் திருப்பணிக்கு ஒத்துழைப்பு நல்க விரைந்து முன்வாருங்கள்

அருகிலுள்ள கூப்பனை நிரப்பி, கத்தரித்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அல்லது நிதியுடன் நேரில் கையளித்து ரசீது பெற்றுக்கொள்ளுங்கள். நிதியை காசோலையாக, போஸ்ரல், மணி ஓடராக Iskcon temple fund என்று குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

**ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயக் கட்டட நன்கொடை**

பெயர்.........................................

தொழில்.........................................

முகவரி.........................................

நிதி விவரம்.........................................

.................. ..................

திகதி கையொப்பம்

ஆலயத் தலைவர், ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம், இல.188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு - 13
Phone : 077 228 8166. E-Mail: iskcon@slt.lk - www.iskcon.lk

**The Temple President, Sri Sri Radha Krishna Temple**
**188, New Chetty Street, Colombo - 13 Tel : 0112433325**

நிதியை வைப்பிலிட விரும்புபவர்கள்
பின்வரும் வங்கிக் கணக்கு ஒன்றில் வைப்பிலிடலாம்.

COMMERCIAL BANK, KOTAHENA BRANCH
A/C Name : ISKCON, Temple Fund, A/C No: 1120017042
HATTON NATIONAL BANK - JAMPETTAH BRANCH
A/C Name: ISKCON, A/C No: 207010000891



தன்னை அர்ப்பணித்து
இல்லத்தினை இன்பமாக்கும் அவள்
தன் உறவுகளை மகிழ்விக்கும் அவள்
நாட்டிற்கும் சேவையாற்றும் அவள்

## யாழ் மண்ணில்....
அவளிற்காய் ஓர் நாள்.....

# "அவள்"

பெண்கள் தொடர்பான சகலவிதமான
விடயங்களையும் உள்ளடக்கிய ஓர் செயலமர்வு

இடம் : யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபம்
காலம் : 22.09.2018
நேரம் : காலை 9.00 மணி முதல் 4.00 மணி வரை

இதில் தங்கள் பங்களிப்பினை நல்க விரும்பும்
அனைத்துப் பெண்களும் தொடர்பு கொள்ளவும்.

**072 3117994 priya**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மட்டுமே
அனுமதி இலவசம்......

உங்கள் விற்பனை கூடத்தை
முன்பதிவு செய்ய அழையுங்கள்
**076 711 2932**

அச்சு ஊடக அனுசரணை
எதிரொலி Ethiroli



எதிரொலியின் ஓராண்டு நிறைவையொட்டி அகில இலங்கை ரீதியில்
பாடசாலை அணிகளுக்கு இடையிலான

# 'எதிரொலியின் சொற்கணை-2018'
# மாபெரும் விவாதப் போட்டி

## தொடுங்கள் சொற்கணையை! வெல்லுங்கள் பரிசுகளை!!!



விண்ணப்ப முடிவுத் திகதி:
**15-09-2018**

முதற் பரிசு
**1,00,000/=**

### போட்டியில் பங்கு கொள்ள என்ன நிபந்தனைகள்?

- இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளும் இதில் பங்கு கொள்ளலாம்.
- ஒரு பாடசாலையில் இருந்து ஓர் அணி மாத்திரமே பங்கு கொள்ளலாம்.
- ஓர் அணியில் மூவர் மட்டுமே விவாதிக்க முடியும். இருவர் மேலதிகமாக அணிக்குள் உள்ளடக்கப்படலாம்
- அணிப்பட்டியலில் உள்ளவர்கள் மாத்திரமே போட்டியில் பங்கேற்க முடியும்
- அணி விபரம் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்படல் வேண்டும்
- போட்டிகள் யாவும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும்.
- விவாதத் தலைப்புகள் போட்டி இடம்பெறுவதற்கு முன்னதாக, போட்டி நடைபெறுமிடத்தில் வைத்தே வழங்கப்படும்.
- பங்குகொள்ளும் சகலருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- முதல் மூன்று இடங்களைப் பெறும் அணியினருக்கு பதக்கங்களும், பணப்பரிசில்களும்.
- விண்ணப்பங்களை தபாலிலோ, நேரிலோ கையளிக்கலாம்.

மேலதிக தகவலுக்கும்
தொடர்புக்கும்

**'எதிரொலியின் சொற்கணை-2018'**
அம்பலம் பதிப்பகம், இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி, உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 29.08.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.